# தேர்ந்த கட்டுரைக

10-07-1992

2193

98816

★★★★★★★★★★★★

வெளியீடு - 11




JPL
C2193

தமி
விரு
பு
வெ
வ
தமி
01-07

# தேர்ந்த கட்டுரைகள்

KOHA JPL
பொதுசன நூலகம்
உடனுதவும்
10 -07-1992
பகுதி
யாழ்ப்பாணம்

○

★★★★★★★★★★★★

## வெளியீடு - 11

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
86816
2193C.C

○

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

**வெளியீட்டு வாரியம்**

**தமிழீழம்**

***01-07-92***

2193C.C
86816C.C

320.512/R

# பொருளடக்கம்


| உள்ளே ..... | | பக்கம் |
|---|---|---|
| 1. இறந்தோரை மறப்பது | — | 1— 5 |
| 2. தொடர்ந்தும் கிழக்கு ஓர் பிரச்சினையாக இருக்கிறது | — | 6— 10 |
| 3. ஜேம்ஸ்டெயிலர் அறிமுகப்படுத்திய பச்சைத் தங்கம் | — | 11— 12 |
| 4. சர்வோதயவின் பல இலட்சங்கள் எங்கு சென்றன? | — | 13— 20 |
| 5. எழுச்சிபெறும் கென்யா | — | 21— 29 |
| 6. பெருமளவில் குருதி சிந்த நேரிடும் | — | 30— 33 |
| 7. ராஜீவ் இறந்த இடம் கோயிலுக்குச் சொந்தமானது | — | 34— 35 |
| 8. தமிழா தூங்கு! | — | 36— 44 |
| 9. பார்வதிக் கிராமமே இன்று 'பதவியா' ஆகியது | — | 45— 49 |
| 10. கொலை செய்வதற்கென ஏற்படுத்தப்பட்ட கும்பல் | — | 50— 54 |
| 11. சண்டை நடைபெறும் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படும் படையினர் சிகிச்சை அளிக்கப்படாது திருப்பி அனுப்பப்படுகின்றார்கள் | — | 55— 62 |
| 12. பிடி நழுவவிடப்படுகிறது | — | 63— 70 |
| 13. ஏன் இது ஓர் அறிவுப்பிறழ்ச்சி அல்ல, கறுப்பினத்தவருக்கெதிரான அமெரிக்காவின் சரித்திரத்தில் போடப்பட்ட திட்டங்கள் | — | 71— 75 |

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA JPL

14. பப்பாளிப் பழம் — 76— 77

15. அண்டத்தின் தோற்றம் பாரிய வெடி
விபத்தினால் ஏற்பட்டது என்ற கோட்
பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது — 78— 79

16. அவுஸ்திரேலியாவில்
இலங்கையின் களியாட்ட விழா — 80— 81

17. ஆப்கானிஸ்தான் ஆபத்தான மாற்றம் 82— 89

18. புலிகளைத் தடை செய்வதில்
இந்தியாவின் விருப்பத்தேர்வுகள் — 90— 93

19. புலிகள் மீது தடையும்
தமிழ்நாடு அரசியலும் — 94— 97

20. புலிகளின் இரண்டும் கெட்ட நிலை — 98—101

21. புலிகளை இந்தியர்களால்
அழிக்க முடியுமா? — 102—108

22. லிபியாவின் முறை கதாபியை
நேர்காணல் — 109—121

23. ஒரு பாரிய பொருளாதாரப் பேரரசாக
விளங்கும் ஆற்றல் மிக்க சீனா — 122—126

24. விடுதலைப் புலிகள்
இலங்கைத் தமிழர், இந்தியா — 127—133

25. யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதல்
எந்நேரமும் நடக்கலாம் — 134—137

— ★ —

# தோழர்களுக்கு ...

தேர்ந்த கட்டுரைகளின் வரிசையில் இது 11வது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல் வேறுபட்ட எண்ணங்களைச் சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டி யது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக்கட்டுரைகளில் உள்ள தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்வது குறித்த சில கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்தக் காலகட்டத்தில் இந்தியாவும், சிறிலங் காவும் எடுத்திருந்த நிலைப்பாடுகளை இக்கட்டுரைகள் ஓரளவு தெளிவாக்கும்

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் மேலும் ஊக்குவிக்கும்.

# இறந்தோரை மறப்பது

அனுரத்த திலகசிறி (சண்டே ஒப்சேவர், - 12.4.92).

குருநாகலில் உள்ள மகாவவில் வாழ்ந்த இராணுவ மேலாளர் ஒருவரின் வீட்டை ஒரு கொலைக்கும்பல் 1988 இன் இருண்ட நாட்களின் போது தாக்கி அவரின் மனைவியையும் பிள்ளைகளையும் கொலை செய்தார்கள். அதனுடன் திருப்தி அடையாத கொலைஞர்கள் இறந்த நாலுவயதுப் பிள்ளையின் மூளையை பிரித்தெடுத்து மேசை மேல் வைத்தார்கள். பொல்காவலையில் இன்னொரு இராணுவ மேலாளரின் ஆறுமாதப் பெண் குழந்தை கிணற்றில் வீசப்பட்டது. 'ஊரடங்கு' ச் சட்டத்தை மீறிக்கடமைக்குச் சென்ற அரசாங்க ஊழியர் கண்டியில் கொலை செய்யப்பட்டு அவரின் தலை அவரது மனைவியின் சாப்பாட்டுக் கோப்பையில் வைக்கப்பட்டது. விவரண 1992 (ஏப்ரல்-பக்கம் 24) ஆனால் இவ்விதம் கொடூரமாக கொலை செய்யப்பட்ட ஆண், பெண் குழந்தைகளின் உறவினர்கள் எவரும் பாதயாத்திரையில் கலந்து கொள்ளவில்லை. அமைப்பாளாகள் அவர்கள் பங்குபற்ற ஒப்புதல் தந்திருக்க மாட்டார்கள். இக்கொலைகள் எல்லாம் ஜே வி.பி.யினரால் செய்யப்பட்டமையால் பாதயாத்திரை ஜே.வி.பி சார்ந்த பாதயாத்திரையாகவும், ஜே.வி.பி யினரை கொலை செய்தவர்களுக்கு எதிரான தாகவும் அவ் யாத்திரை இருந்தபடியால் ஜே.வி.பி யினரால் கொலைசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானோரின்குடும்பத்தினர் அதில்பங்குகொள்ள முடியவில்லை.(பி.எவ்.எச். சந்திரிக்கா செய்தது போல் தமது உறவினரைக் கொலை செய்தவர்களுடன் அவர்களும் சேர்ந்தால் ஒழிய ) அப்படிப்பட்ட குடும்பங்கள் பாத யாத்திரையில் சேர்ந்து கதிர்காமக் கடவுளிடம் நீதிக்காக பிரார்த்திக்க விளைந்திருந்தால் அவர்களுக்கு திரு. சேனவிதனாகமவென்ற ஏ.எப்.பி.நிருபருக்கு ( பாதயாத்திரிகர்கள் சிலர் சாராயப் போத்தல்களுடன் சென்றதைப் படம்பிடித்தார் என்று சந்தேகிக்கப்பட்டு ] '' கிடைத்த '' மரியாதைதான் கிடைத்திருக்கும் அல்லது அதைவிட மோசமாகவும் கிடைத்திருக்கலாம்.

பிரேமதாசா சார்பற்ற ஆனால் அதே வேளையில் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கும் சஞ்சிகையான விவரணையின் அதே இதழில் ஜே.வி.பி.யினர் அத் தீவிர பிற்போக்குவாதிகளையும் நிலப்பிரபுத்துவ அரசியல் கட்சிகளையும் நட்புச் சக்திகளாகக் கணித்தனர். அதே நேரத்தில் )னது கொலை நடை

86816

முறைகளில் ஏனைய இடதுசாரிகளை இலக்காக்கினர் எதிரிக ளுடனான முரண்பாடுகளைத் தீர்க்க கடூரமான ஈவிரக்கமற்ற முறைகளை நடைமுறைப்படுத்தினர்.

ஜே.வி பி யினரின் முதல் இலக்கு சுதந்திர மாணவர்கள் சங்கத்தலைவர் தயா பத்திரனவாக இருந்தது. அவர் பல்வேறு மக்கள் போராட்டங்களில் தீவிர பங்கெடுத்தவர். தனியார் மருத் துவக்கல்லூரி, கல்வி வெள்ளை அறிக்கைக்கு எதிரான மாணவ போராட்டங்களின் தலைவரான அவர் அரசாங்கத்தினால் மிகவும் வெறுக்கப்பட்டார். அடுத்து ஜே.வி.பியை சிறைச்சாலைக்குள் ளேயும் வெளியேயும் மறுசீரமைக்கப்பாடுபட்ட நந்தன மாறசிங்க கொலைசெய்யப்பட்டார்.

வெல்லசவில் உள்ள விவசாயிகளை அடிமையாக்க முற்பட்ட பல்தேசிய நிறுவனங்களின் எத்தனிப்புகளுக்கு எதிராக மிக் பொறுப்புணர்ச்சியுடன் பாடுபட்ட தோழர் இற-சிறி மகிந்தபாகு வையும் ஜே.வி.பி.யினர் கொலை செய்தனர். குருநாகல் மாவட்ட விவசாயத் தலைவர்களான ரி.பி.விஜயசூரியவும் ஜேம்ஸ் அத்து கலவும் கூட ஜே.வி.பி.யினால் கொலையுண்டனர். அவர்கள் இருவரும் 1971 ஏப்ரல் கிளர்ச்சிகளில் பங்கு பற்றி சிறையிலி ருந்து பின்னர் வெளிவந்த நாளிலிருந்து விவசாய இயக்கத்தை முன்னெடுக்க உழைத்தவர்கள். அன்றைய அரசாங்கத்திற்கு அவர் கள் எதிராளிகளாக இருந்து பல தடவைகள் தாக்குதல்களுக்கும் சிறையிடுதலுக்கும் உள்ளானார்கள். ஜேவிபி.யினர் விஜயகு மாரதுங்கா போன்ற தலைவர்களையும் கொன்றார்கள் இவர் போன்றோர் அரசாங்கத்திற்கு எதிராக ஓர் இடதுசாரி அணியை உருவாக்க முற்பட்டமையால் யூ.என்.பிக்கும்,எஸ்.எல்.எப்பிக்கும் சிக்கல்களை உருவாக்கினார்கள். தொழிலாள வர்க்கத்தலைவர் கள். எல்.டபிள்யூ. பண்டித போன்றவர்களும் ஜே.வி.பி.யினரால் படுகொலை செய்யப்பட்டனர். " விவரண தொகுதி 6,இல.4,பக் கம் 23,24.

## மிலேச்சர்களை தூய்மைப்படுத்தல்

ஜே.வி.பியினரின் பயங்கர ஆட்சியையும் நிரபராதிகளான பொது மக்கள் மீது அவர்கள் மனிதாபிமான மற்ற முறையில் கொடூரங்கள் விளைவித்ததையும் நன்குஞாபகத்தில் வைத்திருக்கும் பெரும்பான்மையான மக்கள் நாங்கள் இந்தக் கட்டுரையில்திரும் பத் திரும்ப நன்கு தெரிந்த உண்மைகளை எடுத்துக் கூறுகின்றோம் என்று வியப்பார்கள் விவரணவின் கடைசி இதழிழிலிருந்து நாங் கள் ஏன் எடுத்துக் காட்டுகிறோம் என்றால் ஜே. வி. பி. யினர்

பெரும் எண்ணிக்கையான இடதுசாரித் தலைவர்களையும், செயற்பாட்டாளர்களையும் சம்பந்தப்படாத பெருந்தொகை நிரபராதி மக்களையும் கொலை செய்தனர் என்று எதிர்க்கட்சியினருக்கு ஞாபகப்படுத்துவதற்காகவேயாகும். இது எமது கற்பனை இல்லை. அல்லது நாங்கள் "தேசப்பிரேமிகளான சிங்களப் பையன்களின்" தூயநோக்கம் கொண்ட புகழைக் கறைப்படுத்துவதற்காகவும் அவ்விதம் செய்யவில்லை. நாங்கள் இவ்வுண்மைகளைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறுவது ஏனெனில் எமது இடதுசாரியினர் என்று கூறப்படுவோர் செயலுரிமையை கைப்பற்றும் ஒரே நோக்கினால் உண்மையை முழுவதுமாகத் தட்டிக்கழிப்பதனாலும், அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசா மீது கொண்டிருக்கும் கடுமையான வெறுப்பினாலும் ஜே. வி. பி. யினர் தமது ஆயிரக்கணக்கான தோழர்களை கொடூரமாக வெட்டிக் கொலை செய்தமையை மறப்பதற்குத் தீர்மானித்துவிட்டதை எடுத்துக்காட்டுவதற்கேயாகும். பாதயாத்திரையில் தயா பத்திரானாவினதோ நந்தன மாறசிங்காவினதோ நிழற்படங்கள் இருக்கவில்லை. நவசமசமாசக்கட்சியினர் ஜே.வி.பியினால் கொலை செய்யப்பட்ட மகிந்தபாகு ஆனந்த நவரட்ணா போன்றவர்களினதும் கட்சியின் அவ்விதம் கொலை செய்யப்பட்ட மற்றும் உறுப்பினர்களின் படங்களை கொண்டு செல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியினரும் இந்தப் பாதயாத்திரையில் ஜோர்ஜ்ரட்னாயக்கா எல். டபிள்யூ பண்டித அல்லது சத்திச (அல்லது ஜே.வி.பியால் கொல்லப்பட்ட ஏனையோரது) போன்றோரின் படங்களைக் கொண்டு செல்லவில்லை.

லங்கா சமசமாசக்கட்சியினர் கூட கட்சியின் ஸ்ரார் அச்சகவளவில் கொலை செய்யப்பட்ட தோழர் விமலசேனாவின் படத்தைக் கொண்டு செல்லவில்லை. ஜே வி.பி யினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விஜயவினதும் மக்கள் கட்சியின் ஏனைய 117 உறுப்பினர்களினது படங்களும், மக்கள் கட்சியின் முன்னாள் வை.பி.டி.சில்வாவும் அவரது சகாக்களும் பல தடவைகளில் பாதயாத்திரையில் கலந்துகொண்ட போதும் எங்காவது தென்படவில்லை. விஜயாவுக்கு எதிரான எண்ணங்களையும் நடவடிக்கைகளையும் நெடுநாட்களாக பி.எவ். எச்.சந்திரிக்கா கொண்டிருப்பது எல்லோருக்கும் இப்போது தெரியுமாகையால் அவர் விஜயவின் படத்தை எடுத்துச் செல்வார் என்றோ அல்லது பாதயாத்திரையில் நெடுந்தூரம் நடந்து செல்வார் என்றோ யாரும் எதிர்பார்க்கவில்லை. ஜே வி. பியால் கொலைசெய்யப்பட்ட தம்மவர்களை 'இடதுசாரிகள் கூட்டாகமறந்துவிட்டார்கள் போல் தோன்றுகிறது. செயலுரிமையை கைப்பற்றுவதிலும் பணத்தைச் சேர்ப்ப

திலும் இடதுசாரிகள் முற்போக்குவாதிகள் என்று கூறிக்கொள்ளுவோர். எவ்வளவுதூரம் கீழ் இறங்குவார்கள் என்பது அளவிடமுடியாது. இரு ஆண்டுகளுக்கு முன்னால் தமது தோழர்களையும் சகாக்களையும் கொரேமாகக் கொலை செய்த காட்டுமிராண்டிக்கும்பலை இவர்கள் மேன்மைப்படுத்துவது பெரியவிடயமல்ல. இந்த எதிர்க்கட்சிகள் (குறிப்பாக இடதுசாரிகள் முற்போக்குவாதிகள் எனத்தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் பிரிவு) யூலை வேலை நிறுத்தக்காரரைக் கனத்தைக்கு அனுப்புவேன் என பயமுறுத்தியும் இப்போதும் எழுத்துக்களில், 1980 ல் ஈவிரக்கமற்ற முறையில் தொழிலாளவர்க்க இயக்கத்தை முறியடித்த 77 களின் பிற்பட்ட ஜயவர்த்தனா அரசாங்கத்தை ஆதரிப்பவருமான திரு.லலித் அத்துலத்முதலியை ஓர் ஜனநாயகவாதி எனக்கணித்து அவருடன் சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாட விருப்பம் தெரிவிக்கிறார்கள். எவ்விலையைக் கொடுத்தேனும் செயலுரிமையைத் தமக்கெனத் தேடுவதற்கு அவர்கள் எதையும் செய்வார்கள்.

இதே நேரத்தில் பாதயாத்திரை, தீர்த்துவைத்ரவைகளிலும் பார்க்க கூடிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது போல் தோன்றுகிறது. கடந்த ஞாயிறு திவயினப்பத்திரிகை பாதயாத்திரையை முழுமையாக இருட்டடிப்புச் செய்துவிட்டு பாரதத்திலிருந்து குழுமையுடன் திரும்பியிருக்கும் மூத்த தலைவியுடனான ஓர் செவ்வியை பிரசுரித்திருந்தது. மூத்த தலைவியும் பாத யாத்திரை பற்றி ஒன்றும் கூறவில்லை. அவர் வேவுகாரர்கள், அழிவுகாரர்கள், சதிகாரர்கள் (அதாவது கட்சி விரோதசக்திகள்) என்று கட்சியை உள்ளிருந்தே அழிக்க முற்படுபவர்களைப் பற்றியே பேசினார். இதன் அர்த்தம் விளங்குகிறது. தனக்கும் தனது மகன் பி.எல்.எச். சந்திரிகாவுக்கும் ஏற்பட்ட இழிவு அவருக்குப் பிடிக்கவில்லை. தங்களுக்கு அடிபணியாதவர்களை அவர் விட்டுவைக்கமாட்டார். சந்தேகமில்லாமல் குற்றவாளிகள் எடுத்துக்காட்டாக தண்டிக்கப்படுவார்கள். அவர்களை அரசியல் ரீதியாக தூக்கிலிடுவது, வெட்டுவது அல்லது துண்டுபோடுவது அண்மையிலா அல்லது பின்பாஎன்பதுவே கேள்வியாகும். பிரதான குற்றவாளியான மகிந்த ராஜபக்ச குத்துவாளாலா அல்லது ஒரு கிண்ண நஞ்சினாலா தண்டிக்கப்பட விருப்பப்படுகிறார் என்று கேட்கப்படுவாரா? அது பகிரங்கமாக நடக்குமா (எஸ்.எல்.எப்.பி மத்திய குழுக்கூட்டத்தில்) அல்லது முதுகில் குத்துவிழுமா (அநேகமாக ஒருமிடறு நஞ்சு) பழைய பிரபுத்துவப்பாங்கில்? பாதயாத்திரையின் மயிற்கூச் செறியும் (பேரச்சம் தரக்கூடிய) இறுதிக்கட்டத்திற்கு காத்திருங்கள், மக்களே.

இதே வேளையில் பாதயாத்திரையின் கரு தன்னுடையதே யென்றும் அதைத் தான் மகிந்த ராஜபக்சவுக்கு தெரிவித்ததாகவும், கருத்துக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் உரிய மனிதன் தான் என்று (தன்னைத்தானே) லலித் அத்துலத்முதலி வெளிப்படையாக பிரகடனப்படுத்தியுள்ளார். (லங்காதீப ஏப்ரல் 7) இது ஓர் காரசாரமான விவாதத்திற்கு (வழமைபோல் வசைபாடுவதும் சேற்றைவாரி இறைப்பதுமான) எதிர்க்கட்சியினரிடையே பாதயாத்திரை யாருடைய குழந்தை என்பதற்கு வழிவகுக்குமா? இந்நிலையில் லலித்தின் தற்புகழ்ச்சியான கூற்று அவரிடம் எம்மை ஓர் கேள்விகேட்க வைக்கிறது. பாதயாத்திரை அவருடைய கருவா,கின் ஐ, ஜ. தேசிய முன்னணி ஏன் அதில்பங்குபற்றவில்லை. அதற்கு மறுமொழி தெளிவானது. ஐ.ஜ. தேசியமுன்னணி வேறொன்றுமில்லாத வெறுமையான வீங்கியதலை. அதற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை. கட்சிக்கு கொள்கை முன்னெடுப்பாளர்களோ உறுப்பினர்களோ இல்லை. அவர்களுக்கு இருப்பது பணம் கொடுப்பவர்கள் மேல்தட்டு வர்க்கப் பெண்மணிகள், 'விசிறிகள்', ஆலோசனை வழங்குவோர் (உள்நாட்டு, வெளிநாட்டு) ஆகியோரே. ஜனநாயக வழியிலான மக்கள் கிளர்ச்சியை முன்னெடுப்பதற்குப் பதிலாக சதித்திட்டம் மூலம் நடவடிக்கை எடுப்பது ஐ.ஐ.தே. முன்னணியின் கைவந்த கலை. ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு நடவடிக்கையில் அவர்கள் பாடம் படித்திருப்பார்கள் என்று நம்புவோமாக. அடிப்படையில் மக்கள், ஜனாதிபதி பிரேமதாசாவின் மீதுநம்பிக்கை கொண்டுள்ளபடியால் எவ்வித சதித்திட்டங்களும் எடுபடமாட்டா. வெளிநாட்டவர்களுடன் சேர்ந்து எமது நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் அழிப்பதற்குச் சதி செய்யும் பல்வேறு உள்நாட்டு அரசியல்வாதிகளை மக்கள் எவ்வித தயக்கமும் இன்றி இனங்கண்டு அவர்களை துரோகிகள் எனக்கணித்து அதற்கேற்றவாறு அவர்களை நடத்தவும் செய்வார்கள் என்பதை நாம் மனதில் கொள்வது நன்று. ★

கூட்டுறவு என்பதை ஐந்து
எழுத்துக்களில்தான் எழுதவேண்டு
மென்பதில்லை, இரண்டே எழுத்துக்களில்
எழுதலாம். 'நாம்'

# தொடர்ந்தும் கிழக்கு ஓர் பிரச்சினையாக இருக்கிறது

-ரோகன் குணசேகர-
(ஐலண்ட்- 10.05.1992)

தரை மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ புலிகள் தமது படையினரை வடக்கிற்கும், கிழக்கிற்குமிடையே கொண்டு செல்லகூடிய நிலையில் இருக்கும்வரை, புலிகளை கிழக்கிலிருந்து அகற்றுவது ஒரு பிரச்சனையாகவே இருக்கும். போராளிகளையும் ஆயுதங்களையும் புலிகள் வட கிழக்குக்கு இடையே எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு படையினரால் முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தபோதும் குறைந்த அளவிலாவது நடமாட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது.

ஆயுதப்படையினரால் தாக்கத்திற்குள்ளாகியிருக்கும் தமது அணியினருக்கு மேலதிக துருப்புக்களை எடுத்துச் செல்வதற்கும் அல்லது இராணுவம் பலம் குன்றிய இடங்களில் அவர்களுக்கு எதிரான தாக்குதலை நடத்துவதற்கும் போர்வலயத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு பெரும் தொகையான குழுக்களைப் புலிகள் இட்டுச்செல்லும் ஆற்றலே அவர்களின் போராட்டத்திற்கு வெற்றிக்கு முக்கியமானதாகும்.

வடகிழக்கு கடல் எல்லையில் கஜபாபுரவிலிருந்து கொக்குத்தொடுவாய் வரை பாதுகாப்புப் படையினரின் முன்னணி தற்காப்பு இராணுவத் தங்ககங்கள் புலிகளின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டபோதும் பயங்கர வாதிகள் அந்நிலைகளுக்கு ஊடாகவுள்ள இடைவெளிகளின் மூலம் சிறிய குழுக்களாக நழுவுகிறார்கள்.

கடற்படையினர் துரிதமாகத் தாக்கும் இழுவைக்கலன்களால் கண்டுபிடிக்க முடியாத கரையை தழுவிச் செல்லும் சிறிய கண்ணாடி இழைநார் படகுகள் மூலமும் அவர்கள் கடலில் நடமாட்டத்தை மேற்கொள்ளலாம். அவைகளைக் கண்டுகொண்டாலும் தற்போது கடற்படையினரிடம் இருக்கும் சுடுகலன் படகுகளும் தாக்கும் கலன்களும் அவைகளை கடற்கரைக்கு நெருக்கமாகத் துரத்திச் செல்ல முடியாது. கடற்படையினரால் துரத்திச் செல்

லப்படும்போது புலிகள் எப்போதும் தமது படகுகளைக் கரை சேர்த்துவிட்டு காட்டுக்குள் பின்வாங்கக்கூடியதாக இருக்கின்றது.

புலிகள் இயக்கத்திற்கோ அல்லது அதன் குறிக்கோளுக்கோ சார்பற்ற மக்களை, இடையிடையே தனிமையாக காணப்படும் கிராமங்களைத் தவிர பெரும்பாலாக காட்டுப் பிரதேசமாகவுள்ள இப்பகுதிகளில் குடியேற்றுவது புலி அணியினரின் நடமாட்டத்தை தடுப்பதற்கு உதவும்.

1980களின் முற்பகுதியிலிருந்து புலிகள் தொடர்ச்சியாக இப்பிராந்தியத்தில் முதலில் சிங்களவர்களையும், பின்னர் முஸ்லிம் கிராமவாசிகளையும் விரட்டியடித்தமை அவர்கள் எடுத்துக் கொண்ட இம்முயற்சியை ஓரளவு விளக்குகிறது. அந்த வரிசையில் அண்மையில் அழிஞ்சி பொத்தனையில் இடம்பெற்ற அப்பாவிகளின் படுகொலைகளும் ஒன்றாகும்.

காடுகளையும் நெல்வயல்களையும் ஒரு பக்கமாகவும் மறு பக்கத்தில் மகாவலிகங்கையையும் கொண்ட இரு தமிழ் கிராமங்களின் நடுவில் அமைந்ததன் மூலம் அழிஞ்சிபொத்தனை தாக்கப் படுவதற்கு இடமளிக்ககூடிய பலவீனமான நிலையில் இருந்தது. தமிழ் கிராமங்கள் ஊடாகத்தான் அழிஞ்சிபொத்தனையை அடைய வேண்டும்.

இரு திங்கள்களுக்கு முன் இக்கிராமத்தைப் புலிகள் தாக்குதற்கு எடுத்த முயற்சி அந்நேரத்தில் அங்கு காவலரண் ஒன்றில் தங்கியிருந்த இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த இராணுவம் திருப்பியழைக்கப்பட்டு காவல்துறையினரும், ஊர்காவல்படையினரும் நிறுத்தப்பட்டனர். ஒரேயிடத்தில் தங்கி காவல் புரியும் கடமையிலும் பார்க்க, பயங்கரவாத எதிர் நடவடிக்கைக்கு அவசரமாக இராணுவத்தினர் தேவைப்பட்டதே இதற்குக் காரணம். 1984ல் டொலர்பண்ணை, கென்றபண்ணை ஆகியவற்றில் குடியானவர்களைப் படுகொலை செய்ததே புலிகளின் முதற் படுகொலைகளாகும். இது சுமார் 8 ஆண்டுகளின் முன்னர் இடம்பெற்றது. அரசாங்கம் இவ் எல்லைப்புற குடியேற்றங்களை கிபுட்சு (**Kibuttzim**) பாணியிலான தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்து அரண் அமைக்கும் முயற்சிகளை எடுத்த போதும் பயங்கரவாதப் படுகொலைகள் இப்போதும் தொடர்கின்றன.

பாதுகாப்புக்கென இருந்தவர்களிடமிருந்து அவர்களின் சுடுகலன்களை, தாக்கியவர்கள் எடுத்துச் சென்றமை சண்டை

எவ்விதம் நடந்திருக்குமென எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்புக்கென இருந்தவர்கள் எத்தனை தடவைகள் சுட்டார்கள் என்பது தெரிந்தால் விளக்கம் தெளிவாகும். சில கோணங்களில் பார்க்கும்போது அவர்களின் கடமை தாக்கப்படக்கூடிய அபாயத்தை கொண்டது. அவர்களிலும் பார்க்க தாக்கவந்தோர் கூடியதொகையினராயும் சுடுவதில் திறமைவாய்ந்தவராயும் இருந்திருக்கலாம். ஆனால் திறமையான பயிற்சியிருந்திருந்தால் குறைந்தளவு அருகில் உள்ள இராணுவம் வரும் வரையிலாவது எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்திருக்கலாம்.

புலிகள் இச்சிற்றூரை தாக்கியது சிங்களவர்களும் முஸ்லிம்களும் வரவேற்கப்படப்படாத தமிழீழத்தின் ஒருபகுதியான இப்பகுதியில் இவர்களின் சனத்தொகையைக் குறைப்பதற்கும் அத்தோடு யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலுள்ள தமது காட்டுத் தளங்களிலும் தற்போது இராணுவம் ஏற்படுத்தியுள்ள அழுத்தங்களிலிருந்து அவர்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கும் ஆகவே என்று இராணுவம் முஸ்லீம் வட்டாரங்களும் நம்புகின்றன. தமிழ் முஸ்லீம் வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதற்கு இராணுவம் தனது படைகளை திசைதிருப்பினால் அது இராணுவத்தை பலவீனமடையச் செய்யும் என்பது நோக்கமாக இருக்கலாம்.

கஜபாபுரவிலிருந்து கொக்குத்தொடுவாய் வரையிலான நிலைகள் திறமையாக திட்டமிடப்பட்ட பலமுள்ள இராணுவ நிலையங்களாலும் குடியேற்றத்திட்டங்களினாலும் ஒன்று சேர்க்கப்பட்டு முற்றாகத் தடைசெய்யப்பட்டால், வடகிழக்கிற்குள்ளேயுள்ள புலிப்போராளிகளின் இருவழி நடமாட்டம் பெருமளவில் குறைந்து போகும். அப்போது புலிகள் தமது வடகிழக்கு போக்குவரத்திற்கு மேலும் மேற்குப் பக்கமாகச் செல்லவேண்டிவரும். வடகிழக்கில் உள்ளதுபோன்று அப்பகுதிகளில் அடர்த்தியான காட்டுப்பகுதிகள் இல்லாமலும் கூடுதலான குடியேற்றத்திட்டங்கள் இருப்பதும் இவர்களின் போக்குவரத்திற்கு கூடிய சிரமத்தைக் கொடுக்கும் கூடிய சிரமங்கள் இருப்பதால் பயங்கரவாதிகள் அதைச்செய்ய முனையார்கள்.

சென்ற டிசம்பர் மாதத்தில் கஜபாபுரத்துடன் கொக்குத்தொடுவாயை கரையோரமாக இணைக்கும் ஓர் வீதியைஅமைக்க இராணுவம் தொடங்கியுள்ளது. தொடர்புகளை இலேசானதாக்கவும் பாதுகாப்பானதாகவும் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் அத்துடன் அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்தும் சாத்தியங்களைக் கருதியும் தான் இவ்வீதி அமைக்கப்படலாயிற்று. இவ்

வீதியமைப்பு தற்போது நின்றுவிட்டது. அவ்வித குடியேற்றத் திட்டம் வெற்றியடைய வேண்டுமோனால் சம்பந்தப்பட்ட எல்லா அரசதுறைகளினதும் முழு ஆதரவும் தேவை. இதனால் தமிழ் மக்கள் கோபமடைவார்கள்.

பாதுகாப்புக் காரணங்கள் என்று கூறி அவர்களின் எதிர்ப்பைத் தட்டிக்கழிக்கலாம். ஆனால் புலிகள் எவ்வித தாக்குதல்களையும் மேற்கொள்ளாதவாறு இராணுவம் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு இராணுவத்திடம் தற்போது தேவையான ஆட்பலம் இல்லை. புலிகளின் கரையோரக்கடல் நடமாட்டத்தைக் கடற்படையினர் தாம் வாங்கிக் கொண்டிருக்கும், ஆழம்குறைந்த வற்றிய கடற்பரப்பில் பிரிட்டு இழுத்துச் செல்லப்படும் ஆற்றல் வாய்ந்த வள்ளங்கள் மூலம் கட்டுப்படுத்தலாம் (Shallow, Water Jet Propelled boats) புலிகளுக்கு ஆழம் குறைந்த கடற்பரப்பில் தற்போது இருக்கும் மேன்நிலையை இது பாதிக்கும்.

கிழக்கையும் வன்னிப்பகுதியையும், யாழ்ப்பாணத்தில் புலிகளைத் தாக்கும் போது ஆதிக்கத்தில் வைத்திருப்பதற்குப் போதிய துருப்புக்கள் இல்லாமலிருப்பதே இராணுவத்தைக் குழப்ப நிலைக்குத் தள்ளியுள்ளது. ஏனெனில் யாழ்ப்பாணத்தைத் தாக்காவிட்டால் புலிகள் குடாநாட்டுக்கு வெளியே சென்று தாக்குவார்கள். கிழக்கில் புலிகள் தொடரும் மறைந்திருந்து செய்யும் தாக்குதல்கள் இராணுவத்தை திணற அடிப்பதோடு, அவர்களின் ஓரளவு தரை ஆதிக்கத்தையும், திறமைமிக்க தந்திரோபாயங்களையும் எடுத்துக்காட்டுகின்றன. போர்முனையில் பட்டறிவு வாய்ந்த மேலாளர்கள் இப்பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்கள் இராணுவ ஏடுகளில் இல்லையென்றும் இவைகள் புலிகளின் வெற்றிகரமான புதிய யுக்திகளுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றன என்றும் கூறுகின்றார்கள்.

பல இராணுவப் பிரிவுகளை இரையாக்கிய (ப) பாணியிலான மறைந்திருந்துதாக்கும் யுக்தியிலிருந்து தப்புவது அநேகமாக முடியாத செயல்தான். தர்க்கரீதியாக அவ்விதத் தாக்குதல் வெற்றியாக அமையாது. ஏனெனில் தாக்குதல் குழுவின் இருபிரிவினர் ஒருவரின் சூட்டிற்கு மற்றவர் இலக்காகலாம். ஆனால் (ப) பாணியிலான இரு நீள பக்கங்களிலும் புலிகள் கவனமாக திட்டமிட்டு மண்மூடைகளுக்குப் பின் ஒளிந்தோ தரையிலுள்ள

சிறு பள்ளங்களில் மறைந்தோ கட்டுப்படுத்தப்பட்ட முறையில் போராடித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

"அவர்கள் எம்மை வியூகத்திற்குள் இழுத்து பின்னர் மூன்று பக்கங்களிலுமிருந்தும் சுடுவார்கள்" என்று இவ்வட்டாரங்கள் விளக்கின. "அவர்கள் முதலில் முன்னால் நின்று சுடுவார்கள் இடப்பக்கம் ஓடினால் அந்தப்பக்கத்திலிருந்து சூட்டிற்கு ஆளா வோம். வலப்பக்கத்திற்கு திரும்பினால் அங்கும்நாம்சூட்டிற்குஆளா வோம். இவ்வித பதுங்கு தாக்குதலுக்கு ஆளாவது பெருமளவி லான இராணுவ அணிக்கு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். இதிலிருந்து தப்புவதற்கு ஒருவழி முன்செல்லும் அணி பரந்து செல்லவேண்டும்.

திரும்பத் திரும்ப விடுக்கப்படும் நட்பு தொடர்பு முயற்சிகளை கருத்தில் எடுக்காமல் தொடர்ந்து வளைந்து கொடாமல் புலிகள் இருப்பதால் இராணுவத்திலுள்ள மிதவாத பகுதியினர்கூட, இறு தித்தீர்வு, அரசியல் தீர்வுதான் என்றாலும் அதை அடைவதற்கு புலிகளை முற்றாக அழிப்பது தான் வழியெனக் கருதுகிறார்கள். அரசின் முன்னுரிமைகள் மாறிக் கொண்டிருந்தாலும், எவ்வித மேனும் புலிகளின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு, கிழக் கிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டு, யாழ்ப்பாணம் திரும்ப எடுக்கப்படவேண்டும். அதே நேரத்தில் உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் புலிகளை தனிமைப்படுத்துவதற்கும் முயற்கிகள் எடுக்கப் படவேண்டும். குடாநாடு இராணுவத்தால் அல்ல, ஒரு தமிழ் அமைப்பால் தேவைப்படின் இாாணுவ துணையுடன் நிர்வகிக்கப் படவேண்டும். ★

ஒரு சிங்கம் படுத்துக்கொண்டு தன் கால்களை வானை நோக்கி ஆட்டிக் கொண்டிருக்கும்போது அத னுடைய உறுமலைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமில்லை.

— கென்னத் கௌண்டா

# ஜேம்ஸ் டெயிலர்
# அறிமுகப்படுத்திய பச்சைத் தங்கம்

(வீரகேசரி, 24.5.1991)

இலங்கைத் தேயிலை பற்றிக் கூறுவதாயின் ஜேம்ஸ் டெயிலரில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்தியவர் ஜேம்ஸ் டெய்லர் என்னும் ஸ்கொத்லாந்துக்காரர் ஆவார்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சுமார் 40 ஆண்டு காலமாக இவர் தனது வீடாகப் பாவித்த மரக்கொட்டகைக்குள் இறந்தார்.

இந்த மரக்கொட்டகை கண்டியில் இருந்து 26 மைல் தொலைவில் உள்ள தொல் தொட்டையில் உள்ள லூல கொந்தரா என்னும் தோட்டத்தில் அமைந்திருந்தது.

இவர் இந்த தேயிலையை அறிமுகம் செய்கையில், அடுத்த நூற்றாண்டில் இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக தேயிலை தான் விளங்கப் போகின்றது என்று சிறிதும் நினைத்திருக்கமாட்டார்.

இவரது நூறாவது ஆண்டு தினம் இம்மாதம் நினைவு கூரப்படுவதை ஒட்டி லூலகொந்தரா தோட்டத்தில் ஜேம்ஸ் டெய்லர் அருங்காட்சியகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் சில வரலாற்று முக்கியத்துவமுள்ள பொருட்கள் டெய்லரின் மரக்கொட்டகையிலிருந்து பெறப்பட்ட உடைவுகள் மற்றும் பல ஞாபகச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் டெயிலர் 1835ஆம் ஆண்டு மேமாதம் 29ஆம்திகதி ஸ்கொத்லாந்தில்பிறந்தார். அக்காலத்தில்இளைஞர்களைச்சேர்த்து பயிர்ச்செய்கைக்காக இலங்கைக்கு அனுப்பிக் கொண்டு இருந்தது ஒரு ஆங்கில நிறுவனம். டெய்லர் தனது 14ஆம் வயதில் இந்த நிறுவனத்தில் சேர்ந்து கொண்டார். அதனையடுத்து

தனது 17ஆவது வயதில் அதாவது 1852 ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதியன்று அறிமுகமற்ற இந்த இலங்கைத் தீவில் காலூன்றினார். அக்காலத்தில் புகையிரதங்கள் இருக்கவில்லை. குதிரை வண்டிகளே ஓடின.

கொழும்பிலிருந்து 6 வாரகால பயணத்தை மேற்கொண்டு டெய்லர் லூலகொந்தரா தோட்டத்தை அடைந்தார். தான் வசிப்பதற்கு அங்கு அவர் ஒரு சிறிய மரக்கொட்டகையை அமைத்துக் கொண்டார்.

வெறும் காடுகளும் மலைகளும் நிறைந்திருந்த அக்காலப் பகுதியில் மலையகப் பகுதியெங்கும் காட்டு மிருகங்களே நிறைந்து வாழ்ந்தன. மிருகங்களிடமிருந்து தப்புவதற்காக தீ மூட்டிக் கொள்வார்கள். அப்போது செய்கை பண்ணப்பட்டு வந்த கோப்பிச் செய்கை நோய் காரணமாக அழியத்தொடங்கியது. நோய் ஆரம்பித்து 20 ஆண்டு காலப் பகுதிக்குள் நாட்டின் முழு கோப்பிச் செய்கையும் அழிந்தது.

1867 ஆம் ஆண்டு அஸ்ஸாமிலிருந்து பெறப்பட்ட தேயிலை விதைகளைக் கொண்டு டெய்லர் 19 ஏக்கர் நிலத்தில் தேயிலைச் செய்கையை மேற்கொண்டார். இவரின் இந்த முயற்சி பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதுவே நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகவும் விளங்கத்தொடங்கியது. இன்று 125ஆண்டு காலத்துக்குப் பின்னர், டெய்லர் 19 ஏக்கரில் விதைத்த தேயிலை சுமார் 6 லட்சம் ஏக்கருக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. 25இலட்சம் மக்களின் ஜீவனோபாயமாகவும் திகழ்கிறது. இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய பொருளாகவும் விளங்குகிறது.

டெய்லரின் 6வார கால பயணம் இன்று குறைந்துவிட்டது. லூலகொந்தராவுக்கு இன்று 3 மணித்தியாலத்தில் வாகனம் மூலம் சென்று விடலாம்.

டெய்லர் தன் வாழ்நாள் முழுவதும் அந்தச் சிறிய மரக்கொட்டகையிலேயே வசித்தார் 1892 ஆம் ஆண்டு மே 2ம் திகதியன்று தனது 57 ஆம் வயதில் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டு மரணமானார். இவரின் பிரேதம் கண்டி மகியாவையில் உள்ள இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. அவரின் நினைவாக அங்கு ஒரு நினைவுச் சின்னமும் அமைக்கப்பட்டுள்ளது.

—★—

21193C.C

# சர்வோதயவின் பல இலட்சங்கள் எங்கு சென்றன?

(லங்கா புத்ர - சண்டே ஒப்சேவர் - 12.04.1992)

சர்வோதயவின் சொத்துக்கள் பில்லியன் ரூபா இலக்கைத் தாண்டும்போது, அதன் உள்ளக நெருக்கடி தீவிரமடைகிறது. சர்வோதய நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தன்கொடை வழங்கும் நாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் உதவிகள் பின்வருமாறு:

## பொருளாதாரத்துறை சாராதவை

*1991 - 1992...220 மில்லியன்*
*1992 - 1993.. 264 மில்லியன்*
*1993 - 1994...317 மில்லியன்* மொத்தம் 801 மில்லியன்

## பொருளாதாரத்துறை

*1991 - 1994...431 மில்லியன்*
முழுத்தொகை - 1232 மில்லியன்.

இதைத்தவிர கோடீஸ்வரர் ஆரியரத்னவின் உரிமைப் பாட்டில் (ஆதிக்கம்)அவரது கைவசமுள்ள சொத்துக்கள் இன்றும் ஒரு பில்லியனுக்கு அதிகமாக இருக்கும். அவர்மில்லியன் டாலர் பெறுமதிவாய்ந்த அச்சுயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளார். அத்தோடு சில இடங்களில் உச்சவரம்பான 50 ஏக்கருக்கும் கூடுதலான நிலப்பரப்புகளில் பயிற்சி நிலையங்களையும் விவசாய நிலையங்களையும் பண்ணைகளையும் ஏற்படுத்தியுள்ளார். இவற்றோடு தீவின் அனேகமான பகுதிகளில், நகரங்களிலும் பட்டினங்களிலும் பெறுமதிமிகுந்த இடங்களில் 250 சர்வோதய நிலையங்களை அமைத்துள்ளார். இந்நிலையங்களுக்கு பல வாகனங்களும் உண்டு. சில மதிப்பீடுகளின்படி இந்நிலையங்களிலுள்ள காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் ஆகியவைமட்டுமே சுமார் அரை பில்லியன் பெறுமதியானவை.

## பிரார்த்தனை செய்யும் சமாதான விரும்பி

இவ்வுரிமைப்பாடு நிலையை அடைந்தபின்னர்கோடீஸ்வரர் ஏ. ரி. ஆரியரத்ன இன்னும் மேலானவற்றை அடையவிரும்புகிறார். நியுயோர்க், டோக்கியோ, கேக், பாரிஸ் ஆகிய செலவு மிக்க தலைநகரிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளின் பிரத்தியேக ஆடம்பர அறைகளில் தங்குவதும், வானூர்திகளில் முதல் வகுப்பில் பயணம் செய்வதும், இடைவிடாது பென்சன் அன்கெட்ச் தங்க முலாம் சிகரட்டுகளை மாத்திரமே புகைக்கும், எளிமையான வாழ்க்கை நடத்தி உயர்ந்த எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று போதிக்கும் இக்குருவிற்கு மேற்கூறியவை தாம் மிகக் குளறுபடியென்பது விளங்கவில்லையா? இப்பிரச்சினை மேலும் குளறுபடியானது. அவர் தான் மறைத்துவைத்திருந்த நிகழ்ச்சி நிரலை மறைமுகமான வகையில் சூழ்ச்சித்திறனுடன் செயற்படுத்த எத்தனித்து ஓர் நெருக்கடி நிலையை விரைவுபடுத்தியுள்ளார். கோடீஸ்வரர் ஆரியரத்னாவின் 5600சிற்றூர்கள் சர்வோதய இயக்கத்தில் பின்னிப்பிணைந்ததின் காரணத்தால் கணிசமான அடிதளத்தை உருவாக்கிவிட்ட நம்பிக்கையுடன், தனது அடுத்த நடவடிக்கைக்கு ஆயத்தமாகிறார். அதற்கேற்றவாறு தனக்கேற்ற நுட்பமான வகையில் சமாதான பயணங்கள் பாதயாத்திரைப் பிராத்தனைகள் என்று கூறப்படுவனவற்றின் மூலம் தனது ஆளணியினரை பயிற்றுவிக்கிறார்,

பிரார்த்தனை செய்யும் சமாதானவிரும்பி, ''மக்களின் புத்தெழுச்சியின்'' மூலம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கியவர் என்பனபோன்ற மாறுவேடங்களில் அரசியலில் ஈடுபடுவதே அவருடைய இறுதி நோக்கமாகும். தனது நோக்கம் பற்றி அவர் வெளியிடாதவரை அவருக்கு வெளிநாட்டுப்பணம் வந்து கொண்டிருக்கும். தக்க தருணம்வந்து தன்னை எதிரணிகளின் பொது ஜனாதிபதி அபேட்சகராகக் கூறிக்கொண்டு வெளிவரும் வரை இப்பணவருகை அவருக்குத் தொடர்ந்து இருக்கவேண்டும். தனக்குரிய வேளைவந்தபின் அவர் வெளிநாட்டு நன்கொடையாளர்களை நோக்கி ''உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகலாம்'' எனும் நிலையில் இருப்பார். நிவர்த்தி செய்ய முடியாதளவிற்கு எதிரணியினர் தம்முள் பிரிந்திருக்கின்றனர் என்று கருதும் இவர் உரியநேரத்தில் தான் எண்ணுகிறபடி அதிகார நிலை தனக்கு வந்துவிடும் என்று எண்ணுகிறார். தனது நிறுவனத் தள அமைப்பினாலும் வளங்களினாலும் (இதனுடன் ஒரு அரசியல் கட்சிதானும் நெருங்கமுடியாது) தீர்க்

கமான நேரத்தில் தனது இறுதி நடவடிக்கையை எடுப்பதால் தேசத்தின் புனித இரட்சகர் எனத்தான் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று அவர் நம்புகிறார்.

எதிரணி அரசியல்வாதிகளை எமாற்றுவதற்கு எண்ணும் ஓர் சுதந்திரமான செயல்திறன் உள்ள அரசியல்வாதியை ஆட்டிப்படைக்கும் உயர்ந்த கற்பனாவாதமாகும் இது. தற்போது அவர் தனது அரசியல் வேட்கைகளைப் புனித சீர்திருத்தவாதியின் வெள்ளை அங்கிக்குள் மறைத்து வைத்துள்ளார். ஆனால் அவருடன் நெருங்கியோருக்கு அவர் தெரிவுபடுத்திய அரசியல் சதி வேறுவிதமானதாகும். கோடீஸ்வரர் ஆரியரத்னா உச்ச நிலைக்கு வந்துவிட்டார். அதிலிருந்து ஜனாதிபதி பதவிக்குச் செல்வதே அவர் நோக்கம்.

இந்த இலக்கை அடைவதற்கு அவர் தனது வளங்களைப் பாதுகாப்பான சுகபோக வழிமுறைகளில் அமைத்துள்ளார். தம் வாழ்விற்கு அவரில் முற்றிலும் நம்பியுள்ள அவரது இனபந்துக்கள் நண்பர்கள் ஆகியோரின் கட்டமைப்பு மூலம் கோடிக்கணக்கான சொத்துக்கள் மீது இறுக்கமான உரிமைப்பாட்டை வைத்திருப்பது அவரின் தந்திரோபாயமாகும். சர்வோதய நிறுவனத்தை இயக்குவதற்கு அதன் நிறைவேற்றுச் சபையை தன்முழு உரிமைப்பாட்டின் கீழ் வைத்திருக்கவேண்டும். அது முக்கிய தீர்மானம் எடுக்கும் அமைப்பு அதில் அவர் சரியான இடங்களில் தனது கும்பலை வைப்பதன்மூலம் வெற்றி கண்டுள்ளார். நிறைவேற்று சபையில், ஏனையவர்களுடன் அவரின் மனைவி நீத்தா ஆரியரத்ன. மகள் திநமதி சாரிக்க யிரசிங்க, மருமகள் உபாலி யிரசிங்க, மூத்த மகன் வின்ய ஆரியரத்ன, இளையமகன் ஜீவன் ஆரியரத்ன தனது சகோதரன் வீரமன் ஜினதாச, சகோதரி அமரா பீரிஸ் மைத்துனன் வால்டா பீரிஸ், சர்வோதயத்தின் பிரதான கள உத்தியோகத்தர்களில் ஒருவரும் தத்துவார்த்தவாதியுமான அவரது மருமகன் கார்ச தவரத்னவும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் நெருங்கிய உறவினர்கள் இன்னும் தூரத்துஉறவினர்களும் சேவையில் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

## நெருங்கிய நண்பர்கள்

கோடீஸ்வரர் ஆரியரத்ன முக்கிய பதவிகளில் தனது நெருங்கிய நண்பர்களையும் வைத்துள்ளார். பொதுச் செயலாளர் டி.ஏ. பெரேரா அவருடன் ஒரேவகுப்பில் படித்தவர். பொருளாளரான தர்மகுணசிங்க, தான் கோடீஸ்வரரானதற்கு

முன்னர் ஆரியரத்ன கற்பித்த நாலந்தா கல்லூரியில் சக ஆசிரியரும் ஒரேவகுப்பில் படித்தவரும் ஆவர். உதவிச் செயலர் வின்ய உங்களுக்கு தெரிந்தவரின் மகன் வின்ய ஆரியரத்ன. உப தலைவர் (கோடீஸ்வரர் ஆரியரத்னவுக்கு அடுத்த பெரியவர்- அது உங்களால் சொல்லமுடியுமா? நீங்கள் சொல்வது சரிதான் உங்களுக்கு தெரிந்தவரின் மனைவி நீத்தா ஆரியரத்ன) நண் பர்களினதும் உறவினர்களினதும் பட்டியல் அவரது வங்கிக் கணக்குப்போல் நீண்டது. அவர் கூறுவதுபோல் இது ஆகக்கு றைந்த பட்சம் ''நட்பு முதலாளித்துவம்.''

நிச்சயமாக கோர்டீஸ்வரர் ஆரியரத்ன இது தனிச் சொத் துடமையல்ல என்று கூறி, சட்டமுறைப்படி அமைக்கப்பட்ட லங்கா ஜாதிக சர்வோதய சிரமதான சங்கமயத்திற்கு உரிய தெனக் கூறுவார். இந்தப் புனித அமைப்பின் தர்மகர்த்தா என்று தன்னைக் கூறலாம். அப்படியானால் ஒரு சாதாரணச் சொத்துரிமைகாரனிலும் பார்க்க தர்மகர்த்தா என்ற முறையில் உறவினருக்கு உதவுதல், சலுகைசெய்தல், நண்பர்களுக்கு உதவு தல் போன்ற பிழைகளைச் செய்யாது சர்வோதய இயக்கத் தின் புனித தன்மைக்கு கறைஏற்படாதவகையில் பரிசுத்த பணி யில் செயற்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவார். டாக் டர் ஆரியரத்ன அல்லது அவரது குடும்பமும் சகாக்களும் இவை பற்றிக் கவலைப்படவும் இல்லை. இனிமேலும் அவ்விதம் நடக்க இடமில்லை.

ஆழமானதும் வளர்ந்து கொண்டிருப்பதுவுமான நெருக்கடி அவர் அரசியலில தலையிடுவதேயாகும். சென்ற வாரம் அரசில் வாதி ஆரியரத்னாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக டாக் டர் ஆரியரத்தினாவின் நெருங்கிய சகாவும் நெடுநாளைய சர் வோதய செயல்வாதியுமான வண. மாதம்பகம ஆசாகி தேரர் பதவி விலகினார். தனது அரசியல் வேட்கைகளை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும் வேளைகளில் அவர் தம்மீது சுமத் தப்படும் குற்றச்சாட்டுக்களை மறைக்க தொடர்புசாதனங்கள், அரசு எதிரிகள் என அவரால் கூறப்படும் அவரைவிட்டு வெறுத்து விலகியவர்கள் ஆகியோரைத் தூற்றுகிறார். தன்மீது மாசு கற் பிப்பதற்கு தனது செயற்பாடுகள் தவறாக விளங்கப்படுத்தப் படுகின்றது என்றும், அல்லது வேண்டுமென்று திரித்துக்கூறப் படுகின்றது என்றும் வாதிடுகிறார். ஆனால் உண்மைநிலை வேறு. சென்ற வாரம் ராஜதந்திரிகளுக்கு அனுப்பிய சுற்று நிருப கடிதமூலம் தான் யாதயாத்திரையில் சம்பந்தப்பட வில்லை என்றும் அரசியலில் தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## வரவேற்கவில்லை

ராஜதந்திரிகளுக்கு அவர் அனுப்பிய கடிதத்தின் ஒரு பகுதி இதோ: ''பாதயாத்திரையினர் எமது மொரட்டுவை தலை மையகத்தை ஒருபோதும் கடந்து செல்வில்லை. நான் மற்ற வர்களைப் போல் அது கடந்து செல்வதைக் காலி வீதியில் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அதில் சென்ற சில தலைவர்கள் என்னிடம் வந்து பேசினார்கள். எந்த இடத்தி லாவது சர்வோதயம் அவர்களை வரவேற்கவும் இல்லை. அதில் பங்கு கொள்ளவும் இல்லை. ஆனால் மார்ச் 17ஆம் திகதி லங்கா தீப மொறட்டுவவில் டாக்டர் ஆரியரத்னவுக்கு மகிந்தராஜ பக்ச காதுகொடுத்துக்கேட்கும் புகைப்படத்தை பிரசுரித்திருந் தது. அப்படத்தின் அடியிலுள்ள விளக்கத்தில் டாக்டர் ஏ.ரீ. ஆரியரத்னவின் தலைமையிலான மக்கள் அது மொறட்டுவ சர்வோதய சந்தியை வந்தடைந்தபோது யாத்திரையை வரவேற் றார்கள் என்று இருக்கிறது. இது பாத யாத்திரையின் அமைப் பாளரான மகிந்த ராஜபக்ச சர்வோதய தலைவரால் மிக குதூ கலமாக வரவேற்கப்படுவதைக்காட்டுகிறது. ''டாக்டர் ஆரிய ரத்னவால் விமர்சிக்கும் பொது மக்கள்'' என்று குறிப்பிடும் (குறிப்பாக சிங்கள சமூகத்தினருக்கு)ஒரு முகத்தையும் ஆங்கிலம் வாசிக்கும் ராஜதந்திரிகளுக்கு வெறொரு முகத்தையும் காட்டு வதே அவரது ராஜதந்திரமாகும். ராஜதந்திரிகளுக்குத் தான் ஒரு பார்வையாளன் என்று கணிப்பை ஏற்படுத்தி வெளிநாட்டு உதவிகளை தடைப்படாமல் இருப்பதைப் பார்த்துக்கொள்கி றார். ஆனால் 'விமர்சிக்கும் பொதுமக்களுக்கு' தான் பாத யாத்திரைக்கு சார்பானவர் என்ற தோற்றத்தை அளிக்கிறார். லங்காதீபாவில் வெளிவந்த பாதயாத்திரையினரை அன்புடன் வரவேற்ற குழுவினருக்கு தலைமைதாங்கி அவர் சென்றார் என்ற கூற்றிற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவர் கூறு வதுபோல் தான் ஓர் பார்வையாளனாக நின்றார் என்ற கூற் றுக்கு இது மிகவும் வேறுபட்டதாகும்.

பாதயாத்திரையுடனான அவருடைய அரசியல் ஈடுபாடு இன்றும் ஆழமானது. மார்ச் 23ஆம் திகதியில் லங்காதீப இத ழில் பாதயாத்திரையின் அமைப்பாளரான சமல் ராஜபக்ச தங் காலையில் நடைபெறவிருக்கும் சத்தியகிரியைக்கு டாக்டர் ஆரிய ரத்ன தலைமை வகிப்பார் என்று கூறினாரென வெளிவந் தது. மார்ச் 30ல் லங்காதீப ''முதுடும்வ ை விலுள்ள பழைமை வாய்ந்த போதியில் மார்ச் 27 அன்று சர்( வாதயத் தலைவர் டாக்டர் ஆரியரத்ன நடத்திய போதிபூஜை பில், வன்முறை நீதி

யின்மை ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு எதிராகப்பல எதிர்க்கட்சிகள் உருவாக்கிய இயக்கத்திற்கு ஐந்து லட்சம் மக்களுடன் தானும், சேர்ந்துகொள்வேன் என்று கூறினார்'' எனப் பிரசுரித்தது.

அரசியல் பிரகடனங்களைச் செய்வதற்கு போதிபூசைகளை நடத்தினர் என்ற லங்காதீபக் கூற்றுக்களை மறக்கவில்லை இவ்விதம் தான் அவர் தமது அரசியல் நிலையை முன்னெடுப்பதற்கு சமயத்தை கபடத்தனமாக உபயோகிக்கிறார். (மதம் என்பது அபின் போன்றது என சர்வோதய வெளியீடுகள் கூறுகின்றன)

## அரசியல் வேட்கைகள்

அவரது செயல்பாட்டை விமர்சிக்கும் வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கும் ''விமர்சிக்கும் பொதுமக்களுக்கும்'' இடையில் அவரின் அரசியல் வேட்கைகள் வந்துவிட்டதனாலேயே அவர் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. நன்கொடையாளர்களின் கூட்டுக்குழுவிற்குத்தான் அவர் பிரதானமாக கணக்குக் காட்டவேண்டும். அவரின் நடவடிக்கைகளை இக்குழு காலத்திற்குக் காலம் கண்காணிக்கும். இக்கண்காணிப்புக்குழு பல இடர்களில் வாழும் ஏழைகளை மேம்படுத்தும் முக்கிய நோக்கம் பற்றி இனித்தான் ஆராயவேண்டும். இக்குறிக்கோளை அடைவதற்காகவே இவ்வியக்கத்தில் இவர் ஈடுபட்டார். அதை அடையாததே அவரில் நம்பிக்கைவைத்தவர்களை நம்பிக்கையிழக்க வைத்தது. அவர் செயற்பாடுகள் குறித்துப் பல கேள்விகள் எழுந்துள்ளன.

கேள்வி: (1) 32 ஆண்டுகாலமாக சர்வோதய இயக்கத்தை தலைமை தாங்கிய பின்னர், எத்தனை சிற்றூர்களை வறுமையிலிருந்து விடுவித்துள்ளார்?

(2) எத்தனை மனிதர்களை மேம்பாடுள்ள உயர் நிலைக்கு ''விழிப்படையச்'' செய்தார்?

(3) தனது போதனைகளாலும் வெளியீடுகளாலும் மன் பேராயத்தை (சமுதாயத்தை) எவ்வழியிலாவது நல்வழிக்கு மாற்றிவிட்டாரா?

(4) 32 ஆண்டுகளுக்கு முன் அவர் தொடங்கியபோது அமைதியாக இருந்த மன்பேராயம் இன்று வன்முறை மன்பேராயமாக மாறியமைக்கு அவர்

> ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளாரா? சுருங்கக்கூறினால் அவரின் கூச்சல்களின் நடுவிலும் வறுமை ஒழிப்பு, ஆன்மீக மேம்பாட்டுநிலை அடைதல் போன்ற ஏதாவதொரு இலக்குகளை சாதித்துள்ளாரா?

ஆன்மீக மேம்பாட்டில் அவர் இந்த நீண்டகாலத்தில் மன்பேராயத்திற்கு ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தால் அது எங்காவது பதியப்பட்டிருக்கும். அதை எங்கு கண்டுபிடிக்கலாம்? இவை 32 ஆண்டுகாலகட்டத்தின் பின்னர் எழுந்துள்ள கேள்விகள்? அவர் செயற்படத் தொடங்கிய காலத்தின் பின்னர் இவ் மன்பேராயம் ஏன் இழிநிலைக்கு வந்துள்ளது? அரசாங்கத்தைக் குறைகூறுவதுதான் அவருடைய தந்திரோபாயம். இன்று மன்பேராயம் அடைந்துள்ள இழிநிலைக்கு எல்லா அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும். அவர் நாடளாவிய ரீதியில் அல்லாமல் தனிப்பட்டவர்களையும் சிற்றூர்களையும் மாற்றுவதற்கே புறப்பட்டார். எந்த தனிமனிதனை இவர் மாற்றியுள்ளார்? எந்த சிற்றூர் 'விழிப்படைந்தது'? அல்லது வறுமையினின்றும் மீண்டது? பில்லியன் கணக்காக பணம் செலழிக்கப்பட்டது. அதன் பெறுபேறுகள் என்ன? குறைந்த பட்சம் அவர் தானும் 'விழிப்படைந்த' சுயநலமற்ற எளிமையான மனிதனாக மாறியிருந்தால் செலவான பணம் பெறுமதியானதாக இருக்கும்.

காலி வீதியிலும் கண்டி வீதியிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்களையும் பெண்களையும் சமாதானத்தின் பெயரால் அங்குமிங்கும் நடத்திச் செல்கிறார். அதனால் ஏற்பட்ட சமாதானம் என்ன? உண்மையில் சமாதானத்தில் நம்பிக்கையுடையவரென்றால் சமாதானமிக்க பகுதிகளான கம்பகாவிற்கும் களனிக்குமிடையிலும் மொறட்டுவக்கும் களுத்துறைக்குமிடையிலும் நடந்து திரியவேண்டுமா? பொத்துவிலில் இருந்து வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் அல்லவா பவனி சென்றிருகக வேண்டும்? இது ஓர் ஏமாற்று விளையாட்டா? இந்த யாத்திரைக்கு மில்லியன்கள் செலவாகின்றன, எதற்காக? இவ் யாத்திரைகளை செலவுமிக்க வீடியோப் படங்கள் பிடித்து நன்கொடை வழங்கும் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அவருடைய மொறட்டுவை செயலகத்தில் ஆரியரத்ன சிறி லங்காவில் மேலும் கீழும் நடப்பது, ஆரியரத்ன பிரார்த்திப்பது ஆரியரத்னா பேசுவது, ஆரியரத்னா கருத்தரங்கு நடத்துவது, ஆரியரத்னா பரிசுகள் பெறுவது, ஆரியரத்னா போதிபூசை செய்வது போன்றவற்றை

எடுத்துக்காட்டும் ஆயிரக்கணக்கான வீடியோக்கள் இருக்கின்றன. அவரைப் புகழ்ந்து எழுதப்பட்ட வெளியீடுகளும் கூரையளவிற்கு உயர்ந்துள்ளன. இந்தப் பாரிய பணச்செலவை பார்த்துக்கொண்டிருக்கும் பலர் இந்தப் பணத்தைக்கொண்டு கிணறு தோண்டமுடியாதா? ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க முடியாதா? என்று நேரடியாகவே கேட்கிறார்கள்.

இவருடைய செயற்பாடுகளைக் கண்காணிக்கும் நன்கொடை வழங்குவோர்களுக்கு அரசாங்கத்தால் இவர் இம்சைப்படுகிறார் என்று நம்பக்கூடியவிதத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. இதற்குக் காரணம் அரசுசார்பற்ற அமைப்புக்களின் நடைமுறைகள் பரிசீலிப்பதற்கான ஆணைக்குழு நியமிக்கப்பட்டமையே ஆகும். இவ்வாணைக்குழுவின் செயற்பாடுபற்றி அதன் வேலைகள் நடந்துகொண்டு இருக்கும்போது அல்லது அதன் பணியின் முடிவுகளில் இருந்து அறிந்துகொள்ளலாம். இதனிடையே அவரின் கள உத்தியோகத்தர்கள் கூட அரசாங்கத்துடன் நெருங்கி வேலைசெய்வதில் தங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்கிறார்கள். உண்மையில் அரசாங்கத்தின் உதவியில்லாமல் சிற்றூர்களில் தங்களது வேலைகளை முடிக்க முடியாது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் அரச அதிபர்கள், காவல்துறையினர், அரசின் புனருத்தாரண, நல்வாழ்வுக்கான அமைப்புக்கள் ஆகியவற்றுடன் மிக நெருக்கமாக வேலை செய்யவேண்டும். இவற்றுடன் மற்றும் துறைகளிலும் சர்வோதய கள உத்தியோகத்தர்கள் எவ்வித சிரமத்திற்கும் உள்ளாகவில்லை. பிரச்சினை ஆரியரத்னாவிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில்தான். எதிரணி அரசியலில் ஈடுபடுவதன் மூலம் அவர்தான் அரசாங்கத்துடன் மோதிக்கொள்கிறார். கள உத்தியோகத்தர்கள் அவர் அபிவிருத்தியை விட்டு அரசியலுக்கு அணி திரட்டுகிறார் என்று கூறுகிறார்கள். சர்வோதயம், அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேணவாமிக்க அபேட்சகர்களின் அரசியல் கருவியாக மாற முன்னர் அதன் நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு அமைச்சும் நன்கொடையாளர்களுமே முடிவெடுக்க வேண்டும்.

# எழுச்சிபெறும் கென்யா

- வல்சன்செறியன் -

(புரண்ட்லைன் 13.3.92)

(அரப் மொய் (Arap moi) யின் ஆட்சிக்கு எதிர்ப்புகள் அதிகரிக்கின்றன.)

ஆபிரிக்காவில் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக நெடுங்காலமாக கென்யா (Kenya) வை மேற்குலகச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் கூறிவந்துள்ளபோதிலும் அந்த நாடு ஊழல்கள் மலிந்த எதேச்சாதிகார மான ஆட்சியுடைய நாடு எனத் தற்போது உலகத்துக்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது.

அயல்நாடுகளான தான்சானியா (Tanzania) எதியோப்பியா (Ethiopia) ஆகிய நாடுகளில் இனப்பூசல்களும், பொதுவுடமைக் கொள்கைகளும் வளர்ந்து வரும் வேளையில், மேற்குலக நாடுகள் தங்கள் தேவையைக் கருதி கென்யாவை ஒரு சனநாயகநாடாகவும், வளர்ச்சிபெறும் நாடாகவும் வெளியுலகத்துக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன. கெடுபிடியுத்தம் (Cold war) முடிவடைந்ததால் தங்களுக்குச் சிநேகபூர்வமாக இருந்துவந்த கென்யாவின் அதிபர் அறப்மொய்யின் அரசாங்கத்iதயும், சயரின் (Zaire) அதிபர் திரு மொபுட்டு செ செ செகோ (Mobutu SeSe Seko) வின் அரசாங்கத்தையும் தங்கள் பிடியில் வைத்திருக்க வேண்டிய அவசியம் மேற்கு நாடுகளுக்குத் தேவையற்றதாகிவிட்டது

அனைத்துலக நாடுகளின் உதவிகளில் தங்கியிருப்பதால் கென்யா அவற்றின் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ள தென்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன லோம் (iv) சட்டத்தின் கீழ் வழங்கும் உதவிகளுக்கு ஐரோப்பிய சமுகம் 1991ல் முதன்முதலாக மனித உரிமைகள் பற்றிய சரத்தைச் சேர்த்துள்ளது.

நீதியும், நேர்மையும், நியாயமுமான தேர்தல்கள் நடைபெறக் கூடிய வகையில் அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினாலே வருங்காலத்தில் உதவிகள் வழங்கப்படுமென அமெரிக்

காவும், ஜெர்மனியும் ஏற்கனவே கென்யாவின் அரசாங்கத்துக்குக் கூறியுள்ளன. நேர்மையான தேர்தலுக்கும், பலகட்சி அமைப்புக்கும் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பைக் காட்டி வந்த சனாதிபதி மொய், பின்னர் இவ்வாண்டு இறுதியில் பல கட்சிகள் பங்குபற்றும் நேர்மையான தேர்தலை நடாத்த ஒப்புக்கொண்டுள்ளார், ஆறு மாதகாலத்துக்குத் தங்கள் உதவியை நிறுத்தப்போகிறோம். என நவம்பர் மாதத்தில் மேற்கு நாடுகள் கூறுவதற்கு முன்னதாகப் பல கட்சி சனநாயகம் நாட்டில் நிலையான அரசை ஏற்படுத்தாதென்றும், இனரீதியான இன்னல்களைத் தோற்றுவிக்கும் என்றும் அபிவிருத்தியைப் பின் தள்ளும் என்றும் திரு. மொய் கூறிவந்தார்.

மேற்குலக வங்கி நிறுவனங்களும் மொய்யினுடைய அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன. அனைத்துலக நாணய நிதியமும் (I.M.F) டிசெம்பர் மாதத்தில் தான் வழங்கவிருந்த 63.3 மில்லியன் டாலர்களைத் தாமதப்படுத்தியுள்ளது.

1963ல் கென்யா சுதந்திரமடைந்த நாள்முதல் கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணி (Kenya Afric n Na.ional Union) யே ஆட்சி செலுத்திவருகின்றது. ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்காக வன்முறை அடிப்படையிலான கொள்கைகளைக் கொண்ட மௌமௌ (Mau Mau) இயக்கத்தின் வாரிசுகள் தாங்களே எனக்கூறிக்கொள்ள கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணிக்கு உரிமை இருந்தாலும், சுதந்திரம் அடைந்த பின்னர் தங்கள் அடிப்படை முற்போக்குக் கொள்கைகளைக் கைவிட்டு ஏதேச்சாதிகாரமானதும், ஊழல் நிறைந்ததுமான வழிமுறைகளை அது கடைப்பிடித்துவருகின்றது.

முதலாவது சனாதிபதியான யோமோ கென்யாட்டா (Jomo Kenyatta) வின் கீழ் அரசாங்கத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட கென்யா ஆபிரிக்க தேசிய முன்னணி அடக்குமுறைச் சட்டங்களைத் தவறான முறையில் பிரயோகித்தது. இடதுசாரித் தொழிற்சங்கங்களும், அதன் தலைவர்களும் ஒடுக்கப்பட்டு இம்முன்னணியின் ஆதரவுள்ள முன்னணித்தாபனங்கள் அரசியலிலும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் முதன்மையான இடத்துக்குக் கொண்டுவரப்பட்டன. கென்யா நாட்டின் பொருளாதாரத்திலும், அரசியல் வாழ்விலும் பலதரப்பட்ட கொள்கைக் குழப்பங்கள் கென்யாட்டாவின் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பித்துவிட்டன. ஆட்சியை நடத்தும் ஆட்சியிலுள்ள எதிர்ப்பாளர்க

ளையும், வெளியிலுள்ள எதிர்ப்பாளர்களையும், ஒழித்துக்கட்டுவதும் கென்யாட்டாவின் கீழேயே ஆரம்பிக்கப்பட்டது.

குடியேற்ற நாடாக இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில் அனைத்துலக நாணய நிதியத்தினதும் உலகவங்கியினதும் செல்வாக்கைப் பிரியோகித்துப் பரீட்சை செய்யும் நாடாகக் கென்யா திகழ்ந்தது. அயல்நாடான தான்சானியா யூலியஸ் நைரேரே (Julius Nyerer) யின் தலைமையின் கீழ் தனது நாட்டுக்கேற்ற பொதுவுடமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தபோது இதற்கு மாறாகத் தொடக்க காலத்திலிருந்தே கென்யா பிரதேச ரீதியிலும் அனைத்துலக விவகாரங்களிலும் மேற்கு நாடுகளுக்கு ஆதரவான வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்துவந்தது. இதற்குக் கைமாறாக மேற்குலக நாடுகள் கென்யாவின் திட்டங்களை ஏற்று, அதற்குத் தேவையான உதவிகளைச் செய்து, வெளியுலகத்துக்கு அதனை வளர்ச்சிக்கும், சனநாயகத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் நாடு எனப் பறைசாற்றுவித்துத் தமது நன்றிக்கடனை வெளிப்படுத்தின. இதனால் அரசியலில் ஏற்பட்ட சூழ்ச்சிகளும், வெளிப்படையாக நடைபெற்றுவந்த மனித உரிமை மீறல்களும் மறைக்கப்பட்டன.

கென்யாட்டாவின் ஆட்சிக்காலத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கிக்கியூசு (Kikuyus) இனத்தவர்களின் ஆதிக்கத்தில் கென்யா ஆபிரிக்கதேசிய முன்னணி இருந்தது. கென்யா நாட்டின் சுதந்திர இயக்கத்திலும், இம்முன்னணியிலும் இரண்டாம் இடத்தை வகித்துவந்த ஒகிங்கா ஒடிங்கா (Oginga Odinga) ஒதுக்கித்தள்ளப்பட்டார். முற்போக்குவாதியான ஒடிங்கா, கென்யாவின் மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தை வகிக்கும் லுவோ (Luo) இனத்தைச் சேர்ந்தவர். லுவோ இனத்தைச் சேர்ந்த இன்னொரு அரசியல் வாதியான ரொம் மபோயா (Tom Mboya) வினால் கொண்டுவரப்பட்ட அரசியல்கட்சிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்குமான கட்டுப்பாடுகளைத் திரு ஒடிங்கா வன்மையாக எதிர்த்தனர். இடதுசாரிக் கட்சிகளையும் இடதுசாரிக் கொள்கையுடையவர்களையும் ஒன்றுசேர்த்து கென்யா மக்கள் முன்னணி (Kenya Peoples Union) என்றொரு கட்சியைத் திரு ஒடிங்கா உருவாக்கினார். இக்கட்சிக்கு முழு ஆதரவையும் கொடுத்து இக்கட்சியை வளர்க்க உதவிய முன்னணி அரசியல்வாதியும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மார்க்கீசவாதியுமான திரு பியோ பின்ரோ (Pio Pinto) இக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களில் 1966ம் ஆண்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்ட புகழ்மிக்க கென்யா

மக்களில் இவர் முதலாமவராவர். இவரைக் கொலைசெய்த கொலையாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. இக்கொலைக்குப் பின்னர் கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியிலும் அரசாங்கத்திலும், கென்யாட்டாவின் வாரிசாக இரண்டாம் இடத்தை வகித்துவந்த திரு முபோயா கொலை செய்யப்பட்டார். இக் கொலையிலிருந்து அரசாங்கத்தில் முன்னணி வகிப்பவர்களும் பாதுகாப்பாக வாழமுடியாதென்பது தெரியவந்தது.

இந்தக் கொலைகள் கென்யா அரசியலில் எதிர்காலக் கொள்கைகளை வகுக்க வழிவகுத்தன. அனைத்துலகமும் அறிந்திருந்த கென்யா நாட்டின் வெளிநாட்டமைச்சரான திரு றோபேட் அவுகோ ( Robert Ouko ) 1990ம் ஆண்டு மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டதே திரு மொய்யின் தற்போதைய இன்னல்களுக்குக் காரணமாகவுள்ளது. திரு அவுகோவும் லுவோ இனத்தைச் சேர்ந்தவராவர். மக்களின் நன்மதிப்பைப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஜே. எம். கரியூகி (J.M.Kariuki) 1975ஆம் ஆண்டு அரசியல் காரணத்துக்காகவே கொலை செய்யப்பட்டவர் என்றும் அதில் நடுவன் அரசாங்கமும் சம்பந்தப்பட்டுள்ளதென்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கிக்கியூசு இனத்தைச் சேர்ந்த தலைமைப்பீடத்துக்கு அச்சுறுத்தலாகத் திரு முபோயா கருதப்பட்டார். அதேபோன்று திரு கரியூகியும் கென்யாட்டா குடும்பத்தினரின் ஊழல்களை வெளிக்கொணர விட்டுக்கொடாது பாடுபட்டவராவர். திருவாளர்கள் முபோயாவினதும், கரியூகியினதும் கொலைகளுக்குப்பின்னர் நடந்த வன்செயல்களைப் போலவே 1990லும் நடந்த வன்செயல்கள் இருந்தன.

திரு மொய் நெடுங்காலமாகப் பதவியில் இருந்தபோதும் திரு கென்யாட்டாவைப்போல் மதிப்பைப் பெறவில்லை. இவர் சிறுபான்மை இனமான கலென்சின் (Kalenzin) இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் இதற்கொரு காரணமாகும். இவர் ஆட்சிக்கு வந்த நாள் முதல் இரு பெரும்பான்மை இனங்களின் சமநிலையைப் பேணுவதோடு மற்றைய சிறுபான்மை இனங்களோடும் உறவை வளர்த்து வந்துள்ளார். ஆனால் 1970ம் ஆண்டிலிருந்து அடங்கிப்போயிருந்த லூவோ இனத்தவரின் எதிர்ப்புக்கள் அவுகோவின் கொலையுடன் மீண்டும் தீவிரமடையத் தொடங்கின.

அங்கிளிக்கன் தேவாலயங்களின் தலைவரும் ஆளும் கட்சியின் அரசியலில் அதிருப்திகொண்டவர்களில் ஒருவருமான ஆண்டகை அலெக்சாண்டர் முகே ( Bishop Alexander Muge )

அவர்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதும் திரு மொய்யிற்கு இந்த ஆண்டு அரசியலில் பெரும் தலையிடியை கொண்டு வந்தது. அத்துடன் இக்கொலை இந்தப் பாதிரியாரின் இனத்தவர்களான லூகியா (Luhiya) இனத்தவர்களையும் இவருக்கு எதிராகச் செயற்படச் செய்ததோடல்லாமல், இவருக்கெதிரான அபிப்பிராயங்களையும் வெளிவரச் செய்தது. கிறிஸ்தவர்கள், ஆட்சியாளர்களை எதிர்த்ததுமல்லாமல், தங்கள் மேலை நாட்டுத் தலைநகரத் தொடர்புகளால், கென்யாவிற்குக் கிடைக்கும் வளர்ச்சி உதவிகளை மனித உரிமைமீறல்களோடு தொடர்புபடுத்த வகைசெய்தனர். கிறிஸ்தவ மதகுருமார்களும் சனநாயகத்தை வளர்ப்பதில் தற்போது முன்னணியில் நிற்கின்றனர்.

கென்யா நாட்டு மக்கள் இரகசியமாக வாக்களிப்பதைத் தடைசெய்யும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சட்டத்தைத் திரு மொய் 1986ல் கொண்டுவந்தபோது கத்தோலிக்க மதக்குழுக்கள் எல்லாம் சுறுசுறுப்படைந்தன. 1986ம் ஆண்டு, கென்யா கத்தோலிக்கத் தேவாலயங்களின் தேசிய சபை நடத்திய மகாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் இந்தச் சனநாயக எதிர்ப்புச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள்.

தொல்லைகள் இருந்தபோதிலும் புரட்டத்தாந்திய குருமார்களும், கத்தோலிக்கக் குருமார்களும் தங்கள் பிரசங்க மேடைகளிலிருந்து, கென்யாவின் தனிக்கட்சி ஆட்சிமுறையை எதிர்த்து விமர்சித்து வந்ததன் மூலம் மக்கள் மனதில் போராட்ட உள்ளுணர்வை உருவாக்கினார்கள். அரசியலில் மாற்றம் கொண்டுவரப் பாடுபடுகின்ற வேறுபல அமைப்புக்களும் இருக்கின்றன. 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இராணுவத்தைச் சேர்ந்த சிலர் ஒருங்கிணைந்து அரசாங்கத்தை வீழ்த்த எடுத்த நடவடிக்கையை திரு. மொய் ஈவிரக்கமின்றி முறியடித்தார். இதனால் சில மறைமுகமான இயக்கங்கள் தோன்றத் தொடங்கின. இவற்றில் 'முவாகென்னியா' (Mwakenya) என்ற இயக்கம் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு பொதுவுடமை அரசாங்கத்தை உருவாக்கும் நோக்கில் இடதுசாரி லுவோ இனக் கல்விமான்களும், முற்போக்குடைய இளம் விமானப்படை மேலாளர்களும் ஒருங்கிணைந்து இந்த அதிரடிப் புரட்சியை மேற்கொண்டனர். (கென்யா தேசிய விடுதலை முன்னணி (Union of Nationalists to Liberate Kenya)

என்ற கருத்துடைய கட்சியே. கென்யாவின் சுவாகிளி (Swahijl) மொழியில் மிவாகென்யா என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கட்சி மாக்சிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அத்தோடு நாட்டில் நிலவும் ஊழல்களையும், எதேச்சாதிகார ஆட்சியையும் இல்லாதொழிப்பதும் இக்கட்சியின் இலட்சியங்களாகும்.

கடந்த சில மாதங்களாக அரசியலில் தாராள மனப்போக்குத் தென்படுவதனால் மக்கள் வெளிப்படையாகவே அரசியல் அமைப்புக்களை உருவாக்குகின்றனர். புதிதாக அமைக்கப்பட்ட நடுநிலைக் கட்சிகளான சனநாயக மறுமலர்ச்சிக் கட்சி (Forum for the Restoration of Democracy) யும் சனநாயகக் கட்சி (Democratic Party) யும் கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியின் ஏகபோக ஆட்சியுரிமைக்கு அச்சுறுத்தலாகவுள்ளது.

ஆபிரிக்காக் கண்டத்தின் ஏனைய நாடுகளின் ஏகபோக செயலுரிமை செலுத்தும் கட்சிகளைப் போன்று செயலுரிமை நலன் விரும்பும் குடும்பங்களின் ஆதிக்கம் கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியிலும் வலுவடைந்துள்ளது. 1960ஆம் ஆண்டு கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணி உருவாக்கப்பட்டபோது அதன் கொள்கைகள் விரிவாக எல்லோருடைய அபிப்பிராயங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. சுதந்திரம் கிடைத்தபின் அதன் தலைவர்களான யோமோ கென்யாட்டா, மிபோயா ஆகயோரின் எதேச்சாதிகாரப் போக்கு வெளிப்படையாகத் தெரிய வந்தது, பொதுவுடமைக் கொள்கையில் நாட்டங்கொண்ட தலைவர்கள் குறிப்பாக ஒடிங்கா போன்றவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டு பின்னர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். தங்களின் தனிக்கட்சி ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஒரேயொரு எதிர்க்கட்சியான கென்யா ஆபிரிக்க சனநாயக முன்னணி (Kenya African Democratic Union) இரண்டகமான முறையில் 1964ஆம் ஆண்டு கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியுடன் இணைக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டில் ஒடிங்காவின் கென்யா மக்கள் முன்னணி K. P. U. தடைசெய்யப்பட்டு தனிக்கட்சி ஆட்சி கொண்டுவரப்பட்டது. 1982ஆம் ஆண்டி யூலை மாதம் கென்யா ஒரு தனிக்கட்சி ஆட்சி நடத்தும் நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதோடல்லாமல், கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியை சட்டவாக்கங்கொண்ட ஒரேயொரு கட்சியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது,

கென்யாட்டாவின் ஆட்சிக்காலத்திலும் ஊழல்கள் மலிந்து காணப்பட்டன. ஆனால் 1978ஆம் ஆண்டில் திரு. மொய் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த ஊழல்கள் பெரிய அளவில் வளரத் தொடங்கின. சனாதிபதியைச் சூழவுள்ள ஒரு சிறு அதிகாரக் கும்பல் கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியின் ஆதிக்கம் செலுத்தியதோடல்லாமல் தங்கள் கொள்கைகளை எதிர்த்து விமர்சிப்பதையும் அவர்கள் சகித்துக்கொள்ளவில்லை. கட்சித் தேர்தல்களிலும் பாராளுமன்றத் தேர்தல்களிலும் காணப்பட்ட தில்லுமுல்லுகள் கட்சியையும் அதன் தலைமைப் பீடத்தையும் மக்களிடமிருந்து வேறுபடுத்தியது, 1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து செல்வாக்கு மிக்க ஆளும் கட்சி அரசியல் வாதிகள் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினர். கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியில் இருந்து கொண்டே இந்த எதிர்ப்பைத் தெரிவித்தவர்களில் திருவாளர்கள் சார்ள்ஸ் றூபியா (Charles Rubia) மார்ட்டின் சிகுகு (Martin-Shikuku) கென்னத் மதிபா (Kenneth Matiba) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். 1988ஆம் ஆண்டில் இதை அறிந்த சனாதிபதி, நீதிபதிகளை நீக்குமளவுக்கு தனது செயலுரிமைகளை அதிகரித்துக்கொண்டார். ஆனால் பொருளாதார வீழ்ச்சியும், மாணவர்களினதும், தொழிலாளர்களினதும் அமைதியின்மையும், மேலை நாடுகளின் அழுத்தங்களும் அரசாங்கத்தை இந்நடவடிக்கைகளில் பின்னடைவுகொள்ளச் செய்தது.

பலகட்சித் தேர்தல் முறையை அறிமுகஞ்செய்யப்போவதாக திரு. மொய் டிசம்பர் மாதத்தில் அறிவித்தது எதிர்க்கட்சியாளர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. எதிர்க்கட்சிகள் ஒழுங்கான அமைப்பாக இல்லாததால் திடீரென தேர்தல் நடத்த நடவடிக்கை எடுத்தால் தனது கட்சி முன்னணியில் வரும் எனத் திரு. மொய் நம்பினார். அவரது ஆட்சியில் முன்னணி வகித்த கிககியூசு இனத்தவர்கள் அதிலிருந்து வெளியேறியது அவரின் நினைப்புக்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. (டிசம்பர் மாதத்தில் 5 அமைச்சர்கள் அவரது ஆளும் கட்சியிலிருந்து விலகினர். திரு. மொய் அவர்களின் அமைச்சர்களின் இரண்டாம் இடத்தை வகித்து வந்த கிக்கியு இனத்தைச் சேர்ந்த திரு. மிவாய் கிபாகி (Mwai Kibaki) சனநாயகக் கட்சியை உருவாக்கினார். இந்நடவடிக்கை கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணிக்கு கிக்கியுஇன மக்களிடையே இருந்துவந்த ஆதரவை வெகுவாகக் குறைக்கும்.

''கென்யா மக்களால் அன்பாக 'இரட்டை ஓ' (Dohble O) என அழைக்கப்படும் பழம்பெரும் அரசியல்வாயான ஒகிங்கா ஒடிங்காவே இப்போது உன்னிப்பாகக் கவனத்திற் கொள்ளப்பட

வேண்டியவராவர். கென்யா நாட்டின் முதல் உபசனாதிபதியான 80 வயதை நிரம்பிய திரு. ஒடிங்கா எதிர்க் கட்சியான சனநாயக மறுமலர்ச்சிக் கட்சியின் தலைவராக இருக்கின்றார். இவர் 1966இல் இருந்து கென்யா ஆபிரிக்க தேசிய முன்னணியில் அதிருப்தி கொண்டவர்களில் ஒருவராவர். திரு. ஒடிங்கா மக்களால் நன்கு மதிக்கப்படுவதால் அவரே பல இன மக்களை ஒருங்கிணைக்கக்கூடியவராவர். 1998ஆம் ஆண்டு அருசா (Arusha) வில் நடந்த ஆபிரிக்க நாடுகளின் இணைப்புக் கூட்டத்தில் ஆபிரிக்க நாடுகளில் மக்கள் பங்களிப்பு (African Charter on Peoples Participatlon) என்ற சாசனத்தை உருவாக்கி ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள நாடுகளில் சனநாயகம் வளர வித்திட்டவர்களில் இவரும் ஒருவராவர்.

சனநாயகத்துக்காக முப்பது ஆண்டுகளாக திரு. ஒடிங்கா பாடுபட்டு வருவது எல்லோருக்கும் நன்கு தெரியும். தனிக்கட்சி ஆட்சியிலிருந்து சனநாயக வழிக்கு மாற்றி கஷ்ட நிலையுள்ள நாட்டை வழிநடத்திச் செல்வதற்குத் திரு. ஒடிங்கா முற்போக்கு வாதக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் எடுத்த மக்களைக் கவரும் மேடைப் பேச்சுக்களைத் தற்போது தவிர்த்துக்கொண்டு மேற்குலக வங்கியாளர்களின் ஆலோசனைகளின்படி திரு. மொய் அவர்களின் அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்லப்போவதாகக் கூறிவருகின்றனர்,

ஆனாலும் எதிர்க்கட்சியினரிலும் ஒற்றுமை காணப்படவில்லை. அரசியலில் இனவாதக் கொள்கை மாயத் தோற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. தேவையற்ற விடயங்களில் தலையிட்டு எதிர்க்கட்சிகள் குழப்பநிலையில் உள்ளன. கென்யா ஆபிரிக்கத் தேசிய முன்னணியிலிருந்து கிக்கியூசு இனத்தவர்கள் விலகிச்சென்றதால், அவர்கள் கிக்கியூசு இனத்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சியைத் தோற்றுவிக்கப்போகின்றார்கள் என்ற வதந்திகள் நைரோபியில் வளர்ந்துகொண்டேவருகின்றன. 1979ஆம் ஆண்டில் கென்யாட்டா இறந்த பின்னர் அதிகமான கிக்கியூசு இன அரசியல்வாதிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தனர். இவர்கள் இப்போது முக்கிய எதிர்க்கட்சிகளாக சனநாயக மறுமலர்ச்சிக் கட்சியினதும் தலைமைப்பீடங்களைக் கைப்பற்ற முனைந்து வருகின்றனர்.

கென்யாவில் நாற்பது முக்கிய இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பொழுது திரு. ஒடிங்காவின் தலைமையின் கீழுள்ள சனநாயக மறுமலர்ச்சிக் கட்சியே சகல இன

மக்களினதும் பங்களிப்பைக் கொண்டுள்ளது. நாட்டுப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் இக்கட்சியின் கூட்டங்களுக்கு வருகைதரும் மக்கள் தொகையைக் கணக்கெடுத்து நோக்குகையில் திரு. ஒடிங்காவின் கட்சி தேர்தல் பரப்புகையில் முன்னணியில் உள்ளதாக தோன்றுகின்றது. இதைப்பார்க்கும்பொழுது திரு. மொய் மீளவும் சனாதிபதியாக வருவது மிகவும் கடினம். அதனால் சனநாயக வழிமுறைகளைத் தடைப்படுத்துவதற்கு அரசாங்கம் இராணுவத் தலையீட்டை உருவாக்கலாம் என எதிர்க்கட்சியினர் பயப்படுகின்றனர்.

எதேச்சாதிகார ஆட்சி நடைபெற்றுவந்த ஒரு நாடு சனநாயக வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது கடினமாக இருக்கும். பல கட்சி அரசியல் முறை இனவாதம், பிரதேசவாதம், ஆகியவற்றை முறியடிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். எதேச்சாதிகாரம் முடிவுற்றதும் நாடுகள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்ததற்கு அயல் நாடுகளான எதியோப்பியாவும், சோமாலியாவும் உதாரணங்களாகும். ஆனால் மற்றைய நாடுகளைப் போலல்லாது கென்யா 25 ஆண்டுகள் உள்ளூர் உற்பத்திப் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறியும் மக்கள் தொகை வளர்ச்சிவீதமான 4% வீதத்திலும் பார்க்க தேசிய பொருளாதார வளர்ச்சி கூடிய நாடாகவும் இருக்கின்றது. கோப்பியின் விலைச்சரிவு காரணமாக பொருளாதாரம் பின்னடைவு அடைந்துள்ளது. இதனால் அரசியலில் நிலையான தன்மை குறைவதோடல்லாமல், அரசாங்கத்தை மேம்படச் செய்பவர்களின் பணியும் கடினமாகவுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக நடந்துவரும் வன்முறை காரணமாக உல்லாசப் பயணிகளின் வருகைமூலம் பெறும் வருமானம் குறைந்துள்ளதால் செல்மதி நிலுவைப் பற்றாக்குறை 4% சதவீதத்தை அடைந்துள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கென்யாவின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தால், பல கட்சி அரசாங்கங்கள், சனநாயகம் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல் போன்றவைகள் மற்றைய ஆபிரிக்க நாடுகளில் வளர ஊன்றுகோலாக அமையும்.

★ ★ ★

# பெருமளவில் குருதி சிந்த நேரிடும்

( நியூஸ் வீக் - 6. 4. 1992 )

துருக்கியிலுள்ள குர்திசு இனத்தவர்கள் அங்காராவுக்கு எதிரான கிளர்ச்சிகளை முனைப்புடன் செயல்படுத்துகின்றனர். ஈராக்கின் பனிக்கட்டிகள் படர்ந்த மலைப்பகுதிகளிலிருந்து வந்த அவர்கள் சுதந்திரம்பெறுவதற்காகத் துருக்கி அரசின் கண்களுக்குப் புலப்படாமல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றார்கள் எனக்கூறுகின்றார். குர்திசு இனத் தலைவர் திரு. அப்துல்லா ஒகலன் ( Abdullah Ocalan ) அவர்கள், கடும் கரந்தடிப் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் துருக்கியிலுள்ள குர்திசுதான் மையப்பகுதியான தென்கிழக்குத் துருக்கியில் எறிகணைகள், ஏவுகணைகள், துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல்களைத் தொடங்கினர். மார்க்சீய குர்திசு தொழிலாளர் கட்சியைச் (Marxist Kurdish Workers Party-pkk) சேர்ந்த முகமுடி அணிந்த உறுப்பினர்கள் அரசாங்கத்திணைக்களங்களையும், இராணுவ விடுதிகளையும் தாக்கினர். இத்தாக்குதல்கள் நாடு பூராவும் பரவியதுடன், கிளர்ச்சியாளர்களின் அனுதாபிகள் இசுதான் பூலிலுள்ள ( Istanbul ) ஒரு காவல் நிலையத்தையும், வியாபாரப் பேட்டைகளையும் குண்டு வீசித் தாக்கியதோடல்லாமல், மறைந்திருந்து தாக்கி இரு இராணுவப் புலனாய்வு மேலாளர்களையும் கொன்றனர். இராணுவ அத்துமீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள துருக்கிய தூதரகங்கள், வங்கிகள், வானூர்தி நிலையங்கள் மீதும் தாக்குதலை நடாத்தினர். இராணுவம் உடனடியாகத் தயார் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. வட ஈராக்கிலுள்ள கிளர்ச்சியாளர்களின் பலம்பொருந்திய நிலையங்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட இடங்களைக் குண்டுவீச்சு வானூர்திகள் குண்டு வீசித்தாக்கின. இராணுவத்தினர் உள்ளூர் மக்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைத் தெருக்களில் நடந்த நேரடி மோதல்களில் ஈடுபடுத்தினர். இது ஒரு போர் என இதை வர்ணித்தார் துருக்கியின் பிரதம மந்திரி திரு. சுலைமான் தெமிரேல்( SulaymanDe mirel ) அவர்கள்.

சில நாட்களுக்குள் இராணுவம் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. வார இறுதியில் கிளர்ச்சியாளர்களில் அதிகமானோர் மறைவிடங்களுக்குள் புகுந்து கொண்டனர். இத்

தாக்குதல்களில் நூறுபேர்வரை இறந்துள்ளனர். இரு பகுதியின ரும் இவ்வமைதி நீடிக்குமென எதிர்பார்க்கவில்லை. தன்னாதிக் கமுள்ள சுதந்திரமான தாய்நாடொன்றை அமைப்பதற்காக எட்டு ஆண்டுகளாக குர்திசு மக்கள் தாக்குதல்களில் கடைசியாக நடந்த தாக்குதல் இது ஆகும். அங்காரா (Ankara) அரசாங்கம் இந் தப் பலமான கிளர்ச்சிகளை அடக்குவதற்கு நடவடிக்கை எடுப் பதற்கு, மனித உரிமை மீறல்களில் அக்கறை செலுத்தும் மேலை நாட்டு அரசாங்கங்களின் கோரிக்கைகளுக்கு இடையில் வழி தெரியாமல் தடுமாற்றம் அடைகின்றது.

## மதச்சார்பற்ற நண்பன்

துருக்கியின் நிலைப்பாட்டில் ஈடாட்டம் உடனடியாகப் புல னாகியது. மேற்குலக நாடுகளில் துருக்கியின் உற்ற நண்பனாக இருப்பதும், வர்த்தகரீதியில் முக்கிய இடத்தை வகிப்பதுமான ஜெர்மனி, துருக்கியின் அடக்குமுறை அட்டூழியங்களை உடனடி யாகக் குறைகூறியதோடல்லாமல், தான் வழங்கும் ஆயுதங்கள் குர்திசு கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக உபயோகிக்கப்படுகின்ற தெனக் கூறி அந்நாட்டுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை உடனடி யாக நிறுத்திவைத்தது. இதற்கு மாறாக துருக்கியின் நடவடிக் கையை அமெரிக்கா பாராட்டியுள்ளது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் அச்சுறுத்தலுக்கு எதிராக மதச்சார்பற்ற கொள்கை யைக் கடைப்பிடிக்கும் துருக்கியை வளைகுடாப்போரின் பின் னர் அமெரிக்கா தனது உற்ற நண்பனாக நினைக்கின்றது. இந் தக் கிளர்ச்சிகளைப் பற்றி அமெரிக்கா அக்கறைகாட்டாது இருந் தால், ஈராக்கிய சனாதிபதி சதாம் குசேன் சென்ற ஆண்டு எப் படிக் குர்திஷ்கிளர்ச்சியாளர்களை அடக்கிய போதுமனித உரி மைகள் பிரச்சினைகள் தோன்றியதோ அதேபோல் துருக்கியும் குர்திசு கிளர்ச்சியாளர்களை அடக்கினால் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் தோன்றும் எனச்சில அமெரிக்கப் பகுப்பாய்வா ளர்கள் கூறுகின்றார்கள்.

சென்ற வாரத்தில் நடந்த கிளர்ச்சிகள் அரசியலிலும் சொந்த அடிப்படையிலும் துருக்கியப் பிரதமர் திரு. டெமிரேல் அவர்களுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. குர் திசு மொழி உபயோகத்துக்கு முன்னைய துருக்கியத் தலைவர் கள் விதித்திருந்த தடையை இவர் நீக்கியதோடல்லாமல், தென் கிழக்குத் துருக்கியிலுள்ள பின்தங்கிய நிலப்பரப்புக்களை வள மிக்கவைகளாக ஆக்குவதற்கு 30 பில்லியன் டொலர்கள் மதிப் புள்ள திட்டங்களையும் உருவாக்கியிருந்தார். இந்தப் பிரச்

சினையை இராணுவ ரீதியில் அல்லாமல் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்குத் திரு. தெமிறேல் உறுதியளித்திருந்தமைக்காகத் துருக்கிய மக்கள் தொகையான 57 மில்லியன் மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினரான குர்திசு இன மக்களால் அவர் பாராட்டப்பட்டிருந்தார். ஆனால் குர்திசு இன மக்களின் முக்கிய கோரிக்கையான முழுச் சுதந்திரக் கோரிக்கையைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த அவர் மறுத்துள்ளார். இத்துடன் அரசபடைகளின் அரவணைப்புடன் செயல்படும் கொலைக்கும்பல்கள் 1991ஆம் ஆண்டிலிருந்து 60 முக்கிய குர்திசு இனத்தலைவர்களைக் கொலை செய்துள்ளனர் எனக் குர்திசு இன மக்கள் நம்புகின்றனர். சென்ற வாரத்தில் நடந்த பயங்கர அடக்குமுறைகள் குர்திசு இன மக்களின் மனதில் ஒருவித பய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மனிதாபிமான முறையில் குர்திசு இனத்தவர்களின் பிரச்சினைகளை அணுகுவேன் எனத் திரு. தெமிறேல் கூறியுள்ளார். ஆனால் அவரின் தற்போதைய நடவடிக்கைகளை உற்றுநோக்கும்போது அவர் எங்களை முற்றாக அழிக்கத் திட்டமிட்டுள்ளார் என்பது புலனாகின்றது எனக் கூறுகின்றார் குர்திசு இனத் தலைவரும், தற்போது லெபனானிலுள்ள பேக்கா பள்ளத்தாக்கில் தனது தலைமையகத்தை அமைத்திருப்பவருமான திரு. ஒகலன் அவர்கள்.

தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அமைதியின்மையால் திரு. தெமிறேல் அவர்களின் ஐந்துமாத கால நடுநிலைமைக் கூட்டரசாங்கம் பலமிழப்பதோடல்லாமல் அவரின் தற்போதைய சனநாயகச் சீர்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து புதிய நாடுகளாக உருவாகியுள்ள இஸ்லாமிய நாடுகளை மதச்சார்பற்ற சிறந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளாக உருவாக்கப் பாடுபடும் துருக்கியின் நிலைப்பாட்டுக்கும் பின்னடைவு ஏற்படலாம். இத்தோடு ஈராக், சிரியா, ஈரான் ஆகிய நாடுகளும் தங்கள் நாடுகளிலுள்ள குர்திசு இன மக்கள்மீது அரசியல், இராணுவ ரீதியான அடக்குமுறைகளை முனைப்புடன் செயல்படுத்த இது வழிவகுக்கும்.

இங்கு சமாதானம் அண்மையில் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. ஈராக்குடனான 290 கல் எல்லை நிலப்பரப்பிலிருந்து குர்திசு கரந்தடிப் படையினர் ஊடுருவ முடியாதவாறு அந்த

எல்லை ஓரம் இராணுவத்தைப் பலப்படுத்தப்போவதாகத் திரு. தெமிறேல் கூறியுள்ளார். எதிர்வரும் கோடை காலத்தில் 500 பேர்கொண்ட துர்கிசு பாராளுமன்றத்தை உருவாக்கப் போவதாகக் கூறும் திரு: ஓகலன், தனது இராணுவ நடவடிகைக்களையும் முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றார். ஒரு இலட்சம் பேர் இறந்தாலும் தான் கவலைப்படப்போவதில்லை எனக் கூறும் திரு. ஓகலன் பெருமளவில் குருதிசிந்த நேரிடும் எனவும்கூறுகின்றார். அவர் கூறுவதுபோல் நடக்கும் என்ற நிலையே இருக்கின்றது.

ஜனநாயகத்தில் மக்கள் தாங்கள் நம்பும் நல்லவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்; தேர்ந்தெடுத்தபின் அந்தத் தலைவர் சொல்லுகிறார் ''வாயை மூடிக்கொண்டு எனக்கு அடங்கி நடந்து கொள்ளுங்கள்.'' மக்களோ கட்சியோ அவர்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் தலையிட முடியாது.

—மாக்ஸ் வெபர்

# ராஜீவ் இறந்த இடம் கோயிலுக்குச் சொந்தமானது

(ராணி 17.5.92)

ராஜீவ் பலியான இடம், கோயிலுக்குச் சொந்தமானது. அங்கே நினைவாலயம் எழுப்பக்கூடாது என்று ஜீயர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். இது பற்றி ஜீயரிடமே கேட்கலாம் என்று மடத்துக்குச் சென்றோம்.

(பெரும்புதூர் கோவில் தர்மகர்த்தா எதிராஜஜீயர்)

புலித்தோல் இருக்கையில் சாய்ந்து பக்தர்களிடம் பேசிக் கொண்டிருந்த ஜீயர், நம்மைக் கண்டதும் மற்றவர்களை வெளியே அனுப்பிவிட்டார். அவர் சொன்னார்—

## முதல் கோணல்!

''கோவில் நிலத்தில் அரசியல் கூட்டங்கள் போடக்கூடாது என்பது தேர்தல் சட்டம். ஆனால், அதை மீறி காங்கிரசுக் காரர்கள் இங்கே கூட்டம் போட்டார்கள். அதுபற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல, முதல் தவறைத் தொடர்ந்து முழுவதும் தவறாகவே நடந்துவிட்டது.

இப்பொழுது அந்த இடத்தில் நினைவாலயம் கட்டப் போவதாகச் சொல்கிறார்கள். அதையும் முறையாகச் செய்யவில்லை. எனது ஒப்புதல் இல்லாமலே, அந்த இடத்தை ரூ. 8 இலட்சத்துக்கு பதிவு செய்திருக்கிறார்கள். இதை எதிர்த்து வழக்குப் போட்டேன். ஜீயர் சொல்கிறபடிதான் கேட்க வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கிறது.

## மறுப்பது ஏன்?

மறைந்த தலைவர்களுக்கு, அவர்கள் உயிர்நீத்த இடத்தில்தான் நினைவிடம் கட்டவேண்டும் என்பதில்லை. மகாத்மா காந்தி, பிர்லா மாளிகையில் சுடப்பட்டார். ஆனால் அவருக்கு ராஜ்காட்டில் நினைவிடம் கட்டியிருக்கிறார்கள். இந்திரா காந்தி,

ஜன்பத்தெரு 10ஆம் எண் வீட்டில் கொல்லப்பட்டார். அவரது நினைவிடம் 'சக்திசெல்' என்ற இடத்தில் உள்ளது. லால்பகதூர் சாஸ்திரி ருசியாவில் உயிர் நீத்தார். அவருக்கு டெல்லியில் நினைவாலயம் கட்டினார்கள்.

ராஜீவ் காந்திக்கு மட்டும், அவர் உயிர் துறந்த இடத்திலேயே நினைவாலயம் கட்டவேண்டும் என்று சொல்வது ஏன்? அது கோவில் நிலம் என்ற எண்ணம் கூட, சில காங்கிரசுக்காரர்களுக்கு இல்லாமற் போய்விட்டதே.

என்னைச் சமாதானப்படுத்த வாழப்பாடி இராமமூர்த்தி தூது அனுப்பினார். அவர் சார்பாக தண்டபாணி வந்து என்னைச் சந்தித்தார். வாழப்பாடியார் 'உங்களைப் பார்த்துப் பேச விரும்புகிறார். சம்மதம் தெரிவித்தால், அழைத்துவருகிறேன்.'' என்று சொன்னார்.

காங்கிரசுக்காரர்களைச் சந்திக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. ராஜீவ் சாவுக்குக் காரணமே அவர்கள்தான்! இருந்தாலும், மடாதிபதி என்ற முறையில் யாரையும் சந்திக்க மறுப்பது தவறு. எனவே 'சரி' சொன்னேன் - ஒரு நிபந்தனையுடன். 'வாழப்பாடியார் என்னை வந்து சந்திக்கட்டும். ஆனால், என்னை 'மெட்டல் டிடெக்டர்' வைத்துச் சோதனை போடக்கூடாது'' என்று சொன்னேன். இது வரை வாழப்பாடியார் இங்கு வரவில்லை.

## உயிர் துச்சம்

இப்படிப் பேசுவதால் எனக்கு மிரட்டல்கள் வருகின்றன. வெட்டுவேன்! குத்துவேன்! என்றார்கள்.

நான் உயிருக்குப் பயந்தவன் அல்ல! உயிர் எனக்குத் துச்சம்! துணிச்சலும், நேர்மையுந்தான் என் உயிர்மூச்சு.

இராணுவத்தில் 33 ஆண்டு பணிபுரிந்தவன் நான். அப்பொழுது உயிர் பிழைத்துக்கொண்ட என்னை, இப்பொழுது யாரும் அசைக்க முடியாது'' என்று ஆவேசமாகப் பேசினார் ஜீயர்.

★ ★ ★

# தமிழா தூங்கு!

## செந்தமிழ்!

*வந்தமொழியா ?*

*சொந்த மொழியா ?*

ஒரு 60 — 70 ஆண்டு இருக்கும். இந்த நூற்றாண்டின் தொடக்கம் என்று வைத்துக்கொள்ளுவோமே. அப்பொழுது —

மனு சாத்திரத்தின் மொழிபெயர்ப்புத்தான் திருக்குறள்!

வடமொழியில் பாணினி எழுதிய இலக்கணத்தைப் பின்பற்றித்தான் தொல்காப்பியம் எழுதப்பட்டது!

தமிழ்மொழியே வடமொழியான சமஸ்கிருத்தில் இருந்து பிறந்ததுதான்!

என்று எல்லாம், ஆராய்ச்சி என்ற பெயரில் கதைகள் கட்டிவிடப்பட்டன!

உடனே தமிழ் உணர்வு மிக்க தமிழ் அறிஞர்கள் வடமொழி, நூல்களைக் கற்றார்கள். மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தரப் பாரதியார் போன்ற தமிழ்ப் பெருமக்கள் -

ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறுவது, மனு. திருக்குறளோ உலகப்பொதுமறை. தமிழ்ப் பண்பாட்டில் எழுந்த தனி நூல்.

பாணினிய முறைக்குப் புறம்பான ஐந்திர முறையைத் தொல்காப்பியம் பின்பற்றியது. உலகிலேயே, எழுத்து, சொல், பொருள் இலக்கணம் கூறும் முதல் நூல் தொல்காப்பியந்தான்.

தமிழ் மொழி தமிழர்களின் சொந்த மொழி. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தமொழி. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே இலக்கண இலக்கிய வளம் பெற்றது என்று அவர்கள் ஆதாரப் பூர்வமாக நிறுவினார்கள். அவர்

களுக்கு முன்பே கூட இராசமஸ் இராஸ்க், எல்லீசு, கால்டுவெல் போன்ற மொழியியல் வல்லுனர்கள் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

## செய்யப்பட்டது

அதுமட்டுமேல்ல. "சமஸ்கிருதம்" என்ற வடமொழியே தமிழில் இருந்து தோன்றியதுதான் - தமிழர் படைத்துக் கொடுத்ததுதான் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது.

"சமஸ்கிருதம்" என்றாலே செய்யப்பட்டது என்று தான் பொருள்! ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது அவர்களின் நூல் என்று எதுவுமே கிடையாது! இந்தியாவுக்கு வந்தபின்தான் வேதங்கள் எழுதப்பட்டன. அதற்கு முன் வேதங்கள் எழுதப்படாமல், வாய் மொழியாக மட்டுமே இருந்தன. இந்தியாவுக்கு வந்த பின்பு தான் ஆரியர்கள் எழுத்துமுறையைக் கற்றுக்கொண்டார்கள். இதனால் தான் அவர்களின் நாலு வேதங்களிலும் எழுத்தைப்பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை.

ஆனால், தமிழனோ "அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று எழுத்தை இறைவனுக்கு ஈடாக அன்றே மதிக்கத் தொடங்கிவிட்டான். எழுத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன என்று "தொல்காப்பியம்" இலக்கணம் வகுத்தது.

## தலைகீழ் மாற்றம்

இன்று சக்கரம் மீண்டும் தலைகீழாகச் சுழலத்தொடங்கியிருக்கிறது!
இன்றைய தமிழனிடம் தமிழ் உணர்வு இல்லை
இதனால் புதுத் "தம்ளர்"கள் கும்மாளமடிக்கிறார்கள்
ஒரு புதுத் "தம்ளர்" எழுதுவதைப் பாருங்கள் —

"இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியில் கி.மு 6 ஆம் நூற்றாண்டுக்கு முன் எந்தவித எழுத்துமுறையும் இருந்ததில்லை என்று மேலைநாட்டு தொல் எழுத்து அறிஞர்கள் கருதுகின்றனர்.

சிந்து சமவெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் காணப்படும் சில குறியீடுகளுக்கும், பிற்காலத்தில் தோன்றிய அசோகர் பிராமி எழுத்துக்களில் காணப்படும் சில எழுத்துக்களுக்கும் ஒற்றுமையிருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்த எழுத்துமுறைக்கு ''அசோகர் பிராமி'' என்று பெயர் இந்தியா முழுவதும் ஏறத்தாழ கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஒரே முறையான எழுத்துமுறை பரவியிருந்தது என்று தொல்லியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தமிழ் பிராமி எழுத்துமுறை தமிழ்மொழிக் கல்வெட்டுக் களைச் செதுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. தமிழ்க் கல் வெட்டுகளில் பிராகிருதச் சொற்களும் கலந்துள்ளன.

தமிழ் பிராமியைத் 'தென் அசோகர் பிராமி' யென்றும் அழைப்பர்.

தமிழ் பிராமி பற்றி பல மாறுபட்ட கருத்துக்கள் உள் ளன!

## வரலாற்றுப் புரட்டு!

இதில் உள்ள ஒவ்வோர் எழுத்தும், திட்டமிட்டு எழுதப்பட்ட வரலாற்றுப் புரட்டு ஆகும்!

இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியில் கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன் எந்த எழுத்துமுறையும் இருந்ததில்லை யென்று எந்த மேல்நாட்டு அறிஞன் மட்டுமல்ல கீழ்நாட்டு அறி ஞனும் கூறியது இல்லை! கூறவும் முடியாது!

அன்று இமயத்தையும் தாண்டி கிழக்குப் பாரசீகம்வரை தமி ழர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் மொழி வழங்கியது. இதற்கு சிந்து வெளி மட்டும் ஆதாரம் அல்ல; இன்றும் பலுசித்தானில் திரா விடமொழி பேசப்படுகிறது! இன்று வடக்கே தாழ்த்தப்பட்டவர்க ளாக - தீண்டத்தகாதவர்களாக-அரிசனங்களாக இருக்கும். பெரும் பாலானவர்கள் ஆதிதமிழர்களே! அவர்கள் இடையே திராவிட மொழியையும், திராவிடப் பண்பாட்டையும் இன்றும் காண முடி யும்.

சிந்துவெளி எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்கள். உலகில் முதன்முதல் தோன்றியவை ஓவிய எழுத்துக்களே. சிந்துவெளி ஓவிய எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களே. அந்த எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலேயே அவை தமிழ் எழுத்துக்கள் தான் என்பதை அறிஞர்கள் உறுதிப்படுத்தினார்கள். இன்றும் ருசிய வல்லுனர்கள் கணனிகளைப் பயன்படுத்தி அவை தமிழ் எழுத்துக்களே என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழில் "எழுத்து" என்பதற்கு "ஓவியம்" என்றும் ஒரு பொருள் உண்டு. தமிழ் எழுத்துக்களின் தொடக்கம் ஓவிய எழுத்துக்களே என்பதைத்தானே இது காட்டுகிறது.

உண்மை இவ்வாறு இருக்க, வட இந்தியாவில் கி. மு 6ம் நூற்றாண்டுக்கு முன் எந்தவித எழுத்துமுறையும் இல்லை என்று சொல்வது ஏன்? அங்கே தமிழ் எழுத்து இருந்தது என்பதால் தானே.

## திராவிடர்

ஆரியர் — திராவிடர் என்ற சொற்களைப் பார்த்து யாரும் அஞ்சவேண்டியது இல்லை. 'இதுவெள்ளைக்காரன் ஏற்படுத்திய பிளவு' என்று எண்ணவேண்டியதும் இல்லை.

தமிழர்களுக்கு ஆரியர் வைத்த பெயர்தான், "திராவிடர்" "திராவிட" என்பதே "திரவம்" (தண்ணீர்) என்ற வடமொழிச் சொல்லில் இருந்து பிறந்ததுதான். மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவது போல, வடக்கே இருந்து தெற்கே விரட்டி ஓட்டப்பட்ட தமிழர்களைத் "திராவிடர்" என்று ஆரியர் சொன்னார்கள். மனுசாத்திரத்திலும், 'ஐந்தாம் வேதம்' என்று சொல்லப்படும் மாபாரதத்திலும் 'திராவிடர்' என்ற சொற்கள் இருக்கின்றன.

சிந்துவெளி தமிழர்களின் காலம், கி.மு.30ம் நூற்றாண்டு. அங்கே ஆரியர்கள் குடியேறியது. கி. மு. 15ம் நூற்றாண்டு. அப்பொழுது சிந்துவெளியில் தமிழர்கள்தான் வாழ்ந்தார்கள் என்பதற்கு 'ரிக்' வேதப்பாடல்களிலேயே ஆதாரம் இருக்கிறது. வாசிவன் என்ற தமிழ்மன்னன் அரியூபியா என்ற ஊரை ஆண்டு கொண்டு இருந்தான் என்ற குறிப்பு ரிக் வேதத்தில் இருக்கிறது. அந்த அரியூபியாதான் இன்றுசிந்துவெளிப் பண்பாட்டின் தொட்டிலாக விளங்கும் அரப்பா என்பதை வேத ஆராய்ச்சி அறிஞா குருவிக்கரம்பை வேலு தெளிவுபடுத்தியுள்ளார்.

## தமிழில் தோன்றியதே!

சிந்துவெளி எழுத்துக்களுக்கும் அசோகரின் கல்வெட்டு (பிராமி) எழுத்துக்களுக்கும் ஒற்றுமையிருந்தால், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனென்றால் தமிழில் இருந்து தான் பிராமி தோன்றியது என்றும் ஒரு கருத்து இருக்கிறது என்பதைப் பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

அசோகர் கல்வெட்டுக்கள் " பிரகிருதி " என்ற மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த மொழி தமிழில் இருந்து பிறந்தது என்று மொழி நூல் அறிஞர் டி. என். சுப்பிரமணியன் சொல்லுகிறார். அம்மொழி எல்லா மக்களும் புரிந்து கொள்ளும் அளவுக்குப் புழக்கத்தில் இருந்தது. அது பேச்சுமொழியே. அந்த மொழியில் கல்வெட்டுக்களைப் பொறிக்கப் பிராமி எழுத்துக்களை அசோகர் பயன்படுத்தினார்.

" பிரகிருதி " என்றால் இயற்கை என்று பொருள். அதிலிருந்து செய்யப்பட்டதால் " சமஸ்கிருதம் " என்று வடமொழி பெயர் பெற்றது. சமஸ்கிருதத்தைக் கீழ் மக்களும் பெண்களும் படிக்கக் கூடாது என்று ஆரியர்கள் தடுத்தார்கள். இந்த விவரம் " தமிழ்க் கலைக் களஞ்சிய" த்தில் இருக்கிறது.

தங்களைத் தேவர்கள் என்று கூறிக்கொண்டே ஆரியர்கள் தங்களின் எழுத்து மொழியாக சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினார்கள். அப்படியிருந்தும், அவர்களின் முதல் வேதமான ரிக் வேதம் பல பல மொழிகளில் எழுதப்இட்ட பாடல்களின் தொகுப்பே ஆகும்.

## இதுவும் தவறே

பிராமி எழுத்துக்கள் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. அதே நூற்றாண்டில் தோன்றியதுதான் ஆதிகாவியமான வால்மீகி இராமாயணம். அந்த இராமாயணத்தில் பாண்டியர்களின் தலைநகரான கபாடபுரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழர்களின் முதல் சங்ககாலம் அதற்கு பலநூற்றாண்டுகளுக்குமுந்தியது. குமரிக்கோடும் பஃறுளியாறும் கொடுங்கடல் கொண்டபொழுதுதான், இமயம் தோன்றியது, தமிழர்களும் தெற்கேயிருந்து வடக்கே வந்தார்கள். எனவே, பிராமியில் இருந்து தமிழ் தோன்றியது என்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல ஆகும்.

அசோகரின் காலம் கி. மு. 3ஆம் நூற்றாண்டு. அந்த நாளில் இந்தியா முழுவதும் ஒரே முறையான எழுத்து பரவியிருந்தது என்று சொல்லுவது வலுவில் இட்டுக்கட்டும் கதையாகும்.

அசோகர் காலத்துக்குப் பிறகுதான் தமிழில் கல்வெட்டுக்கள் தோன்றினவா ? அதற்கு முன்பு முன்பு தமிழ்க் கல்வெட்டுக்களே இல்லையா ? இருந்தன என்றால், எந்த மொழியில் ?

கொற்கை அகழ்வாய்வில் கிடைத்த தமிழ் எழுத்துக்கள் கி.மு. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் இயக்குநர் நடன காசிநாதன் சொல்லுகிறாரே; கழுகுமலைக் கல்வெட்டு கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முந்தியவை ஆயிற்றே! விழுப்புரத்தை அடுத்த கீழ்வாலைக் குன்றுகளில் காணப்படும் ஓவிய எழுத்துக்களும் சிந்துவெளி எழுத்துக்களும் ஒன்றே என்று தொல்லியல் ஆய்வு அறிஞர் பி.எஸ். சாமி உறுதிப்படுத்தியிருக்கிறாரே.

தமிழ்க் கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்களும் கலந்துள்ளனவாம். இருக்கட்டுமே; பிராகிருதமே தமிழில் இருந்து தோன்றியதுதானே.

பிராமி பேச்சு வழக்கில் வேறுபட்டது. எனவே, தென்பிராமி கீழ்பிராமி, மேல்பிராமி என்றெல்லாம் பெயர் பெற்றது. ஆனால், தென்பிராமிக்கு "தமிழ் பிராமி" என்றோ "தென் அசோகர் பிராமி" என்றோ பெயர் கிடையாது. வித்தியாசத்தின் விளிம்புவரைதான் தென்பிராமி விளங்கியது, அதிலிருந்து தோன்றியதுதான் மராட்டிய மொழி என்ற வரலாறு "தமிழ்க் கலைக் களஞ்சி"யத்தில் இருக்கிறது.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் "சமவாயாங்க சுத்தா" என்ற சமண நூல் எழுதப்பட்டது. அதில் இந்தியாவில் 18 மொழிகள் வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. அந்த 18 மொழிகளில் தமிழும் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (அவர்கள் தமிழைத் "தாமிலி" என்றார்கள். தமிழுக்கே உரிய "ழ்" வேறு மொழிகளில் இல்லாததே இதற்குக் காரணம்.

உண்மைகள் இப்படி இருக்க, அசோகர் காலத்துக்குப் பிறகுதான், கி.மு. 3ஆம் நூற்றாண்டில்தான் தமிழ் மொழியே தோன்றியது என்று கருத்துத் தோன்ற எழுதுவது என்றால், இந்தப் புதிய தம்ளர்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும். இந்தத் தைரியம் எப்படி வந்தது? தமிழன் தூங்கிக்கொண்டு இருப்பதால்தானே!

## திட்டமிட்டு எழுதப்பட்டது!

தமிழ் பிராமி குறித்துப் பல மாறுபட்ட கருத்துக்கள் உள்ளனவாம்.

மாறுபட்ட கருத்துக்கள் யாவை? யார் சொன்ன கருத்துக்கள்? ஒரு வரி உண்டா? சுட்டிக்காட்ட வேண்டாம்; தொட்டுக்காட்டினாரா? இல்லையே! மற்றக் கருத்துக்கள் எல்லாம் மேலைநாட்டுத் தொல் எழுத்தறிஞர்கள், அறிஞர்கள், தொல்லியல் அறிஞர்கள் கருத்துக்கள்; மாறுபட்ட கருத்துக்கள் எவனோ தெருவில் போகிறவன் சொன்ன கருத்துக்களா?

தமிழன் பழைமைச் சிறப்புக்கள் வேண்டுமென்றே மறைக்கப் பட்டுவிட்டன; திட்டமிட்டு தமிழ் மொழி இழித்தும் பழித்தும் கூறப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த ஒரு வரியே சான்று ஆகும்.

## நீக்கவேண்டும்

சரி இந்தப் புதுத் தம்ளர் இந்த அரிய பெரிய கருத்துக்களை எங்கே சொல்லியிருக்கிறார்?

அதுதான் கொடுமையிலும் கொடுமை

தமிழ்நாட்டில் தமிழ் படிக்கும் 9ஆம் வகுப்புப் பிள்ளைகளுக்குக் ''கட்டுரை மலர்கள்'' என்ற துணைப் பாடநூலை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அதில்தான் ''எழுத்துச் சூழல்'' என்ற 4ஆவது பாடத்தில் இத்தனை கருத்தும் கூறப்பட்டிருக்கிறது.

முழுக்க முழுக்கத் தவறான-வேண்டுமென்றே திரித்துக் கூறப் பட்ட இந்தக் கட்டுரையை வருகிற ஆண்டிலாவது இந்தப் பாட நூலிலிருந்து நீக்கத் தமிழ் நாடு அரசு முன்வரவேண்டும்,

## தமிழே முதல் மொழி

சிந்துவெளி மக்கள் பேசியது தமிழ் மொழியே.

சிந்து வெளியில் கிடைத்த 3 ஆயிரம் முத்திரைகளையும் நான் படித்து முடித்துவிட்டேன், விரைவில் ஆங்கில நூலாகவும் வெளியிட இருக்கிறேன்.

நான் படித்த முத்திரைகளில் அதியன், உதியன், உதயன், ஆதன், நன்னன், பாண்டியன், திங்களன், பண்ணப்பன், திண்ணன். தித்தன், தத்தன் சானன், மாசானன், சாத்தன், மாசாத்தன், வங்கன்; நத்தத்தன், ஒள்சேய், நல்சானன், நன்னன், சேய்

நன்னன், கானாண்ட சாத்தன், கான்காத்த மன்னன், கொடிஞ்சி நன்னத்து அழகன், கூத்தன்காத்தன். சாக்கன், காக்கன் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

சிந்துவெளி எழுத்துச் சான்றுகள் தென்னாட்டிலும் கிடைத்துள்ளன, ஆந்திரத்திலுள்ள கன்மவடக்கல் என்னும் ஊரில் சிவலிங்கத்தின் மேல்கிடந்த செங்கல் ஒன்றில் 'கலிங்குநக்க நந்தி' என்னும் பெயர் சிந்துவெளி எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டில் விழுப்புரத்திற்கு அருகிலுள்ள கீழ்வாலைக் குகை ஒவியத்தில் 'நாவாய்த்தேவன்' என்னும் பெயர் சிந்துவெளி எழுத்தில் செவ்வண்ணத்தில் வரையப்பட்டுள்ளது.

இலங்கையில் யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள ஆனைக் கோட்டையில் 'தீவுகோ' என்னும் பெயர் பொறிக்கப்பட்ட முத்திரை கிடைத்துள்ளது. இதில் மேற்பகுதியில் சிந்துவெளி எழுத்திலும் கீழ்ப்பகுதியில் பிராமி எழுத்திலும் இப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இவற்றால் சிந்துவெளி எழுத்து தமிழுக்கே உரிய எழுத்து என்பதும், அதிலிருந்து பிறந்த பிராமியம் தமிழ் எழுத்தே என்பதும் புலனாகின்றன.

**பேராசிரியர் இரா. மதிவாணன்**

## தமிழர் நாகரீகமே

சிந்துவெளி நாகரீகம் திராவிடர்களுடையது என்று ஆராய்ச்சியாளர் பலரும் அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளனர். நான் ரெயில்வே தலைமைப் பொறியியலாளராக இருந்தபொழுது மொகஞ்சதாரோ (சிந்துவெளி) பகுதியில் ரெயில் பாதை அமைக்கும் பணியில் நான்காண்டு ஈடுபட்டிருந்தேன். அதனால் மொகஞ்சதாரோவில் புதையுண்ட நாகரீகச் சின்னங்களை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அங்கு நான் நேரில் பார்த்தவற்றுள் அம்மிக்கல், இட்லிப் பானை, நடராசர் சிலை, சிவலிங்கங்கள். துளைக் காதுள்ள மண் பதுமைகள் ஆகியவை என்னைப் பெரிதும் கவர்ந்தன.

வடநாட்டில் எங்கும் அம்மிக் கல்லைப் பார்க்க முடியாது. அவர்கள் நம்மைப்போல் அம்மிக் கல்லில் மசாலை அரைப்ப தில்லை. வடநாட்டுக்காரர்களின் உணவுமுறைகள் முற்றிலும் வேறுபட்டவை. இட்லி அவிக்கும் வழக்கமும், அம்மிக் கல்லில் மசாலை அரைக்கும் வழக்கமும் தென்னிந்திய திராவிடர்களுக்கே உரியவை. ஆதலால் சிந்துவெளியில் அம்மிக்கல்லும், இட்லிப் பானையும் காணப்படும் காரணத்நால் கூட அங்கு வாழ்ந்தவர் கள் தமிழர்களே என்று அறுதியிட்டு உரைச்கலாம்.

பொன்னாலான பெரிய தண்டட்டியை மகளிர் காதில் அணி வதும் தென்னாட்டு வழக்கமே.

**பொறியியலாளர் இராமச்சந்திரன்**
(ராணி 17-5-92)

நவநாகரீகத்திற்கான மூன்று விடயங்களை மனித குலத்திற்கு ஜெர்மனியர்கள் அளித் தார்கள். அது வெடிமருந்து, அச்சு இயந் திரம், ப்ரோடஸ்டன்ட் மதம்.

—தாமஸ் கார்லைல்

# பார்வதிக் கிராமமே இன்று 'பதவியா' ஆகியது

(வீரகேசரி 23-05-1992)

## திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தும் மாற்றங்கள்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு நிருவாக மாவட்டங்கள் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி அரசு திருமலை மாவட்டத்தில் தனது முழுக்கவனத்தையும் திருப்பியுள்ளது. பல்வேறு வளர்ச்சி திட்டங்களை வடிவமைத்து அதை துரிதகெதியில் அமுல்நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதே நேரம் பல குடியேற்றத் திட்டங்களும் அமுல் நடத்தப்படவிருக்கின்றன. தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி திருமலை மாவட்டத்தில் பெரும்பான்மை இன மக்களின் குடிசன பெருக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின்பு முதலாவது குடிசன மதிப்பீடு 1953ல் நடைபெற்றது இந்தக் கணக்கெடுப்பின் போது திருமலை மாவட்டத்தில் 43% தமிழர்களும் 34% முஸ்லிம்களும்

18 வீதம்சிங்களவர்களும் வாழ்வதாக தெரிய வருகின்றது. சுதந்திரத்திற்கு முன்பு திருமலை மாவட்டத்தில் வாழ்ந்த பெரும்பான்மை இன மக்களின் மொத்த எண்ணிக்கை 4324 பேர் மாத்திரமே.

1948 ஆம் ஆண்டிற்குப் பின்பு தான் திருமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் குடியேற்றம் வேகம் அடைய ஆரம்பமானது. அல்லை, கந்தளாய், சேருவலை, பதவியா போன்ற பெரிய குடியேற்றங்கள் இக் காலகட்டத்திலே தான் ஆரம்பமாகின. 1948 ம் ஆண்டு 1320 சிங்களவர்கள் டி. எஸ். சேனநாயகா அரசினால் முதன் முதலாக குடியமர்த்தப்பட்டனர். 1949ல் பார்வதி கிராமம் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பகுதியாகும். இது பதவியா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது

இதே வருடம் மீண்டும் 1112 சிங்களவர்கள் பதவியாவில் குடிய மர்த்தப்பட்டனர். 1950ல் அல்லை என்ற தமிழ்க் கிராமத்தில் 744 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இதை அடுத்து அல் லையில் சிங்களக்குடியேற்றம் விரிவடைந்தது.

1963ல் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின்படி தமிழ் மக் கள் 39 வீதம் முஸ்லிம்கள். 35 வீதம் சிங்களவர்கள் 29 வீதம் என தெரியவந்துள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களின் விகிதாசார வீழ்ச் சிக்கு வேகமடைந்த சிங்களக்குடியேற்றமே காரணமாகும். 1957 ல் முதலிக் குளம் கிராமம் மொறவீவ என பெயர்மாற்றம் செய் யப்பட்டு 612 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1960 ல் திருமலை நகருக்கு அணித்தாக அபயபுரம் என்ற பெயரில் 60 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டனர். 1961ல் உப்பு வெளியில் சிறிமாபுரம் மீனவர் கிராமம் உதயமாகி 80 மீனவ குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இதே ஆண்டு திருமலைக்கு அணிந்தாகவுள்ள மற்றோர் பகுதியில் 53 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1962ல் திரியாய் தமிழ் கிராமத்திற்கு அருகிலே பௌத்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 73 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

1963 இல் மிகுந்தபுரம் ஜெயந்திபுரம் என்ற இரு சிங்களக் கிராமங்கள் ஆரம்பமாகின. இதே ஆண்டில் ஆண்டான் குளப் பகுதியிலே 121 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1964ல் முதன் முதலாக வெள்ள மணல் பகுதியில் (சைனாபே) குடா வில் ஒரு பௌத்த ஆலயமும் பாடசாலையும் காணப்பட்டன. 1966ல் பாலன் போட்ட ஆறுப் பகுதியில் முதன்முதலாக 30 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இதேநேரம் 1968ல் பெரிய குளப்பகுதிக்கு நாமல்வத்தை என பெயர்சூட்டப்பட்டது. இந்த இடத்தில் 92 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

1971இல் கிளிவெட்டிக்குப் பக்கத்தில் 92 சிங்களக் குடும் பங்கள் குடியமர்த்தப்பட்டு இக்கிராமத்திற்கு தெய்கீவத்தை எனப்பெயர் சூட்டப்பட்டது. இதனிடையே 1971இல் நடை பெற்ற குடிசன மதிப்பீட்டின்படி திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் 37 வீதம்சிங்களவர்கள் 31வீதம் முஸ்லிம்கள்29 வீதம் என தெரியவந்துள்ளது, இவ்வளவு காலமும் திருமலை மாவட்ட சனத்தொகையில் இரண்டாம் இடத்தில் இருந்து வந்த முஸ்லிம் மக்கள் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. 1974ல் மேலும் பல குடியேற்றங்கள் ஆரம்பமாகின.

சந்தளாய் பகுதியிலே முஸ்லிம் மக்களின் முக்கிய வதிவிடமாய் இருந்துவந்த முள்ளிப் பொத்தானைப் பகுதியில் 72 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

1981ல் நடைபெற்ற குடிசனக்கணக்கெடுப்பின்படி திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் 36 வீதம் சிங்களவர்கள் 34 வீதம் முஸ்லிம்கள் 28 வீதம் என புள்ளி விபரம் எடுத்துக்காட்டின. அதாவது தமிழர் மொத்த சனத்தொகை 93510. சிங்களவர் 86341 முஸ்லிம்கள் 74403 ஆகும். 1982இல் திருமலை பௌத்த விகாரைக்கு அருகில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதே ஆண்டில் குச்சவெளிக்கு அணித்தாகவுள்ள புடவைக் கட்டுப் பகுதியில் மேலும் 30 சிங்கள மீனவ குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இன்று இந்த இடம் சாகாபுரம் என அழைக்கப்படுகிறது. இதுவரையில் நாங்கள் எடுத்துக்காட்டியுள்ள புள்ளி விபரங்களையும், குடிசன வீக்கத்தையும் அடிப்படையாக வைத்து நோக்கினால் திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் எவ்விதம் விரிவாக்கம் அடைந்தது என்பதை இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

1983ல் வட - கிழக்கில் போர் ஆரம்பமான காரணத்தினாலும் திருமலை மாவட்டத்திலிருந்து வந்த அமைதியின்மை, இராணுவ நடவடிக்கை தீவிரவாதிகளின் தாக்குதல் இந்தக் காரணங்களினால் சிங்களக் குடியேற்றம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. இதனிடையே 1987 இல் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு வட – கிழக்கு மாகாணசபை நிருவாகம் அமுலுக்கு வந்ததாலும் தமிழ்பேசும் மக்களின் மனங்களில்ஓரளவு நிம்மதி ஏற்பட்டாலும் ஒரு புதுப்பொலிவு தென்பட்டது. ஆனால் அந்த நிலைமை நிலைக்கவுமில்லை, நீடிக்கவுமில்லை.

1990 யூன் 11ஆம் திகதி புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் போர் ஆரம்பமானதிலிருந்து நிலைமை மாற்றமடையத் தொடங்கியது. போர் ஆரம்பமானதினால் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தங்களின் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்தனர். இதனால் திருமலைமாவட்டத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும்வாழ்ந்து வந்த கூடிய பட்சமான கிராமங்கள் அழிக்கப்பட்டன. இந்த மக்களின் பொருளாதார வளங்கள் அனைத்தும் நாசம் செய்யப்பட்டன. இதே நேரம்தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போர் பெரும்பான்மை இனமக்களின் குடியேற்றத்திற்கும் அத்து மீறல்களுக்கும் ஊடுருவல்களுக்கும் சகல வசதிளையும் ஆக்கிக் கொடுக்க சாதகமாக்கப்பட்டுள்ளன.

தமிழர் வாழ்ந்த பகுதிகளில் ஏன் அவர்கள் வாழ்ந்த வீடு களில் கூட இன்று சிங்களவர்கள் குடியேறியுள்ளனர். மொத் தத்தில் திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் பெரிய அளவில் நடக்கின்றது. முள்ளிப் பொத்தானைப் பகுதியில், 98ஆம் கட்டை, லிங்கம்நகர், கடற்கரைப் பகுதி, இறக்கண்டி, திருமலை நகர்ப்புறங்களில் தமிழ் கோயில்களுக்குச் சொந்தமான காணிகள் லவ்லேன் பகுதி, லிங்கம் நகர் பெற்றோல் நிலையத்திற்கு அரு காமையிலுள்ள பகுதி கண்ணகிபுரம். கோணேஸ்வரத்திற்கு இடைப்பட்ட பகுதிகளில் இன்று சிங்களவர்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர். ''லவ்லேன்'' பகுதியில் 40 முஸ்லிம் குடும்பங்க ளும், 16 தமிழ் குடும்பங்களும் வாழ்ந்து வந்தனர். போரினால் இவர்கள் எதிரிகளாக்கப்பட்டனர்.

இந்த மக்கள் வாழ்ந்து வந்த வீடுகள் உட்பட மூன்றரை ஏக்கர் நிலம் பௌத்த கோயிலுக்கு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது, முள்ளிப் பொத்தானை பகுதியிலுள்ள 100க்கு மேற்பட்ட மக்கள் எதிரிகளின் தங்ககங்களில் உள்ளனர். இந்த மக்கள் தங்களின் வீடுகளை பார்க்கச் சென்றபோது அந்த வீடுகள் பெரும்பான்மை இன மக்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள் ளதாக தெரியவந்துள்ளது. இதனிடையே திருமலை மாவட் டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அரசாங்கம் அறிமு கப்படுத்தி துரித குடியேற்றங்களையும் மேற்கொள்ள திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது

## வர்த்தக வலயம்

திருமலை சீனக்குடாப்பகுதியில் கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையப் பகுதியில் இருப்பதுபோல சுதந்திர வர்த்தக வலயமொன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் பல குடியேற் றங்களையும், வேலைவாய்ப்புக்களையும் வழங்க அரசு திட்டம் தீட்டியுள்ளது. திருமலை மாவட்டத்தில் பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள் அமையவிருக்கின்றன..

## குடியேற்றம்

பாலம் போட்டாறுப் பகுதியில் ஆரம்ப நடவடிக்கையாக 400 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இது ஒரு பாரிய குடியேற்றத் திட்டமாகும். குறுகிய காலத்திட்டம் என்ற அடிப் படையில் வீடுகள், நீர்விநியோகம், மின்சாரம், மற்றும் பல் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன

இந்த துரித திட்டங்களை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் இருப்பதாக செய்தி வெளிவந்துள்ளன. வருடாந்தம் 15,000 குடும்பங்களை குடியமர்த்த திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

பாலம் போட்டாறு தமிழ்மக்கள் வாழ்ந்து வந்த மரபு வழி சிற்றூராகும். தற்போது பாலம் போட்டாறுப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்கு மாற்று இடங்கள் கொடுத்து அப் பகுதியில் இருந்து அவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாக உறுதியான செய்திகள் கூறுகின்றன, பாலம் போட்ட ஆறு என்பது சைனாபேக்கும் தம்பலகமத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இந்த குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பமானதும் சைனாபே வர்த்தக வலயம் பாலம் போட்ட ஆறு தம்பலகமம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கி குடியேற்றம் விரிவடையும் இந்த புதிய திட்டத்தினால் பாலம் போட்ட ஆறு (மங்கி பிறிஜ்) தம்பலகமம் சைனாபே குறிஞ்சாக்கேணி உட்பட பல்வேறு பூர்வீக தமிழ் கிராமங்கள் தானாகவே அழிந்துபோகும்.

இந்த நிலைமைகளையெல்லாம் ஆழமாகவும் அகலமாகவும் கவனத்திற்கெடுத்து நோக்கும் போது வட - கிழக்கு போர் இன்னுமொரு ஆண்டு நீடிக்குமேயானால் வட - கிழக்கில் சமாதானமும் அமைதியும் வருவதற்கு முன்பே "எல்லாம் முடிந்துவிடும்" போல் தென்படுகின்றது. ஆட்சி செயலுரிமை நடத்தவோ செயலுரிமை பரவலாக்கலுக்கோ நிலமிருக்கமாட்டாது. இந்த உண்மையை வட - கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயல்படும் தமிழ் குழுக்களும் சிந்தனைக்கு எடுத்து நோக்குவது அவசியமென நாம் கருதுகிறோம்.

இன்னுமொரு முக்கியமான விடயத்தை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். புலிகள் வட - கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளையும் சூழ்நிலையையும் கவனத்திற்கு எடுத்து அமைதியும் சமாதானமும் ஏற்பட வழி சமைத்து இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சொந்த மண்ணுக்கு திரும்பி நிம்மதியுடன் வாழ வழிகளைக் காணாது போனால் வட - கிழக்கில் இருந்ததையும் இழந்து, கிடைத்ததையும் பறி கொடுத்த கதையாகத்தான் காரியங்கள் முடிவடையும் என்பதை வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

-ஈஸ்டன் இப்ராகிம்
விவசாயிகள் சம்மேளனம்,
அக்கரைப்பற்று.

# கொலை செய்வதற்கென ஏற்படுத்தப்பட்ட கும்பல்

(நியூஸ் வீக் - 06-04-1992)

புதிதாக ஆதரிப்போர் மூலமும், புதிய இலக்குகளூடாகவும் அபுநிதால் தனது பயங்கரவாத தனி உரிமைத் தத்துவத்தை விரிவுபடுத்தி வருகிறார்.

இவரின் கொடுமைகளுக்கு எல்லையில்லை. ஏனெனில் இவரின் இலக்குகளுக்குத் தடையில்லை. இவரது நெடுநாளைய எதிரிகளான இசுரேலியர்கள் மாத்திரமின்றி ஒன்றும் அறியாத அப்பாவிகளான வழிபாட்டிலீடுபட்டிருந்த இசுதான் பூலிலிருந்த (Istanbul) யூதர்கள், உரோமாபுரியில் நத்தார் வழிபாடுகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பங்கள் ஆகியன இவரின் கொடுமைகளுக்கு ஆளாகி உள்ளன. தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும் இவர் கடுமையான சித்திரவதை முறைகளை ஒதுக்கிவைத்துள்ளார். இவருடைய கும்பலில் சந்தேகத்துக்குள்ளான நூற்றுக் கணக்கானோருக்குக் கொடுக்கப்படும் சித்திரவதைகளையும், அவர்களை உயிரோடு புதைப்பதையும் கதை கதையாக லிபியாவிலுள்ள பாலைவனப் பிரதேசத்திலுள்ள இவரின் தங்ககங்களிலிருந்து தப்பிவந்தவர்கள் கூறுகின்றார்கள்.

தற்போது அபு நிதால் தனது தன்மையை வியாபாரமாக பயன்படுத்துகிறார். இவர் தனதுசெயல்பாட்டு நிலப்பரப்புக்களை விரிவுபடுத்தியுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகிறார்கள். நெடுங்காலமாகத் தீவிரநாடுகளாக இருந்துவரும் ஈராக், ஈரான், லிபியா போன்ற நாடுகள் 'அவருடைய சொந்த வீடு போல் பயன்படுகின்றன. குவைத், சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளில் கிளைப்பணிமனைகள் இருப்பதாகவும், சூடான் நாட்டில் பயிற்சித் தங்ககங்கள் இருப்பதாகவும் அமெரிக்கப் புலனாய்வு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் இதை இந்த நான்கு நாடுகளும் மறுத்து வருகின்றன.

அபு நிதாலின் செயற்பாடுகள் முனைப்புடன் விரிவடைந்து வருவது1985ம் ஆண்டின் உரோமாபுரி (Rome) மற்றும் வியன்னா (Vienna)வானூர்தி நிலையங்களில் திறமையாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டபடுகொலைகளை நினைவூட்டுகின்றது.அபுநிதாவின் கூட்டமைப்பில், அதனுள்ளிருந்த உட்பூசலாலும், கெடுபிடி போர் முடிவடைந்ததினால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்த தளங் களும், முன்னணி நிறுவனங்களும் இல்லாமற் போனதாலும் பின்னடைவு ஏற்பட்டது.நெடுங்காலமாக அபிமானியாக இருந்து வந்த ஈராக்கிய அதிபர் சதாம் குசேன் அவர்களின் அவசர அழைப்புக்குச் செவிமடுக்காமல் வளைகுடாப் போர் முடிவுறும் வரை அபுநிதால் லிபியாவில் தங்கியிருந்தார். இப்போரில் இறுதி வெற்றி யாருக்குக் கிடைக்கும் என்று தெரிந்தவுடன் இவர் சதாமின் எதிரிகளிடம் சென்றார். கோட்பரப்புகை மூலமும் பணவசதிகள் மூலமும், அச்சுறுத்தல்மூலமும் மற்றவர்களுக்கு அவ மானத்தைஏற்படுத்துவதன் மூலமும் இவர் தனது வாடிக்கையா ளர்களைச் சென்றஆண்டு பெருக்கியுள்ளார். இதேவேளை இவர் தனதுமுன்னைய நண்பர்களுடனான தொடர்புகளையும் துண்டிக் வில்லை. இப்படிப் பலதரப்பட்ட வழிகளால் எந்தவொரு அரபு நாட்டிலும் தனக்குத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொண்ட தோடல்லாமல், எந்தவொரு நாடும் தனக்குத் தனியாக ஆதரவு கொடுப்பதாகக் காட்டிக் கொள்ளும் நிலையிலும் இவர் இருக்க வில்லை.சவுதிஅரேபியாவினதும் குவைத்நாட்டினதும் அரசாங்கங் கள் இவருடைய சேவையை விரும்பாவிடினும் இவருக்கு புகலிடம் வழங்குவதன் மூலம் தமக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொண் டுள்ளன. அபு நிதால் தனக்கு வேண்டிய வகையில் ஒவ்வொரு பேரத்தையும் பேசி முடித்துக்கொள்கிறார் என யோர்ச்ரவுண் பல்கலைக்கழக (George Town University ) பயங்கரவாத எதிர்ப்பு நிபுணனுமான றொபர்ட் குப்பர்மன் ( Robert Kupperman ) கூறு கின்றார்.

இது ஒரு புதிய சுற்று வன்முறையின் முன்னோடியென அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் அஞ்சுகின்றனர். அபுநிதா லின்கீழ் சேவையாற்றுபவர்கள் குறிதவறாமல் தங்கள் செயல் களைச் செய்து முடிக்கக் கூடியவர்கள். இவரின் ஊழியர்கள் சிறு சிறு செயல்களை அனேகமான வாடிக்கையாளர்களுக்கு அனேகமான இடங்களில் செய்து முடிப்பதே கவலைக்குரியதாக வுள்ளது. ஈராக், குவைத் நாட்டின் மீது படையெடுத்த பின்னர் ஞாலம் பூராவும் ஆறிற்குமேற்பட்ட கொலைச் செயல்களை அபு நிதால் செய்ததாகப் பாதுகாப்புக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனமான ஞாலத்திலுள்ள அனைத்துப் பாதுகாப்பு முகா

மையாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது. சென்ற வசந்த காலத்தில் அபுநிதாலின் கையாட்கள் ஈரானுக்காக அமெரிக்கக் கணனி நிபுணர் ஒருவரைக் கொன்றதாகவும், எகிப்தியத் தூதுவர் ஒருவரைத் துருக்கியில் படுகாயப் படுத்தியதாகவும் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள் கூறுகின்றனர். சென்ற மாதம் பேர்னர் அயர்சில் ( **Buenos Aires** ) உள்ள இசுரேலியத் தூதரகத்தைக் கார்க் குண்டு வைத்துத் தகர்த்ததுவும் அபு நிதாலின் செயலாக இருக்கக்கூடுமென ஊகிக்கின்றனர். ஆனால் இச்செயலுக்கு லெபனானிலுள்ள கடவுளின் அடிப்படைவாதக்கட்சி Le' anans Fundamentalist Party of God ) உரிமைகோரியுள்ளது. ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்பட்டால் ஈராக்கிய அதிபர் சதாமுக்காக ஈராக்கிய தூதரகங்கள் மூலம் அபு நிதாலின் கையாட்கள் தமது கைவண்ணத்தைக் காட்ட முயலக்கூடும். ஈராக்குடனான தொடர்புகளை அபு நிதால் முறித்துக்கொள்ளவில்லையென்றும், ஈராக்கிய தூதரகங்கள் சுயமாக இயக்கத்தொடங்கியதும் இவர் தனது கைவண்ணத்தைக் காட்டுவார் எனவும் மதிப்புக்குரிய ஒரு பலஸ்தீனியத் தலைவர் கூறுகின்றார்.

எதிரும் புதிருமாயுள்ள நாடுகளான ஈரான், ஈராக், சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்காக ஒரு குழு எப்படிச் செயல்படக்கூடும் எனக் கேட்டபோது, இவர் ஒரு கூலிப்படைவீரன் எனக் கூறுகின்றார். அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பயங்கரவாத எதிர்ப்பு மேலாளரான திரு.வின்செண்ற் கனிஸ்ராறோ ( Vincent Cannistraro ) அவர்கள் இவருக்கென கொள்கைகள் கிடையாது. இலாபம் கிடைக்குமெனத் தெரியவந்தாலொழிய எந்தச் செயலிலும் இவர் தற்போது இறங்குவதில்லை எனமேலும் அவர் கூறுகின்றார். தனது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன்மூலம் கொழுத்த இலாபத்தைப் பெற்றுவருகிறார். யார் அதிகமான பணத்தைக் கொடுக்கின்றார்கள் என்பது தான் முக்கியமாகவுள்ளது எனக்கூறுகின்றார். பாரிசிலிருந்து வெளிவரும் மிட்ஈஸ்ற் நியூஸ்லெட்டர் (**Mideast News letter**) பத்திரிகையாசிரியர் மார்வான் பிசானா அவர்கள் ஈராக்கியர்கள் கொடுக்கும் பணத்துக்காகச் சில செயல்களைப் புரிவார். சவுதி அரேபியர் இவர் சில செயல்களைச் செய்யாது விடுவதற்காக கூடுதல் பணம் தரும் என அவர் கூறுகின்றார். வளைகுடாப் போரின்போது சவுதிஅரேபியா 15 மில்லியன் டாலர்களைப் பாதுகாப்புப் பணமாக இருவருக்குக் கொடுத்ததாக அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு கூறுகின்றது, ஆண்டுதோறும் பல மில்லியன் டாலர்களைக் கொடுத்துவரும் லிபியா இப்பொழுதும் கொடுத்து

துவருவதாகவும், அங்குள்ள தங்ககங்களை விரிவுபடுத்த இவருக்கு ஒப்புதல் அளித்ததாகவும் அமெரிக்க இராசாங்க திணைக்கள அறிக்கை கூறுகின்றது.

அபு நிதால் திரிபொலி (Tripoli)யில் வாழ்ந்து வந்தாலும், லெபனானிலுள்ள செயலகத்தின் ஊடாகவே தனது முகவர்களைக் கட்டுப்படுத்தி வருகின்றார் எனப் பிரித்தானிய பத்திரிகையாசிரியரான பற்றிக் சீல் அவர்கள் வெளியிட்ட புதிய புத்தகமொன்றின் வாயிலாக அறியக்கிடக்கின்றது. பயங்கரவாத எதிர்ப்பு மேலாளர் கூற்றுப்படி இவரது குழுவில் 50 முதல் 200 வரையான செயல்வீரர்களும், லெபனானில் 800 இராணுவ வீரர்களும், ஞாலம் முழுவதும் 1000க்கு மேற்பட்ட ஆதரவாளர்களும் இருப்பதாகத் தெரியவருகின்றது. இவரது இயக்கத்தின் வங்கி இருப்பு 150 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக இருக்கலாம்.

## நியூயோர்க் (New york Call) கருமபீடம்:

இப்படிப்பட்ட பணவசதியுள்ளமையால் இவருடைய செயற்பாடுகள் அரேபிய நாடுகளுக்கு அப்பாலும் பரவியுள்ளது. பிரான்சு, ஆஸ்திரியா, பெல்ஜியம் போன்ற நாடுகள், தங்கள் நாடுகளில் இவரது நடவடிக்கையை இல்லாதொழிப்பதற்காக இவருடனோ அல்லது இவருடைய ஆதரவாளர்களுடனோ ஒழுங்குகள் செய்துள்ளதாகப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அபு நிதால் தனது சேவையை தென்னமெரிக்காவுக்கும் விரிவுபடுத்தியுள்ளார். குறிப்பாக பெருவிலும், ஆர்ஜென்ரீனாவிலும் இவரது முகவர்கள் இயங்கிவருகின்றனர். இவருடைய கருமபீடம் நியூயோர்க் நகரத்தில் இருப்பதை அமெரிக்க அரச புலனாய்வுப் பிரிவு அறிந்துள்ளது என்பது நியூசுவீக்கிற்குத் தெரியவந்துள்ளது. இவருடைய முகவர்கள் ஆங்காங்கே ஐரோப்பாவிலும் இருப்பதாகவும், அங்கு அவர்கள் தங்கள் செயலகங்களை நடைமுறைப் படுத்த முனைகிறார்கள் என்றும் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது. தற்போது அவர் தனது நடவடிக்கைகளை குறைத்து வைத்துள்ளார் இது எவ்வளவு காலம் நீடிக்கும் என வினவுகின்றார் திரு. சீல் அவர்கள்.

எல்லோருடைய பயங்கரவாதச் செயல்களுக்கும் கைப்பொம்மையாக அபு நிதால் மாறினால் அதனால் ஏற்படும் குழப்பங்களைக் கட்டுப்படுத்த முடியாது. பான் அமெரிக்க

வானூர்தி 103 குண்டுவைத்துத் தகர்த்ததையிட்டு அமெரிக்கா எடுத்துவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு லிபியா பயப்படுவதால் இவருடைய செயல்பாடுகளுக்குப் பின்னடைவு ஏற்படலாம்.

மத்தியகிழக்கு சமாதான முயற்சிகள் நிறைவேறினால் அதை முறியடிக்க அதன் எதிர்பார்ப்பாளர்களும் ஈரானும் இவருடைய சேவையை முடுக்கிவிடலாம். இச் சமாதான முயற்சி முறிவுற்றால் சிரியா பயங்கரவாதக் கொள்கையை ஊக்குவிக்கலாம். சதாம் குசேன் தனக்குச் சந்தர்ப்பம் ஏற்படும் போது பதில் அடி கொடுக்கத் தயங்கமாட்டார் எனச் சில நிபுணர்கள் கருதுகின்றனர். இந்த ஞாலம் முழுவதும் புகழ்பெற்ற பயங்கரவாதியான அபு நிதாலுக்கு தாக்குதல்களுக்கு தேவையான பொருட்களை எந்த நாடும் தற்போது தர முன்வரவில்லை. அதேபோல் இரகசியத்தகவல்களும் அவருக்கு தரப்படவில்லை. ஆனால் அவரின் ஆற்றலை அறிந்தவர்கள் இதனால் அமைதியாக இருந்து விட முடியாது.

* * *

---

*சர்வாதிகாரிகளுக்குப் பயந்து கொண்டு நாம் வேறு விதமான ஒரு சமுகத்தை அமைக்கிறோம். அதில் ஒவ்வொரு முனிசிபல் பிரிவு கவுன்சிலரும் சர்வாதிகாரியாகிறார். தனியார் முதலாளிகளும். பணம் கடன் கொடுப்போர்களும் தங்கள் கீழ் உள்ள உழைப்பாளிகளின் மீது கருணை என்பதே இல்லாமல் சமுகப் பொறுப்புணர்வும் இல்லாமல் சர்வாதிகாரிகளாகி விடுகின்றனர்.*

—பெர்னார்ட்ஷா

---

# சண்டை நடைபெறும் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படும் படையினர் சிகிச்சை அளிக்கப்படாது திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்

-சர்மிந்தா பர்டினாந்தோ
(ஐலன்ட் - 31-05-92)

அறுவைச் சிகிச்சை மருத்துவர்களும், மயக்கமருந்து கொடுப்பவர்களும் இல்லாததன் காரணமாக சென்ற ஆண்டு ஏப்பிரல் மாத நடுப்பகுதியில் வெலிக்கந்தையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமுற்று பொலன்ன றுவை அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட மூன்று படைவீரர்கள் சிகிச்சை அளிக்கப்படாது திருப்பி அனுப் பப்பட்டார்கள்.

காயமுற்றவர்களில் இராணுவ உயர் மேலாளர் (கப்டன்) ஒருவரும் அடங்குவார்.

கியூபா நாட்டு மருத்துவ நிபுணர்களின் தற்காலிக வெளி யேற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடங்களை சுகாதார மேலாளர் நிரப்பாததன் காரணத்தாலேயே அந்த நேரத்தில் மருத்துவ மனையில் சிறப்பு நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் இருக் கவில்லை.

இப்படியாக நடந்த சம்பவம் இது மாத்திரமல்ல.

வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் அவற்றின் அயலிலுள்ள வடமத்திய மாகாணத்திலும் உள்ள மருத்துவ மனைகளில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களும், மயக்க மருந்து கொடுப்ப வர்களும் இல்லாததன் காரணமாக இங்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட சண்டையில் ஈடுபட்டுக் காயமுற்ற பாதுகாப்புப் படையினர், திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்விடயம் பற்றிப் பாதுகாப்புப் படை மேலாளர்களின் கருத்தைக் கேட்டபோது, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பது மற்றும் வடக்குக் கிழக்குப் பகுதிகளை அரசின் முழு கட்டுப்பாட்டில் கொண்டுவருவது ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களும் நிறைவேற வேண்டுமாயின் அரச மேலாளர்களின் போக்கில் உடனே மாற்றம் ஏற்பட வேண்டுமெனக் கூறினர். இந்தக் குறிக்கோள்களை எவ்வளவு விரைவில் அடைகின்றோமோ அதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது என அவர்கள் கருதுகின்றார்கள்.

விடுதலைப் புலிகளை முறியடித்து வடக்கையும், கிழக்கையும் அரசின் கட்டுபாட்டுக்குள் கொண்டு வருவதை அரசியல் தலைமைப்பீடம் விரும்பினால் பாதுகாப்புப் படையினருக்கு அவர்களது அதிகளவிலான ஆதரவு தேவை என அவர்கள் கூறினார்கள். வடக்குக் கிழக்குப் பகுதியிலும் அதன் அயல் பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கு மற்றைய உதவிகளுடன் போதியளவு மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் கூறினார்கள்.

காயமுற்ற படையினருக்குக் கூடியளவு வசதிகளை வழங்கத்தக்க வகையில் அரச மருத்துவ மனைகளில் மிகவிரைவில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமென அவர்கள் கூறினர். போரில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு வழங்கப்படும் அதிகளவிலான மருத்துவ வசதிகள், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கை வகிப்பதாக அவர்கள் கூறினர்.

போர் முனையிலுள்ள படையினருக்கு உதவுவதற்காக அனுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, திரிகோணமலை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ மனைகள் போதியளவு வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டுமென இராணுவ வட்டாரங்கள் சென்ற வாரம் கூறின. காயமுற்ற படையினருக்கு நல்ல மருத்துவ வசதிகளைக் கொடுக்கும் வழிவகைகளை விரைவில் காண்பது அவசியமாகின்றது என ஒரு மேலாளர் கூறினார்.

அரச மருத்துவ மனைகளிலுள்ள சேவைகளை முன்னேற்றும்படி பாதுகாப்பு மேலாளர்கள் சென்ற இரண்டு ஆண்டு காலமாகச் சுகாதார மேலாளர்களைக் கேட்டு வந்துள்ளனர். ஆனால் அவர்கள் பாதுகாப்புப் படையினருக்கு உதவத்தவறி

விட்டார்கள் என ஒரு பாதுகாப்பு மேலாளர் கூறினார். போர் நடைபெறும் பிரதேசங்களிலுள்ள அநேகமான மருத்துவ மனைகளில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் இல்லை.

பொலனறுவை மருத்துவ மனையில் தற்பொழுது பணிபுரியும் கியூபாவைச் சேர்ந்த இரண்டு மருத்துவ நிபுணர்களே காயமடைந்த பொது மக்களுக்கும். பாதுகாப்புப் படையினருக்கும் சிகிச்சை அளிப்பதற்குப் பொறுப்பாகவிருக்கின்றார்கள். அரச மேலாளர்கள் பொலனறுவையில் இலங்கையர்களைப் பணிபுரிய நியமிக்க முடியாதிருப்பதையிட்டு பாதுகாப்புப் படையினர் ஆச்சரியமுறுகின்றனர். கியூபாவைச் சேர்ந்த இந்த மருத்துவர்கள் விடுமுறையில் செல்லும்பொழுது அவர்களுக்குப் பதிலாக வேறு மருத்துவர்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்படுவதில்லை. காயமடைந்தவர்களை இராணுவம் இந்தப் பிரதேசத்திலுள்ள வேறு மருத்துவ மனைகளுக்கு அனுப்பவேண்டியுள்ளது. இருப்பினும் இந்தப் பிராந்தியத்திலுள்ள மற்றைய மருத்துவமனைகளுக்கும் பொலனறுவை மருத்துவ மனைக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை.

கியூபா நாட்டு மருத்துவ நிபுணர்கள் பொலனறுவைக்கு அயலிலுள்ள அம்பாறை மருத்துவமனையிலும் பணியாற்றுகின்றனர். அம்பாறை மருத்துவ மனையிலிருந்து அண்மையில் கியூபாநாட்டு மருத்துவ நிபுணர்கள் வெளியேறியபோது 65 வயதான ஒரு அறுவை மருத்துவர் அங்கு அனுப்பப்பட்டாரெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. கியூபா நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் திரும்பும் வரை பாதுகாப்புப் படையினர் முக்கியமாக இராணுவத்தினர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

புத்தளம் மன்னார் மற்றும் வவுனியாவிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் அறுவை மருத்துவர்களோ அல்லது மயக்க மருந்து கொடுப்பவர்களோ இல்லை. இந்தப்பிராந்தியத்தின் முக்கிய அரசாங்க மருத்துவ மனையாக விளங்கும் அனுராதபுர மருத்துவமனையிலும், காயமடைந்த பாதுகாப்புப் படையினருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ சிகிச்சையளிக்கக் கூடிய போதியளவு வசதிகள் இல்லை.

இந்த மருத்துவ மனைகளில் அதிகளவிலான நோயாளிவண்டிகளும், அதிகளவிலான மருத்துவ நிபுணர்களும் மற்றைய மருத்துவர்களும், போதியளவு மருந்து வகைகளும் இருத்தல் வேண்டும் என சில வட்டாரங்கள் கூறின. அரசாங்க மருத்துவ மனைகளை தகுந்த முறையில் வைத்திருக்கவேண்டிய கடமைகளைச் செய்யச் சுகாதார மேலாளர்கள் தவறிவிட்டனர். அவர்களின் இந்தத் தவறுகள் பாதுகாப்புப் படையினருக்கு இழப்புக்களை ஏற்படுத்துமெனச் சில வட்டாரங்கள் கூறின.

போர்ப் பிரதேசத்திலும் அதை அண்டிய பிரதேசத்திலும் உள்ள முக்கிய அரசாங்க மருத்துவமனைகளில் வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களுடைய மருத்துவ உதவியை நாடவேண்டியிருப்பதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் எனச்சில வட்டாரங்கள் கூறின.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடும் படையினருக்குச் சிலமக்கள் ஆதரவளிக்கத் தவறுவதைச் சில வட்டாரங்கள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளன. இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய 1990 ம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து நல்ல மருத்துவ வசதிகளைச் செய்யுமாறும், தேவையான மருத்துவர்களை மருத்துவ மனைகளுக்கு நியமிக்குமாறும் பாதுகாப்புப் படை யினர்கோரிவந்துள்ளனர்.ஆனால்இதுகாலம்வரை மருத்துவ மனைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை என அவர்கள் கூறினர்.

படையினரை ஒழுங்குபடுத்துவதற்கும் அவர்ளைப் பலம் குன்றாது பார்த்துக் கொள்வதற்கும், விடுதலைப் புலிகளுக்கெதிராக அவர்களின் மற்றைய வசதிகளைப் பெருக்குவற்கும் அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொருமேலதிகமான நாளும் அல்லது வாரமும் எதிரியின்பலத்தை அதிகரிக்கச் செய்யும் எனச் சிலர் கூறுகின்றார்கள். காயமடைந்த படையினருக்குத் தேவையான வசதிகளை அளிக்க முடியாதிருப்பதால் பர்துகாப்புப்படையினர் பெரும் கஷ்ட நிலைமையையும், பாதகமான சூழ்நிலையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பாதுகாப்புப் படையில் காயமடைந்தவர்களை இந்தப் பகுதியிலுள்ள மருத்துவ மனைகளுக்குக் கொண்டு சென்றாலும் அந்த மருத்துவ மனைகளில் மருத்துவ நிபுணர்களைக் காண முடிவதில்லை. இதன் காரணமாக அனேகர் இறந்துபோகின்

றார்கள் போர் நடவடிக்கைப் பகுதிகளிலிருந்து காயமடைந்தவர்களை மிகவும் கஷ்டப்பட்டே அந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்துகின்றார்கள். ஆனால் கிடைக்கப் பெற்ற வாகனங்களில் அருகாமையிலுள்ள மருத்துவ மனைகளுக்குக் காயமடைந்தவர்களைக் கொண்டு சென்றால் அங்கு அறுவை மருத்துவர்களோ அல்லது மயக்கமருந்து கொடுப்பவர்களோ இருப்பதில்லை.

இந்தக் குறைபாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்த நிருபர் பல சுகாதார மேலாளர்களை தொடர்புகொள்ள முயன்றபோது, அவர்களில் அனேகர் ஒன்றில் வவுனியாவுக்கு அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதாகத் தெரியவந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்றுவரும் போரில் பாதுகாப்புப்படையினர் முக்கியமாக இராணுவத்தினர் பாரிய இழப்புகளைச் சந்தித்துள்ளனர். கிழக்கிலுள்ள பாதுகாப்புப் படையினருக்கும், காவல்துறையினருக்கும் எதிராக விடுதலைப் புலிகள் ஒரே நேரத்தில் தாக்குதல்களை மேற்கொண்டதிலிருந்து இரண்டாவது ஈழப் போர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது. இது விரைவிலேயே வடக்குக்கும் பரவியது. இதில் இரு பகுதியினருமே பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

இதுவரை நடைபெற்ற மோதல்களில் ஆயிரத்துக்குமதிகமான பாதுகாப்புப் படையினரும், காவல்துறையினரும் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் 680 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. இவர்களில் 270 பேர் மேலாளர் தரத்தைச்சேர்ந்தவர்களாகும்.

கொழும்பிலுள்ள இராணுவ மருத்துவமனையில் தற்போது 350 இராணுவத்தினர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொழுது இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். கொழும்பிலுள்ள இராணுவ மருத்துவ மனைகளிலும், பொது மருத்துவமனைகளிலும் காயமடைந்த படையினர் நன்றாகக் கவனிக்கப்படுவதாகச் சில வட்டாரங்கள் கூறின. சிறப்புச் சிகிச்சைக்காகக் காயமடைந்த படையினர் சிலர் தனியார் மருத்துவ மனைகளிலும் அனுமதிக்கப்படுகின்றனர். காயமடைந்த படையினருக்கு விரைவாகச் சிகிச்சையளிப்பதற்காக மாகாணங்களிலுள்ள மருத்துவமனைகளின் வசதிகளைக் கூட்டுவது அவசியமாகின்றது.

காயமடைந்த படையினரை அரச மருத்துவமனைகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் இராணுவம் வழமையாக அவர்களுக்கு முதலுதவி வழங்குகின்றது. இந்த மருத்துவ மனைகளின் சேவைகளை முன்னேற்றுவதுடன் மருத்துவர்களையும் முக்கியமாக மருத்துவ நிபுணர்களையும் அங்கு அதிகரிக்கவேண்டுமெனச் சில வட்டாரங்கள் கூறின.

இதைச் செய்யத்தவறினால் அபாயகரமான விளைவுகள் ஏற்படுமென அவ்வட்டாரங்கள் கூறின. நல்லமருத்துவசேவையை நடாத்தக் கூடியவகையிலும், மறு வாழ்வு அளிக்கும் வகையிலும் பாதுகாப்புப் படையினருக்கு முக்கியமாக இரராணுவத்தினருக்கு அதிக நிதிதேவைப்படுகின்றது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அதன் அயல் பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளை முன்னேற்றுவதற்கு இதற்குப் பொறுப்பான அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. சென்ற இரண்டு ஆண்டுகளாக அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பது தெரியவில்லை. அரசினதும், இராணுவத்தினதும் தவறான கணிப்பீடுகள் பாதுகாப்புப் படையினருக்கும் அரசாங்க நலன்களுக்கும் பாரிய இழப்பை ஏற்படுத்திவருகின்றதென நாங்கள் கூறிவந்துள்ளோம்.

போரில் இப்போது ஒரு திருப்பு முனை தோன்றியுள்ளது. போர் செய்வதற்கு விடுதலைப் புலிகளுக்கும் மற்றைய தமிழ்க் குழுக்களுக்கும் உதவிபுரிந்து வந்த இந்தியா இப்பொழுது விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கெதிரான பாதுகாப்பு மற்றும் இராசதந்திர நடவடிக்கைகளை முழு அளவில் மேற்கொள்ளுமாறு இந்திய மேலாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான தக்க நேரம் இதுவாகும்.

சென்றவாரம் சனாதிபதி பிரேமதாசா, தனது பாதுகாப்புப் படையினரை வடக்கில் கடும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். விடுதலைப் புலிகளின் மிகவும் பலம் மிக்க போராளிகளைக் கொண்ட குடா நாட்டிலும் வன்னி நிலப்பரப்பிலுமுள்ள அவர்களுடைய நிலைகள் மீது முப்படைகளும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டன.

விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்ப்புகளுக்கு நடுவில் வான் படையினதும் கடற்படையினதும் உதவியுடன் இராணுவத்தினர் சிறிது வெற்றியடைந்துள்ளார்களென போர் முனை

யிலிருந்து வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இதைவிட வேறு நல்ல நேரம் இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கும் நிலப் பரப்புகளில் போர் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சென்ற வாரம் பணித்ததன் மூலம், ஒரு இரகசியமான இணக்க உடன்பாட்டை விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்வதற்கு அவர் முயன்றுவருகின்றார் எனக் குற்றஞ்சுமத்திய எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைச் சனாதிபதி பிரேமதாசா வாயடைக்கச் செய்துள்ளார். விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது முக்கியமாக வல்வெட்டித்துறை மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தீவிரமான நடவடிக்கை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கின்றதென்ற எதிர்க்கட்சியினரின் கூற்றைப் பொய்யானதென நிரூபிப்பதற்கு அரசாங்கத்துக்கு உதவியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே இடையிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும், இந்தியாவின் நடுவர்களின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளும் இந்தபோரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரத் தவறிவிட்டன. வடக்குக் கிழக்கு நிலப்பரப்பில் குறிப்பாக வடக்கில் இலங்கை இராணுவம் எந்தவிதமான பாரிய இராணுவம் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு இந்தியா அண்மைக்காலம் வரை எதிராக இருந்தது. விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது என அது அண்மையில் தீர்மானித்துள்ளதன் காரணமாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி இரகசியமாக ஏதும் செய்தாலன்றி வெளிப்படையாக இந்தியா இதில் அக்கறை கொள்ளாது எனச் சில வட்டாரங்கள் கூறின.

இதேநேரத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை நடாத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம், விலைவாசி உயர்வுகளினால் தெற்கில் உருவாக்கப்பட்ட எதிர்ப்பிலிருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கு உதவியுள்ளது வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் சனாதிபதி பிரேமதாசாவுக்கெதிராக எதிர்க்கட்சித் தலைவர்கள் சுமத்திவரும் சில குற்றச்சாட்டுக்களை நிச்சயம் கைவிடச் செய்யும் எனச் சிலர் நம்புகின்றார்கள்.

விடுதலைப் புலிகளுடன் இரகசியமான பேச்சுவார்த்தை களில் சனாதிபதி அவர்கள் ஈடுபட முயற்சிப்பதை இப்பொழுது எவரும் குறை கூறமுடியாது. அண்மைய நடவடிக்கைகளைப் பார்க்குமிடத்து இந்தியாவும் இலங்கையில் இராணுவ நட வடிக்கை மேற் கொள்ளப்படுவதையிட்டு வாய்பேசாது இருக்க வேண்டியிருக்கும்.

வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கை ஒரு தற்காலிக மாக இராணுவ நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் அது அரசாங்கம் எதிர் கொள்ளளும் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதோடு உள்ளூர் எதிர்க்கட்சி அரசியல் வாதிகளை யும் இந்தியாவையும் வாய்பேசாது இருக்கச் செய்யும்.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆளுங்கட்சியிலுள் ளவர்களின் உதவியுடன் எதிர்க்கட்சிகள் தனக்கெதிராகக் கொண்டுவந்த குற்றவியல் பிரேரணையில் வெற்றி கண்ட சனா திபதி பிரேமதாசா அவர்கள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்க முடியும் எனத் திடமாக நம்புகின்றார். உடு கம்பொல விவகாரம், தேர்தல் ஆணையாளரின் அறிக்கை மற்றும் பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற மோதல் கள் அவருடைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துக்கு அதிர்ச் சியைக் கொடுக்கக் கூடியனவாக இருந்த போதும், சனாதிபதி தன்னுடைய புத்திசாலித்தனமான நடவடிக்கைகளால் நிலை மையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்.

சனாதிபதியை எவரும் குறைத்து எடைபோட முடியா தெனச் சிலர் நம்புகின்றார்கள். ★

---

குறிப்பு:-

இக்கட்டுரையில் இரண்டு ஆண்டுகளில் காயமடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 680 என வந்துள்ளது. ஆனால் 6700 என்பதே சரியாகும். (7. 06. 92 சண்டே ரைம்சின் ஆசி ரிய தலையங்கத்தில் 6690 என்றும், 3-6-92 வீரகேசரியில் 6700 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.)

# பிடி நழுவவிடப்படுகிறது

(நியூஸ் வீக் - 04-06-92)

கறுப்பின அமெரிக்கர்களின் எதிர்கால நம்பிக்கை குறையும்போது அச்சங்களும் சந்தேகங்களும் தோன்றுகின்றன.

அமெரிக்காவின் வாழ்க்கை இறப்புப் பற்றிய புள்ளிவிபரங்களை நோக்குவோம்.

அமெரிக்காவிலே வாழ்கிற ஆபிரிக்க — அமெரிக்க இனத்தவர் மத்தியில் 1000 (ஆயிரம்) பிறப்புக்களுக்கு 17.7% மான இறப்பு என்று கணிக்கப்பட்டுள்ளது. சராசரி வெள்ளை இனத்தவர்களின் இறப்பு விகிதத்தோடு ஒப்பிடும் போது இது இரண்டு மடங்காகும். மலேசியாவில் உள்ள இறப்பு விகிதத்திலும் பார்க்க இது கூடுதலாகும்.

பெற்றோர்கள் ஒருவரோடுமட்டும் வாழ்கின்ற ஆபிரிக்க-அமெரிக்கர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை அவ்வாறு வாழுகின்ற வெள்ளை இனக்குழந்தைகளையும் பார்க்க 3 மடங்காகும். 43.2% ஆபிரிக்க, அமெரிக்கக் குழந்தைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழுபவர்களாவர்.

அமெரிக்காவில் எய்ட்ஸ் என்னும் பயங்கர நோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களும் 28.8% இனர் ஆபிரிக்க அமெரிக்கர்களாவர். அவ்வாறு எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட அந்த இனத்தவருள் 52 %இனர் பெண்களாவர். மகப்பேற்றின் போதே இந்தக்கொடிய நோயால் பாதிக்கப்பட்ட அமெரிக்கக் குழந்தைகளும் 53 %இனர் கறுப்பினக் குழந்தைகளாவர்.

15 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்ட ஆபிரிக்க அமெரிக்க ஆண்களின் இறப்புக்கு முக்கிய காரணம் இப்போது கொலையாகவே இருக்கின்றது. அமெரிக்க நாட்டில் கொலை செய்யப்படுபவர்கள் அரைவாசிப் பங்கினர் கறுப்பினத்தவரே.

1989ம் ஆண்டில் 20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப் பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்களுள் 23% இனர் சிறையில் அல் லது நன்நடத்தைப் பணியில் அல்லது சட்டபூர்வ கண்காணிப் புக்கு உட்படவேண்டிய நிலையிலிருந்தனர். ஒரு ஆய்வின்படி பதினைந்து வயதுக்கும் முப்பத்திநாலு வயதிற்கும் இடைப்பட்ட கறுப்பின ஆண்களுள் 1/5 பங்கினர் குற்றவியல் பட்டியலில் பெயர் பதிக்கப்பட்டோர் ஆவர்.

தெரிந்தோ தெரியாமலோ இந்த இயக்கங்கள் கறுப்பின மக்கள் மத்தியிலே சமூக நெருக்கடி ஒன்று உருவாகி அவர் களை நிலைகுலையச் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின் றது. இந்த நெருக்கடி ஆபிரிக்க அமெரிக்க ஆண், பெண், குழந்தைகளை மட்டுமல்ல முழுநாட்டையுமே பீடித்துள்ள பிரச் சினையாகும். வறுமை, குற்றவியல், போதைவஸ்துக்கள், குடும்பச் சமுதாயச் சிதைவுகள் என்பனவே இந்த நெருக்கடிக் கான காரணங்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதோடு அதனுடைய கொடுந்தன்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட தாகும். இந்தப் பல்லின நெருக்கடி தொடர்பான கறுப்பின மக்களின் அச்சம் நாளாந்தம் வளர்ந்துகொண்டே வருகின்றது. 1991ம் ஆண்டு 'நியூஸ் வீக்' பத்திரிகையின் கணிப்பீட்டின்படி கடந்த பத்து ஆண்டுகளில் கறுப்பின மக்களின் வாழ்க்கை கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது எனக்கொள்வோரின் விகிதாசாரம் 35 இல் இருந்து 51 ஆக உயர்ந்துள்ளது. 1960களிலி ருந்து பார்க்கும் பொழுது கறுப்பின மக்கள் இன்று மிகக் கீழ் நிலையை அடைந்திருக்கிறார்கள் 'என்று ஆபேட் வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த உளவியல் இணைப் பேராசிரியர் கலாநிதி அல்வின் போசைன்ட் கூறியுள்ளார். 'எதிர்காலத்தைப் பற்றி எந்தக் கறுப்பினக் குழந்தையிடம் வினாவினாலும்' அடுத்த ஆண்டு இந்தக்காலம் வரை நான் உயிரோடு இருப்பேன் என்று நம்புவேனாக எனக்கூறுவதைப் பார்க்கலாம். இது பயங்கர மான தாகப் போய்க் கொண்டிருக்கிறது என எண்ணுகின்றேன்.

நியூஸ் வீக் பத்திரிகை பல ஆபிரிக்க அமெரிக்க புத்தி ஜீவிகளையும் குடியியல் செயற்பாட்டாளர்களையும் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளையும் செவ்வி கண்டதில் போசேனுடைய இருள் மிக்க அந்தக் கணிப்பீடு சரியா னது என்றே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நகர்ப்புற வாசிக ளைப் பாதிக்கும் குற்றவியல் சமூகப் பிரச்சனைகள் ஆபிரிக்க-அமெரிக்கர்களை வெகுவாகப் பீடித்திருக்கின்றது என்று வில்லி யம் றாஸ்வெக என்ற வோஷின்டன் போஸ்ற் பத்திரிகையாளர்

தெரிவிக்கின்றார்கள். கறுப்பின அமெரிக்கர்கள் ஒரு இனமாக வாழ்வதே கேள்விக்குரியதாகிவிட்டது என்பதே ஜாஸ்வெரியின் கருத்தாகும். இளைஞர்களைக் கொண்ட குறிப்பாக ஆண்களைக் கொண்ட ஒரே பரம்பரையையே இழந்துகொண்டிருக்கின்றோம். இது எமது சமூகத்திற்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்என்றும் அவர் கூறுகின்றார். எமது பிள்ளைகளை'இழந்து நாங்கள் ஒரு மக்கட் சமுதாயமாக வாழமுடியுமோ என்று தெரியவில்லை என்றும் திரு.றாஸ்வெரி குறிப்பிடுகின்றார். வேறு பல கறுப்பினத் தலைவர்களின் அபிப்பிராயத்தோடு ஒப்பு நோக்கும் போது றாஸ்வெரியின் கருத்துத் தீவிரமானதாகவே தோற்றமளிக்கின்றது. புளோகிடாவின் அட்பாண்டிக் பல்கலைக் கழக வரலாற்றாசிரியர் கெனத் கோயிங்ஸ் 'நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பார்த்து அதிர்ச்சியடையாத அறிவாளிகள் எவருமே கிடையாது' என்று கூறுகிறார்.

அமெரிக்காவின் இன உறவுகள் பற்றிய நீண்ட கசப்பான வரலாற்றினை உற்று நோக்கும் போது ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கு அந்த நாட்டு வாழ்க்கையிலே புரை ஓடப்படுவதைத் தவிர்க்க முடியாது என்பது புலப்படும். அமெரிக்காவிலே வாழுகின்ற இளைஞர்களின் 'சுதந்திரமாக மிதக்கும் ஆத்திரம்' 'நாங்கள் மரணிப்பதைப் பார்க்க விரும்பும்' வெள்ளையர்கள் பற்றிய சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது எனவும் பொசென்ட் குறிப்பிடுகின்றார். நகரங்களிலே உள்ள குற்றவியல் சமூகப் பிரச்சினைகள் அனைத்தும் ஆபிரிக்கஅமெரிக்கர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற இனவாத சதித்திட்டத்தின் பலன் தான் என்று தனது மாணவர்கள் நம்புவதாக கோயிங்ஸ் கூறுகின்றார். மயக்கத்தை ஏற்படுத்தும் கொக்கேன் என்ற போதை வஸ்து கண்டுபிடிப்பு மிக இலகுவாக கைக்கெட்டும் பயங்கர ஆயுதங்கள், நகரத்திலுள்ள கறுப்பின மக்களிடையே தோன்றிய எய்ட் கிருமிகள் அனைத்தும் இந்தச் சதித்திட்டத்தின் ஒரு பகுதியே எனக் கூறலாம். சன்ஸ்பிறன்ஸ்சிஸ்கோவிலுள்ள கிளைட் ஐக்கிய மெத்திடிஸ்த தேவாலயத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய சிசில் வில்லியம்ஸ் இதனை 1990 முறையிலான இனப் படுகொலை' என வர்ணித்துள்ளார். ஒரு குறிப்பிட்ட நபரையோ அல்லது குழுவையோ நாங்கள் விரல்காட்டிக் குற்றஞ் சாட்டிவிட முடியாது. ஆனால் அமெரிக்க சமூகத்திலுள்ள கறுப்பின மக்களும் முடிந்தளவு எண்ணிக்கையினை மயக்கி அழித்துவிட



2193C.C

ஒரு சதித்திட்டம் உருவாகி இருக்கின்றது என்பதில் எம்முள் பலருக்குச் சந்தேகமே இல்லை 'என்றும் சிசில் வில்லியம்ஸ் கூறுகிறார்.

எந்தவொரு பேராசிரியரோ அரசியலாளரோ அல்லது குடியியல் செயற்பாட்டாளரோ, நியூஸ் வீக்குப் பத்திரிகையின் நிருபர்கள் செவ்வி கண்ட போது 'இனப்படுகொலை' என்ற பதத்தை நேரடியாக பிரயோகிக்கவில்லை. நியூஸ் வீக்குப் பத்திரிகையின் வாக்கெடுப்பு காட்டுகின்றபடி வயது வந்த கறுப்பின மக்கள் குறைந்த விழுக்காட்டினரே போதை வஸ்து, எய்ட்ஸ் என்பன இனவாத சதித்திட்டந்தின் பயனாக எழுந்தது என நம்புகிறார்கள். அதே வேளை ''கலுப்' அமைப்பின் பகுப்பாய்வின் குறைந்த விழுக்காட்டினர் பற்றிய இந்தக் கணிப்பீடு தவறானது என்றும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இந்தச் சதி பற்றிய யோசனை உண்மைதான் எனக் கறுப்பு அமெரிக்கர்களின் தேசிய மாதிரி எண்ணிக்கைகளில் 40% இனர் நம்புகிறார்கள் எனவும் கூறுகிறது. விடயமறிந்த, சிந்திக்கும் ஆற்றலுள்ள பல ஆபிரிக்க - அமெரிக்கர்கள் நகரத்தில் நிலவும் பல சமூகச் சீர்கேடுகளுக்கு, நிலையான இனவாத சமூகப்பாராமுகமே காரணம் எனக்கணிப்பீடு செய்கிறார்கள்.

''கறுப்பு இனமக்களை நெரிக்கப் போகிறோம் என்று சொல்வதற்கு ஒரு அறையிலே ஐந்து பேர் கூடியிருக்க வேண்டியதில்லை. 60% மான ஆபிரிக்க அமெரிக்க இனமக்கள் நகர்ப்புறங்களிலேயே வாழ்கிறார்கள், என்பதால் நகரங்கள் உங்கள் பட்டியலிலே இறுதியாக இடம்பெறுமானால் ஆபிரிக்க - அமெரிக்கர்களை உங்கள் இலக்காக்கிவிடுவீர்கள்'' என்று சன்பிரான் சிஸ்கோவில் வசிக்கும் பொருளியலாளரும் எழுத்தாளருமான கலாநிதி ஜூலியன் மல்வியோக்ஸ் கூறுகிறார்.

இது வேண்டுமென்றே செய்யப்படும் அவமரியாதையாகும். இதைத் திட்டமிட்ட சதி என்று கூற நான் விரும்பவில்லை. ஆனால் இந்த உதாசீனம் இரக்கமுள்ள செயற்பாடல்ல.

## நிகழ்ச்சி நிரல்

குறைந்த வருமானமுள்ள லட்சக்கணக்கான ஆபிரிக்க-அமெரிக்க இன மக்கள் மிகவும் ஆழமானதும் நிரந்தரமானதுமான துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்ற பரவலான

உணர்வு கறுப்பினத்தலைவர்களின் சகல பிரிவினரையும் உணர்வு பூர்வமான கவலைக்குள்ளாக்கிவருகிறது. என் ஏ ஏ சி பீ போன்ற மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றிய, இதனால் புதிய வினாக்கள் எழுகின்றன. இது கறுப்பின 'அமெரிக்கர்களின் பாரம்பரிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மீளாய்வு செய்ய அவர்களைத் தூண்டுவிக்கின்றது. அந்த நிகழ்ச்சிநிரல் வாக்களிக்கும் உரிமைகள், தெரிவுசெய்யப்படும் செயலகங்களின் பதவிகளுக்கான தகுதிகள், விரிவாக்கப்பட்ட தொழில்வாய்ப்பு கல்வி என்பனபற்றி விரிவாக இடித்துக்கூறுகிறது. இவ்வகையான உறுதிப்பாடு நிறைந்த நடவடிக்கைகள் பழைமைவாதிகளின் தாக்குதலுக்கிலக்கான போதும் சமசந்தர்ப்பத்துக்கான இந்த 20 ஆண்டுகாலப் போராட்டம் ஆபிரிக்க - அமெரிக்க இனமக்களின் பிரதான பொருளாதார நீரோட்டத்திற்குள் இட்டுச் சென்றுள்ளதோடு பாதிக்கப்பட்டவர்கள், பின்தள்ளப்பட்டுமுள்ளார்கள்.

''எமக்கு இரண்டு லாபங்கள் கிடைத்தன'' என்கிறார் கிளேவ்லண்ட் மேயர் மைக்கல் வைற். கறுப்பின மக்களில் ஒரு தொகுதியினர் மிகவும் சிறப்பாக முன்னேறியுள்ளனர். பொருளாதார ரீதியிலாவது அவர்கள் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளனர் என்று கூறலாம். அடுத்த ஒரு கறுப்பின அமெரிக்கர்களின் தொகுதி பொருளாதாரக் கிணற்றின் அடித்தளத்தில் உள்ளவர்கள் அல்லது செங்குத்துப்பாறையில் வீழ்பவர்களை உள்ளடக்கும் அந்தக்குழு வளர்ந்துவரும் குழுவாகும்.

இப்போதுள்ள பிரச்சினை, எஞ்சியுள்ள பாரபட்சத்தடைகளை உடைத்தெறிவது போதுமானதா அல்லது குறைந்த வருமானமுள்ள கறுப்பின மக்களை அவர்களுடைய சமூகப் பிரச்சினையிலிருந்து மீட்டெடுப்பதற்கான போராட்டத்தையார் முன்னின்று நடத்துவதென்பதும் எவ்வாறு அதைச் செய்ய முடியும் என்பதும்தான். ஜோர்ஜ் புஸ்சை விடுத்து வில்கிளின்டனைப் பற்றியும் ஜெரி விறவுணைப் பற்றியும் பல ஆபிரிக்க அமெரிக்க தலைவர்கள் மிகநம்பிக்கையற்று இருக்கிறார்கள். வளர்ந்து வரும் அமெரிக்க நகரப் பிரச்சனைகளை எதிர்கொள்ள இவர்கள் இருவரும் தயாராக உள்ளார்களா என்ற ஐயப்பாடு அந்த மக்களிடையே இருந்துவருகின்றது. நியூஸ் வீக்கின் கருத்துக்கணிப்பின் படி சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு' அரசை வற்புறுத்துவதே வழி என்பதை 24%கறுப்பின வளர்ந்தோர் மட்டுமே ஆதரிக்கிறார்கள் .100 கறுப்பு மனிதர்கள் போன்ற இயக்கங்கள் நகர்ப்புறத்திலே வாழுகிற இளைஞர்களை அணுகுவதற்கு அடித்தளத்திலிருந்தே பாடுபட்டுவருகின்றார்கள். தென் கிறிஸ்தவ

தலைமைத்துவ மகாநாடு பத்துப் பிரதான நகரங்களில் கொலையை நிறுத்தும் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். நாடளாவிய ரீதியில் குழந்தைகளைக் காப்பாற்று இயக்கத்தை முன்னெடுத்த றாஸ்வெரி கறுப்பின அமெரிக்க மக்கள் இன்ன முமே 60 களில் அடிமைகளாகவே வாழ்கிறார்கள் எனக் குறிப் பிட்டுள்ளார். அவர்களுடைய அரசியல் இயக்கம் அத்தகைய தாகவே இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இனவாதமும், ஏழ் மையும் தான் இன்று நாம் இருக்கும் நிலைமைக்கும் கராணம் என்பதை அவர் ஏற்றுக்சொள்ளவில்லை. கறுப்பினக் குடும்பத் தையும், கறுப்பினக் குழந்தையையும் காப்பாற்றுவதற்கு அரசு அதிக அளவு எதையும் செய்துவிட முடியும் என்பதில் சந்தேகம் இருக்கிறது. நாமே செய்து கொள்ள வேண்டிய பணிகளுக்காக அரசுக்குத் தூண்டி போடுவதுதான் எம்முடைய தீர்வுகளை தேர்தல் அரசியலோடு இணைப்பது என்றும் அவர் கூறுகிறார். நாம் இந்த இயக்கத்தை ஆரம்பித்த உடனே அரசு எதைச்செய்ய வேண்டும் என்பதைக் கூறுவோம். உடனடியாகக் கூறுவதற்கு எதுவும்மில்லை:

## அழித்தல் மட்டுமே

குறைந்த வருவாயுள்ள ஆபிரிக்க அமெரிக்கர்களை எதிர் நேர்க்கும். பிரச்சினைகள் மீளமுடியாத அளவுக்கு சிக்கல் நிறைந் ததாக உள்ளது என்ற ஏகோபித்த கருத்து இருந்து வரு கின்றது வீடில்லாத் திண்டாட்டம், எய்ட்ஸ் நோய், போதை வஸ்துப் பாவனைகள் என்பன சமூக சேவை முகவர்களுக்கு தாங்கமுடியாத தலையிடியைக் கொடுத்து வருகின்றன. பொலி சாரிடம் போதைவஸ்து தொடர்பான குற்றங்கள் நிரம்பி வழி கின்றன, பல நகரங்களின் உட்புற எல்லைகளிலிருந்து நடுத்தர கறுப்பின மக்கள் நகர எல்லைப்புறங்களை நோக்கி படிப்படி யாக விலகிவருவதால் நகரங்களிலே குடியியல் தலைமை இல் லாமல் போகின்றது. மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தின் கறுப்பின மக்கள் தொடர்பான ஆய்வுத்திட்ட இயக்குனர் ஜேம்ஸ் எஸ். ஜக்சன் சில காலங்களில் இந்த இடங்களிலே யாருமே வாழ மாட்டார்கள் புல்டோசர்கள் மூலம் இந்த இடங்களை அழித்து புதிதாக ஆரம்பிக்க வேண்டியதுதான்' என்று கூறுகிறார். அதே வேளை அவர் கூறுவது போலவே நகர்ப்புற கறுப்பினக் குடும்பங்கள் பலதரப்பட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதால் எது எதனால் ஏற்படுகின்றது என்பதைக் கண்டுகொள்வது மிகக்கடினமாக உள்ளது,

கறுப்பின பழைமைவாதிகள் குடும்ப நலன்களைப் பாது காப்பதும் புஸ் நிர்வாகம் முன்வைத்துள்ள மறுசீரமைப்புக்களை ஏற்றுக் கொள்வதுமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகும் என நம்புகிறார்கள். ஏனைய குடியரசுக் கட்சியினரைப் போலவே கெனெற்றிக் கட் பிரதிநிதி கரிபிரான்ஸ்சும் சேம நல மறுசீர மைப்புக்களையே வற்புறுத்துகிறார். தேசிய போதைவஸ்துக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் முன்னாள் இணை இயக்குனரான நீதிபதி றெசிவோட்னல் கறுப்பின அமெரிக்கர்களுக்கு கல்விக் கூடங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கடினமான முறையில் சட்டத்தை அமுலாக்கல், போதைவஸ்து தொடர்பான கல்வி அதற்கான வைத்தியம் என்பன தேவையென வற்புறுத்துகின் றார். முந்நூறு பழைமைவாதக் கறுப்பின மதகுருமார் கடந்த வாரம் வாஷிங்டனில் ஒன்றுகூடி புதிய தலைமையின் கீழான ஒரு புதிய நிகழ்ச்சி நிரல்' கறுப்பின அமெரிக்கர்களுக்கு வேண் டும் என கூறியிருக்கின்றார்கள். அந்த மாநாட்டிலே பங்குபற் றிய ஒருவர் 'நாங்கள் இனிமேலும் ஒரு கட்சியைச் சேர்ந்த மக்கள் அல்ல என்ற செய்தியை அறிவித்துவிட வேண்டும் என் றும் கூறினார். சாதகமான நடவடிக்கைத் திட்டங்களை விமர் சிக்கும் பிரபல்யமான செல்பிஸ்ரீல் என்பவர் கறுப்பின மக்க ளுக்கான உதவி என்ற பெயரில் நாட்டின் நகரங்களுக்கு அளிக்கப்படும் மீள்உதவிகளை வெள்ளை இன அரசியல்வாதிகள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொன்னார். இந்தச் சமூகங்க ளுக்கு எதிர்காலம் என்ற ஒன்றே இருக்காது' எனவும் சொன் னார். 'இதில் முக்கியம் என்னவென்றால் இதைவிட்டு வெளி யேறி வேலைகளைச்செய்து பணிகளை முடிப்பதுதான்'

## கடினமாக்கல்

கறுப்பின அரசியல்வாதிகளிடையேயும் சிந்தனையாளர் கள் இடையேயும் பெரும்பான்மையாகவுள்ள சனநாயக லிபெ ரல் வாதிகள் விரிவான அரசாங்கத் தலையீட்டின் தேவையை வற்புறுத்துகின்றார். கிளீவ்லன்ட் மேயரான வைட் என்பவர் (கறுப்பின அமெரிக்கர்களின் வாழ்வுக்கான விடயங்கள்) பற்றிக் குடியுரிமை இயக்கங்கள் பேசத்தொடங்கவேண்டுமெனக் கூறுகி றார். பிரதிநிதிகள் சபையின் முன்னாள் கொறடாவும் இப் போது ஐக்கிய நீக்கிறோ கல்விநிதியத்தின் தலைவருமான வில்கிறே என்பவர் துவக்குகளைக் கட்டுப்படுத்தவும் போதை வஸ்துப் பாவனைக்கு எதிராக கடுமையாகச் சட்டங்களை அமு

லாக்கவும் சேமநலன்களை மறுசீரமைக்கவும், கல்லூரிகளை விட்டுவெளியேறும் இளைஞர்களின் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லியுள்ளார்.

இவை எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேசிய முன்னுரிமை ரீதியில் மறு ஒழுங்கு அமைப்பு ஏற்பட வேண்டும்; விபெரல்களின் வார்த்தையிலே கூறுவதானால் நகரங்களுக்கு ஒரு மார்சல் திட்டம் தேவை மனித நேயம் வரும் ஒரு காலகட்டத்தில் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசுக்குள்ள திறமை மீது அவநம்பிக்கை ஏற்படுகின்ற நேரத்தில் எவருமே வாஷிங்டன் சரியாகச் செய்யுமென்று எதிர்பார்க்க முடியாது. இந்த நிலை கறுப்பின அமெரிக்கர்களின் முன் இரண்டு பெரிய வினாக்களை எழுப்பியுள்ளது. யார் தலைமை தாங்குவார்கள் யார் இதற்கான உதவிகளைச் செய்யப்பே கிறார்கள் என்பதே வந்த வினாக்களாகும். அந்த வினாக்களின் விடைகளே இந்தப் பிரச்சனைகளைத் திசை திருப்பவல்லது.

ஒரு நல்ல சொற்பொழிவின் அழகு அதற்கு நல்ல துவக்கம் இருக்க வேண்டும், நல்ல முடிவு இருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டையும் விட முக்கியமானது இரண்டிற்கும் இடையே உள்ள தூரம் மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

# ஏன் இது ஓர் அறிவுப் பிறழ்ச்சி அல்ல, கறுப்பினத்தவருக்கெதிரான அமெரிக்காவின் சரித்திரத்தில் போடப்பட்ட திட்டங்கள்

*(நியூஸ் வீக் - 06-04-1992)*

கறுப்பின மக்களுக்கு எதிரான இனப்படுகொலைத் திட்டம் ஒன்றைப்பற்றி கூறினவுடன் அமெரிக்க வெள்ளையர்கள் தாம் எப்பொழுதும் நியாயத்துக்குக் கட்டுப்படுபவர்கள் போல் அப்படி ஒன்றை நம்பமுடியுமா என்ற விதத்தில் ஒப்புக்கொள்ள மறுப்பது வழமையாகவுள்ளது. உடனடியாக நேர்முகமாக மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். 1950இல் கறுப்பினத்தவர்களை வெள்ளையர் அழிப்பதாகக் காட்டும் ஒரு படம் எடுக்கப்பட்டது, அதன் ஒரு காட்சியில்கொடூரமானவழிகளைக்கொண்டஐந்துவெள்ளைக் காடையர்கள் ஆய்வுகூடங்களில் அணியப்படும் வெள்ளை மேலங்கிகளில் தோன்றி கறுப்பின மக்களை அழிக்க முயற்சி செய்வதைக் காட்டுகிறது. இந்தக் காட்சி கறுப்பின மக்களிடையே ஏற்படுத்திய குரோதத்தைச் சிறுபிள்ளைத் தனமானது எனக்கூறி கறுப்பின மக்களைக் கொல்ல எடுக்கும் தங்கள் முயற்சியை வெள்ளையர்கள் மறுக்கிறார்கள். கறுப்பினத்தவரின் போராட்டம் நியாயமானதென்றும் ஆனால் மடமைத்தனமானது என்றும் கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் தாங்கள் நியாயத்துக்கு கட்டுப்பட்டவர்களென்று கூறிக்கொண்டு மறுபக்கத்தில் கறுப்பின மக்களை அழிக்கக்கூடிய திட்டங்களை அவர்கள் உருவாக்குகிறார்கள். என் தாயார் கூறுவதுபோல கறுப்பினத்தவர்கள் எப்பொழுதும் பிழையாக இருப்பார்கள் என்று கூறமுடியாது. சில கறுப்பினத்தவர்கள் தங்களைக் கொல்ல ஒரு இரகசிய வெள்ளையர் கூட்டம் எத்தனிக்கிறது என்று கருதுவார்களேயானால் அதற்குச் சில காரணங்கள் இருக்கத்தான் வேண்டும்.

அமெரிக்க நாடு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அதன் யாப்பு எழுதப்பட்ட நாளிலிருந்து அதிகாரத்திலிருந்த அமெரிக்கர்கள் வேறு நிறத்தையுடைய மக்களுக்கு குறைந்த அந்தஸ்துக்

86816

கொடுக்கும் சட்டங்களைக் கொண்டுவராதிருப்பின் அத்துடன் அமெரிக்காவின் விஞ்ஞானம், ஆத்மீகம், தத்துவம் ஆகியன கறுப்பு நிறத்தவரை அடிமைகளாக இருப்பதற்குத் தகுதியில்லாதவர்கள் என நிரூபித்து, அவர்கள் தங்கள் பாவங்களுக்கும் இழிவுகளுக்கும் தாங்களே பரிகாரம் தேடி முன்னேற்றம் காண வழி சமைத்திருந்தால் இவ்வினப் படுகொலைத் திட்டங்களைப்பற்றி எவரும் பயப்படத்தேவையில்லை. ஆனால் மேற்படி நடவடிக்கைகள் அவ்வித திட்டமிருப்பதை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தப்பித்துக்கொள்ள முடியாததுமான விதத்தில் வெளிக்காட்டுகிறது.

கறுப்பின மக்களை உயிரோடு வைத்திருந்து வேலைவாங்குவதே நோக்கமானதாக இருந்ததால் இனப்படுகொலை எனக் கூறமுடியாவிடினும் இறப்புக்களையும் மனித உரிமைக்கும் ஏற்பட்ட அழிவுகளையும் நோக்குமிடத்து இழப்புக்கள் கூடியனவாகவே தெரிகிறது. அடிமை வியாபாரத்தை ஆராயும் வரலாற்று ஆசிரியரான பெசில் டேவிட்சன் (Basil Davidson) அவர்கள் கப்பலில் குறைந்தது ஒன்றரை மில்லியன் அடிமைகள் இறந்தனர் என்றும் ஆபிரிக்காவின் உட்பகுதிகளில் இருந்து அமெரிக்கா வந்தடையும் வரை பலமில்லியன் அடிமைகள் இறந்தார்கள் என்றும் கூறுகிறார். அதன்பின்னரும் அவர்கள் இறுதியாக வந்தடையவேண்டிய இடங்களிலும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ''புதிய நீக்கிரோ இனத்தவர் ஒருவரை அவரின் பிடிவாதம், அவரின் ஆன்மீகப் பெருமை போன்ற குணங்களிலிருந்து விடுபடச் செய்யவேண்டுமாயின், ஒரு வேட்டை நாயைப் பழக்கி எடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளிலும் பார்க்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் இருந்தது என்று 17ஆம் நூற்றாண்டில் பல பிரயாணங்களை மேற்கொண்ட ஒருவர் எழுதியுள்ளாரென லெறன் பெனெற்றினுடைய (Lerone Bennetts) மேவோர் த மே புளவர் (Before the May Flower) ஒன்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.... அவர்களை வெற்றிகொள்வதற்கு முன்னரே பெரும்பாலும் அவர்கள் இறப்பது உண்டு.'' என்று இந்நூல் கூறுகிறது.

நீக்கிரோக்களின் பிரச்சினை உருவாக்கப்பட்டபின் அதைத் தீர்த்துவைக்க ஒன்றுக்குப்பின் ஒன்றாக பல திட்டங்களை அமெரிக்க வெள்ளையர்கள் கொண்டுவந்தனர். வடபிராந்தியத்தில் உள்ள செல்வாக்குமிக்க வெள்ளையர்கள் சுதந்திரமான கறுப்பின அமெரிக்கர்களை கொல்லாது அவர்களை ஆபிரிக்காவில் ஓர் இடத்தில் குடியேற்றுவதற்கு அமெரிக்க குடியேற்றக் கழகம்

என்ற அமைப்பை 1816இல் உருவாக்கினார்கள். கறுப்பின மக்கள் மனித இனத்துக்கு கீழ் நிலைப்பட்டவர்கள் என்ற மாயையை சுதந்திர அமெரிக்கர்கள் வெற்றிகரமாக பொய்ப்பித்து வரு வதை அறிந்த தென்பிராந்திய வெள்ளையர்களும் இவ்வமைப் பில் சேர்ந்தார்கள். பிலடெல் பியாவின் (Pheladelphia) கறுப் பர்களின் வரலாற்றைத் திறம்பட எழுதிய கரி நாசின் (Gary Nash) போஜிங் பிறீடம் (Forging Freedom) என்ற நூலில், 3000 சுதந்திரக் கறுப்பின மக்கள் 1817இல் பெதல் ஆபிரிக்கன் மெதடிஸ்ற் எப்பிஸ் போப்பல் திருச்சபையில் Bethel African Methodist Episcopal Church ஒன்றுகூடி இத்திட்டத்தை ஆட்சே பித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. கூடுதலான சுதந்திரம்பெறும் நோக்கில் அமெரிக்காவைவிட்டு வெளியேற சிலர் விரும்பிய போதும், ''ஒரே இரத்தத்தால் பிணைக்கப்பட்டும், அவர்களுடைய இன்பதுன்பங்களில் பங்குபற்றியும் எமக்கிழைக்கப்படும் தவறு களையும் உணர்ந்துமுள்ள நாங்கள் எமது சகோதரர்களாகிய இந்நாட்டு அடிமைகளை விட்டு மனதார பிரியமாட்டோம்'' என்று தீர்மானித்தனர்.

உள்நாட்டுப்போரின் பின் அரசியல் யாப்பிற்குக் கொண்டு வரப்பட்ட 14ஆவது திருத்தம் கறுப்பின அமெரிக்கர்களுக்கு முழு குடியுரிமையைப் பெறும் உரிமையைக் கொடுத்தது, இதற்கு முப் பது ஆண்டுகளுக்குப் பின்னர் தென்மாநில அரசுகள் இத்திருத் தத்தைச் செயலிழக்கச் செய்வதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கையாண்டனர். பிலெசி எதிர் பேகூசன் (Plessy Vs Ferguson) என்ற மோசமானது என புகழ்பெற்ற வழக்கில் 1896இல் அமெரிக்க மேல் நீதிமன்றம் ''பிறிம்பானது ஆனால் சமமானது'' என்ற தீர்ப்பின் மூலம் மாநில அரசுகளுக்கு தனது ஆதரவை நல்கியது ஜிம்குறோவி னால் (Jim Crow) கொண்டுவரப்பட்ட தேர்தல் வரிகள் வெள் ளையர்களின் வாக்குத் தகைமைகளை 'சீர்திருத்தம்' செய்வ தென்ற போர்வையில் சொத்துக்கள் கல்வித்தகைமைகளில் திருத் தங்களை ஏற்படுத்தியதின் மூலம் கறுப்பின மக்களின் வாக்குரி மையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று வர லாற்று ஆசிரியர் வான்வுட்வேட் (Van wood ward)டின் ஆவணங் கள் எடுத்துக்காட்டுகின்றன. அதன்படி 1896க்கும் 1904க்குமிடை யில் லூசியானா (Louisiana) விலிருந்து 130,344 ஆக இருந்த கறுப்பின வாக்காளர்களின் தொகை 1,342 ஆகக் குறைந்தது.

அதே காலப்பகுதியில் 26 மாநில வட்டாரங்களில் பெரும்பான்மையோராகப் பதிவுசெய்யப்பட்டிருந்த நீக்கிரோக்கள் அந்த 26 மாநில வட்டாரம் ஒன்றிலேனும் பெரும்பான்மையற்றவர்களாக்கப்பட்டனர்.

இவற்றைத் தொடர்ந்து, பொதுவாழ்க்கையில் பிரித்து வைக்கப்படுத்தல் மற்றும் இழிவுபடுத்தல் ஆகியவற்றுடன் தனிமைப் படுத்தும் சட்டத்தொகுப்புகள் கொண்டு வரப்பட்டன. பிரித்துவைப்பதற்கு பெரிய விடயம் சிறிய விடயமென்றிருக்காது நீராடும் இடங்கள், குளிப்பதற்கு வாளியைப் பெறும் இடங்கள், கழிவுகூடங்கள், திடல்கள், நீதிமன்றங்கள், திரை அரங்குகள், விளையாடும் பூங்காக்கள், பாடசாலைகள், காட்சிக்கொட்டகைகள் மற்றும் அயற்பிரதேசங்கள் யாவற்றிலும் கறுப்பின மக்கள் தனியாக ஒதுக்கப்பட்டார்கள். கறுப்பின மக்களின் நல்வாழ்வை விரும்பும் பத்திரிகை ஆசிரியரான ஐடா. பி. வெல்ஸ் ( Ida. B. Wells ) அவர்களால் ஆவணப்படுத்தப்பட்ட கணக்குகள்படி இக்காலப்பகுதியில் சட்ட முறையின்றி தான்தோன்றித்தனமாக கொல்லப்பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்களின் தொகை ஆண்டுக்குநூறாக இருந்தது. சட்டப்பாதுகாப்பு வழங்க முடியாதவகையில் ஆபிரிக்க அமெரிக்கர்களை மனித இனத்திற்கும் கீழ்ப்பட்ட நிலைக்குத்தள்ளும் சட்ட திட்டங்களை ஜிம் குறோ ( Jim Crow ) உருவாக்கினார். மக்கள் நிலைக்கு இழிவான நிலையில் மக்கள் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் இல்லாவிட்டாலும் அவர்களில் சிலருக்கு எதிராகவாவது நினைத்துப்பார்க்க கூட முடியாதவிடயங்களை செய்வதற்கு அனுமதியுண்டு. இறப்பை உண்டாக்கும் வியாதிகள்: 19'2ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்கு பின் அசோசியேற்றட் செய்திநிருபர் ( Associated Press Reporter ) ஒருவரால் வெளிக்கொணரப்பட்ட இரசுகியின் ஆய்வு ( Tuskegee Study ) என்ற போர்வையில் செய்யப்பட்ட ஆய்விலும் இதுபோன்ற நடவடிக்கையே நடந்தது. சிபிலிசு (Syphilis) என்ற சமுக நோயால் பீடிக்கப்பட்டிருந்த 400 கறுப்பின ஆண்களையும் இந்நோயால் பீடிக்கப்படாத 201 பேரையும் இம்மக்களிடையே இந்த நோய் வளர்ச்சியடைவதன் காரணத்தைக் கண்டறிவதற்காக அமெரிக்க சுகாதார சேவையில் பணியாற்றும் மருத்துவர்கள் பரிசோதனைக்குட்படுத்தினர். இந்த நோய்க்கு மருத்துவம், செய்யாதுவிடின் அது இறப்பை ஏற்படுத்தும் என்பதை இவ்வைத்தியர்கள் நன்கு அறிவர். இந்த நோயால் பீடிக்கப்பட்ட ஆண்களுக்கு சிகிச்சை அளிக்காமலும், இந்த நோயின் உண்மையான தன்மை மற்றும் அதன் பயங்கர விளைவுகள் பற்றி இந்நோய் கண்டவர்களுக்கு அறிவுறுத்தாமலும் வெறுமனே தங்கள் ஆய்வுக்கு

உட்படுத்த ஊக்கமளிக்கும் நோக்கில் இவர்களுக்கு பண உதவி செய்யப்பட்டது. அமெரிக்க சுகாதார சேவை இந்த விடயத்தில் தனிமையாக செயலாற்றவில்லை. அலபாமா (Alabama) சுகாதார அலுவலகம் ரஸ்கிஜீ நிலையம் (Tuskegee Institute) இரசுகீயி முதுவர் நிர்வாக வைத்தியசாலை (Tuskegee Veterans Administration) மற்றும் மக்கொண் நகர சுகாதார அலுவலகம் (Macon Country Health Department) ஆகியவையும் இதற்கு உதவியாகவிருந்தன.

சில குழுக்களுடைய வாழ்க்கையையும் மனிதத்தன்மையையும் மதிப்பதை விட வேறு சில குழுக்களுடைய வாழ்க்கையையும் மனிதத்தன்மையையும் கூடுதலாகவும் மேலாகவும் அமெரிக்கர்களாகிய நாம் மதிக்கிறோம். இது அறிவுப்பிறழ்ச்சி ஆகாது. இது மரபுவழியாக வந்த பண்பாகவும் தற்போது நடைமுறையிலுள்ள உண்மையான விடயமாகவும் விளங்குகிறது. அத்துடன் இது அமெரிக்காவின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதோடல்லாமல் பல இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் அன்றாடவாழ்வில் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் தொடர்புகளிலும் சம்பந்தப்பட்டுள்ளது. பொதுநிதியை நாம் செலவு செய்யும் முறையை இது தீர்மானிக்க உதவுவதோடு கறுப்பின அமெரிக்கர்களின் சிசுமரணம், இளைஞர் மரணம், நடுத்தர மற்றும் வயோதிபரின் மரணம் ஆகியவற்றின் ஏறுமாறான மாற்றத்துக்குள்ளாகும் புள்ளி விபரங்களைப் படித்துவிட்டும் அவற்றைத்தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கும் இது உதவுகிறது. உதாரணத்துக்கு ஐயோவா (Iowa) மாநிலத்தில் மேற்கூறிய இறப்புக்களின் எண்ணிக்கைகள் திடீரென அதிகரிக்குமாயின் நாம் கவலையுறவேண்டும்.

கறுப்பின மகன் ஒருவர் கொலை செய்யப்பட்டால் கொலை செய்தவருக்கு ஒரு கண்துடைப்பான தண்டனை வழங்கும் சட்டங்கள் இப்போது இல்லை. அதேவிதத்தில் ஆபிரிக்க அமெரிக்க மக்களை எவ்வித கேள்வி இன்றிக் கொலை செய்ய முடியும் என்று கூறுவதிலும் உண்மை இல்லை. ஆனால் அமெரிக்காவில் ஆபிரிக்க அமெரிக்க மக்களின் வாழ்வின் தரம் நீண்டகாலத்திலிருந்து இப்பவும் கூட மிகவும் குறைந்த மதிப்பற்ற நிலையில் உள்ளது என்பது உண்மையே. குவென்டொலின் புறூக்சு (Gwondelyn Brooke's) அவர்களுடைய செய்யுளில் கூறியதை மேற்கோள் காட்டுவேதாயின் '' நாங்கள் விரைவில் இறந்துவிடுவோம் '' என்பது உண்மையே.

* * *

# பப்பாளிப் பழம்

**சா**தாரணமாக பப்பாளிப்பழத்தை எப்போதும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்று கூறமுடியாது. சிலருக்கு பப்பாளிப் பழம் என்றாலே பிடிக்காது.

இதற்குக் காரணம் பப்பாளிப்பழத்தின் சிறப்பு அவர்களுக்குத் தெரியாததே.

பழவகைகளிலே அதிக சக்தி வாய்ந்ததும் உடல் நலனுக்குப் பெருமளவு உதவுவதும் ஆன அற்புதமான பழம் பப்பாளிப் பழம்.

மாம்பழத்துக்கு அடுத்து பப்பாளிப் பழத்தில் தான் வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச்சத்துக்கள் அதிக அளவில் அடங்கியுள்ளன.

பப்பாளிப் பழத்தில் வைட்மின் 'ஏ' சத்து மட்டும் (ஓர் அவுன்ஸ் பழத்தில்) 573 மில்லிகிராம் அளவுக்கு அடங்கியிருக்கிறது.

வைட்டமின் பி 1 சத்து 11 மில்லி கிராம், பி2·72 மில்லி கிராம், வைட்டமின் சி 13 மில்லி கிராம், இரும்புச் சத்து 0·1 மில்லி கிராம், சுண்ணாம்புச்சத்து 0.3 மில்லி கிராம்.

சாதாரணமாக பணவசதி மிக்கவர்கள் ஆப்பிள் பழம் சாப்பிடுவதைப் பெருமையாக எண்ணுகிறார்கள்.

ஏழைகளும் ஆப்பிள் பழம் சாப்பிடும் பாக்கியம் தங்களுக்குக் கிட்டவில்லையே என ஏங்குகிறார்கள்.

இந்த இரு சாராருக்கும் ஓர் உண்மை விளங்காது.

ஆப்பிள் பழத்தை விட மிக அதிகமான உயிர்ச்சத்துக்கள் பப்பாளிப்பழத்தில்தான் உள்ளன.

பப்பாளிப்பழம் உடல் சூட்டை அதிகப்படுத்திவிடும் என்பது சிலருடைய கருத்து. இது தவறான கருத்து இதற்குச் சரியான மருத்துவ ஆதாரம் கிடையாது,

இரத்த விருத்திக்கும் தசை வளர்ச்சிக்கும் பப்பாளிப்பழம் மிகவும் சிறந்ததாகும்.

உடலின் நோய்த் தடுப்பு ஆற்றலைப் பெருக்கும் சக்தி பப்பாளிப்பழத்துக்கு உண்டு. ஆதலால் பப்பாளிப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிடுவோருக்குத் தொற்று நோய்களே உண்டா வதில்லை.

பெண்களுக்கு என்ன காரணத்தால் மாதவிடாய் தவறினா லும் பப்பாளிப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட குறைபாடு நிச்ச யமாக அகலும்.

மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கவும் மலச்சிக்கல் இருந் தால் அகற்றவும் தொடர்ந்து பப்பாளிப்பழங்களைச் சாப்பிட வேண்டும்.

நரம்புகளை முறுக்கேறச் செய்யும் ஆற்றலும் பப்பாளிப் பழத்துக்கு உண்டு. இதன் காரணமாக பப்பாளிப்பழத்தை தொடர்ந்து சாப்பிடுவோர் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கு வதைக் காணலாம்.

பற்கள் — பல் ஈறுகள் தொடர்பான பல பிணிகளை இது விலக்கும்.

# அண்டத்தின் தோற்றம் பாரிய வெடி விபத்தினால் ஏற்பட்டது என்ற கோட்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

— வாசிங்ரன் போஸ்ற் —

(ஒப்சேவர் - 3-5-92)

மந்திர ஆற்றலினால் ஏற்படும் நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சி ஒன்று அண்மையில் அறிவியலில் ஏற்பட்டது. அண்டம் எப்படித் தோன்றியது என்பது இதுவரை காலமும் நிருபிக்க முடியாது எல்லோர் மனதிலும் வேருன்றி இருந்த ஒரு விடயமாகும், பாரிய வெடிவிபத்தினால் அண்டம் தோன்றியது என்ற திட்டவட்டமான கோட்பாடு சடுதியாக உறுதிப்படுத்தப்பட்டதே அந்த நிகழ்ச்சியாகும்.

அண்டம் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தது. காலங் காலமாக அண்டவெளியில் அடர்த்தியாக இருந்த அந்த சடப் பொருளினதும், ஆற்றலினதும் விரிவடைவினால் பாரிய வெடிவிபத்து ஒன்று வெளிப்படையாக ஏற்பட்டது என்ற கோட்பாடு 1964ஆம் ஆண்டு தொடக்கம் வானியல் ஆராய்ச்சியாளர்களினால் முன் வைக்கப்பட்டிருந்தது. இந்த வெடிவிபத்தினால் அண்டத்தில் ஏற்பட்டுள்ள கதிரியக்கத்தை வானியல் ஆராய்ச்சியாளர்களினால் கண்டறியமுடிந்தது.

இந்தக் கோட்பாடுபற்றி எதுவித கேள்வியும் எழுப்பாத ஒரு தலைமுறைக்கு மேலான மாணவர்களுக்கு இக்கோட்பாடு சரியானது என இதுவரை காலமும் போதிக்கப்பட்டுவந்தது.

இந்தப் பாரிய வெடிவிபத்திலிருந்து காலம் தோன்றியது எனவும், அதற்கு முன்னர் காலம் என்ற ஒன்று இருக்கவில்லை எனவும், அண்டவெளியின் வெற்றிடம் விரிவடைகின்றதெனவும், பாரிய வெடிவிபத்து ஒன்றினால் அண்டவெளி விரிவடைந்ததெனவும் வானியலாளர் கூறுகின்றனர். இந்தக் கோட்பாடு திரு ஐன்ஸ்ரீனுடைய, ''காலமும் அண்டவெளியும்'' என்ற கோட்பாட்டுடனும், அதன்பின்னர் திரு. எட்வேட் கபில் அவர்களுடைய

''அண்டம் விரிவடைந்து வருகின்றது'' என்ற கோட்பாட்டேனும் ஒத்துப்போகின்றது. இக்கோட்பாடுகளும் நெடுங்காலமாக முன் வைக்கப்பட்டிருந்ததும் அண்மைக்காலம் வரை இக்கோட்பாட்டின் மீது நம்பிக்கை இழக்க இடமளிக்கப்படவில்லை. ஏனெனில் இக் கோட்பாட்டுக்கு எதிரான ஒரு செயலமைப்பை வானியல் ஆராய்ச் சியாளர்கள் கண்டுபிடிப்பதற்கு முயன்றும் அது அவர்களால் முடியாமையால் இந்த வெடிவிபத்துக் கோட்பாடு ஏற்றுக்கொள் ளப்பட்டு நாம் வாழுகின்ற இந்த அண்டம் பற்றிய பட்டறிவு விளக்கமடைந்தது. அல்லாவிட்டால் இவ்வண்டத்தின் துண்டுகள் தூசிகள் என்பவற்றிற்கு விளக்கம் கொடுக்க முடியாமல் இருந் திருக்கும்.

இப்பொழுது இந்தக் கோட்பாடுஉறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த ஆதிகால வெடிவிபத்தினால் ஏற்பட்ட விளைவுகளைப் பற் றிக் கூறும் வானிலை ஆராய்ச்சியாளர்களின் தலைவரான திரு. ஜோர்ஜ்சுமூற் அவர்கள் அண்டவெளிக்காலத்திலுள்ள சிற்றலைகள் இவ்வெடிவிபத்தில் ஏற்பட்ட விளைவு என்கின்றார். இற்றைக்கு 3,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஒளி அலைகள் ஒரு கணத்தில் வெறுமைக்குள் ஊடுருவி வரும்வரை இந்தப் பாரிய வெடிவிபத்தினால் ஏற்பட்ட ஒளி அலைகள் தென்படவில்லை. இந்த ஒளி அலைகளை அவைகள் வெளிவந்த இடங்களிலிருந்து அளக்கக்கூடிய அறிவியல் ஆற்றல்கள் தொலை நோக்காடி மூலம் பெறப்பட்டன. இவ்வொளி அலைகளில் ஏற்பட்ட துரும்பு போன்ற ஒழுங்கீனங்களினால் வான்கங்கைகளும், கோள்களும் ஏனையவைகளும் அத்துடன் அரசியல்வாதிகளும் கூடத் தோன்றி னர் எனத் திரு. சுமூற் ''நியூயோர்க் ரைம்ஸ்'' பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

வானொலி அலைகளை ஒரு மில்லியனின் ஒரு பகுதி அளவுக்கு அளக்கக்கூடிய வியத்தகு சாதனங்கள் இந்த ஆய்வுக்குழுவினரி டம் உள்ளது. இதன் மூலம் இந்த அண்டம் தோன்றியது பற்றிய பின்தள ஆய்வுகளை மேற்கொண்டு அதனை நிறைவேற்ற முடிந் தது. இந்த வெடிவிபத்து ஏற்பட்ட காலத்துக்குப் பிந்திய அண் டப் படத்தையும் தற்போதைய அண்டப் படத்தையும் இந்த அலை கள் எப்படிப் பாதித்துள்ளன என்பதைக் கணக்கிட்டு வரைவதற்கு மில்லியன் கணக்கில் சமன்பாடுகள் வகுக்கவேண்டி நேரிடும் இந்தப் படங்களை நாம் விரிவாகவே ஆராயத் தொடங்கியுள் ளோம். நாம் இந்த அண்டத் தோற்றத்தை பார்ப்பதுபோல் இல் லாமல் அதன் உண்மையான தோற்றம் வேறுவிதமாகவும் இருக் கலாம்.

★

# அவுஸ்திரேலியாவில் இலங்கையின் களியாட்ட விழா

## விடுதலைப் புலிகளின் வானூர்தி அவுஸ்திரேலிய வானில் பறந்தது

(ஐலண்ட் - 02-05-92)

'தம்பியின்கடை' (Thambige Kade) என நாம் அழைப்பது போல் அப்பம், இடியப்பம், சோறு, பிட்டு மற்றும் சூடானதும் வாசனை தருவதுமான கறிகளுடன் இன்னும் பலவும் கொண்ட கடையொன்று அவ்விடத்தில் இருந்தது. இந்தக்கடையிலிருந்த பொருட்களைப் பார்த்த புகழ்பெற்ற ஆங்கிலப்பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு அவைகளின் மீது ஆசை ஏற்பட்டது. குவித்து வைக்கப்பட்டிருந்த சோற்றின் மீதே அவர்கள் விருப்பம் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் கறியை விரும்பினார்கள். குளிர்ச்சி அடைந்த அவர்களுடைய சலாட், கோழிக் கறிகளிலும் பார்க்க எங்களது உணவை விரும்பினார்கள்.

மதியஉணவு வேளையின் போது பைலா ஆட்டக்காரர்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியே அந்த நாளின் சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக விளங்கியது. இந்த நிகழ்ச்சியில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலை ஒருவராலும் நிறுத்த முடியவில்லை. இலங்கையர்களால் நடத்தப்பட்ட இந்தக் களியாட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றிய சிறு தொகையினரான வெளிநாட்டவர்களும் உள்ளூர்வாசிகளும் இந்நிகழ்ச்சியில் நடைபெற்ற எந்த நிகழ்ச்சியையேனும் தவறவிடவில்லை. இது ஒரு பெரிய கேளிக்கை விழாவாக இருந்தது. "இதைப்போன்ற நிகழ்ச்சிகளை நாங்கள் அவுஸ்திரேலியாவில் கண்டு களித்தது இதுவே முதல் தடவையாகும். இதை ஒழுங்கு செய்தவர்களுக்கு எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றோம்" என ஒரு இளம் பெண் கூறினார்.

அன்று அதிசயமான நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சி மட்டுமே அந்த கேளிக்கை விழாவை அரசியல் நிகழ்ச்சியாக்கியது. அது அத்துமீறி வானத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். இதைத் தவறாகக் கணிக்கவேண்டாம். 'பலறற்' (Ballarat) நகரத்தில் எஞ்சியுள்ள தங்கத்தூசிகளைக் கொண்டு செல்வதற்காகச் சதாம் (Saddam) இம்முறை படையெடுத்துவரவில்லை. இது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திரமான தாய் நாட்டை உருவாக்குவதற்காகப் போராடிவரும் தமிழ்ப்பிரிவினைவாத இயக்கம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட செயலாகும். ''சிறிலங்காவே தமிழ் ஈழத்திலிருந்து வெளியேறு'' எனப் பொறிக்கப்பட்ட கொடியைத் தாங்கிக்கொண்டு நாலுபேர் இருக்கக்கூடிய வானூர்தி ஒன்றில் இருபது நிமிடங்களாக விடுதலைப் புலிகள் இந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட திடலின் வான் பரப்பின் மேலாகப் பறந்து கொண்டிருந்தார்கள்.

பலர் நிகழ்ச்சிகளில் கவனஞ் செலுத்திக்கொண்டிருந்தமையால் இதைக் கவனிக்கவில்லை. இந்நிகழ்ச்சியை பற்றிக்கருத்துத் தெரிவிக்குமாறு ஒரு இலங்கையரிடம் கேட்டபோது ''எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெற்று முடிந்த பின்னரே வானூர்தி மேலே பறந்த செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டது, கவர்ச்சிகரமான சூழ்நிலையில் களியாட்ட விழா நடத்தப்பட்டமையால் வானூர்தி பறந்ததைப் பலர் பார்த்திருக்கமாட்டார்கள் எனக் கூறினார்.

★ ★ ★

> ஜனநாயகம் என்பது தனிப்பட்ட ஒவ்வொருவரும் மற்றவரை மதிக்க வேண்டும் என்பதே...
>
> தனிப்பட்ட நபரை தெய்வமாக்குவதல்ல.
>
> —அல்பர்ட் ஐன்ஸ்டின்

## ஆப்கானிஸ்தான்

# ஆபத்தான மாற்றம்

(இந்தியா ருடே - 6, 20 - 1992)

நீண்ட நெடுங்காலமாக வன்முறைக்கு இலக்காகி வந்த ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நஜிபுல்லா அரசின் வீழ்ச்சி வெற்றிபெற்ற தருணமாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் ஆப்கானை யார் ஆளுவது... என்ற பிரச்சினை. முஜாஹிதின் குழுக்களுக்கிடையே நடைபெறும் சகோதர யுத்தத்தின் மூலம் முடிவு கட்டப்படும். இந்தப் போராட்டம் பிராந்தியம் முழுவதிலும் சீர்குலைவு ஏற்படுத்தும்.

*பதின்மூன்று ஆண்டுகாலம் யுத்தத்தைச் சமாளித்த அந்தப் பரிதாபகரமான மக்களுக்கு இதைவிட வேறு பெரிய சோகம் இருக்கமுடியாது. காபூல், முஜாஹிதீன்களின் கைக்குள் வந்ததற்காக நடத்தப்பட்ட வாண வேடிக்கைகளின் சத்தம், மீண்டும் வெடித்த துப்பாக்கி வேட்டுச் சத்தத்தில் அமிழ்ங்கிப்போனது. கொண்டாட்டத்திற்குரியதாக இருந்திருக்கவேண்டிய ஒரு தருணத்தில் காபூல் முதன்முறையாக யுத்தத்தின் கசப்பான சுவையை அனுபவித்தது. சோவியத் ஆதரவுபெற்றிருந்த காபூல் அரசின் வீழ்ச்சி, சங்கிலித்தொடர் போன்ற நிகழ்ச்சிகளுக்குத் திறப்பு விழா நடத்தியது, ஐ. நா. பொதுச்செயலர் பௌட்ரஸ் பௌட்ரஸ் காலியின் பிரத்தியேகத் தூதுவர் பெனான் செவனின் தலைமையில் நடைபெற்ற சமாதான முயற்சிகளையும், போருக்குப் பிறகு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் விதம் குறித்து இஸ்லாமிக் கவுன்சில் தீட்டியிருக்கக்கூடிய திட்டத்தையும் விட வேகமாக இந்த நிகழ்ச்சிகள் நடந்தன.*

அதிமுக்கியமான இடங்களைக் கைப்பற்றுவதற்காக சண்டை நடந்தபோது தலைநகர் வாசிகள் தாங்கள் இதுவரை சந்தித்தி ராத சகோதர யுத்தத்திற்குள் சிக்கிக்கொண்டார்கள். அகமது ஷா மசூதின் - இப்போது பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார் - தலைமையிலான இஸ்லாமியக் கூட்டணியின் முஜா ஹிதீன்களுக்கும், குல்புத்தீன் ஹெக்மத்யாரின் ஹிஜிபி-இஸ்லா மியைச் சார்ந்த தீவிர அடிப்படை வாதிகளுக்கும் சண்டை மூண் டதுதால் காபூலின் நெரிசலான பகுதிகள் வெறிச்சோடிக் கிடந் தன. அந்தச்சமயத்தில் அரசின் தரைப்படை, விமானப்படைகளில் பெரும்பகுதி மசூத் பக்கம் சேர்ந்துகொண்டன. இந்தப் புதிய சூழ்நிலையில் பாகிஸ்தான், தனது 13 ஆண்டுக் கால நண்பனான ஹெக்மத்யாரைக் கைவிடுவதே உசிதம் என்று தீர்மானித்து மசூதை ஆதரித்தது.




பெனான் சேவன் ஆழ்ந்த விரக்தியும் கோபமும் கொண்ட வராக இருக்கிறார். காரணம் அமைதியான முறையில் மாற்றத்தை அவரால் கொண்டுவர முடியவில்லை. அவரது பேச்சைக் கேட்டு பதவி விலக முன்வந்த டாக்டர் நஜிபுல்லாவை நாட்டைவிட்டுப் பத்திரமாக வெளியேற ஏற்பாடு செய்யமுடியவில்லை. பீதியூட் டும் புள்ளி விபரங்களை எடுத்துக்கூறி "மீண்டும் போர் மூண்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

டால் ஆப்கானிஸ்தானம் என்ன கதி ஆகும் என்று யோசித்துப் பாருங்கள்''என்று செவன் எச்சரித்தார். 13 வருடப் போரில், குடி மக்களில் எட்டுப்பேருக்கு ஒருவர் வீதம் கொல்லப்பட்ட நாடு இது. மேலும், இங்கு எட்டுப் பேரில் ஒருவர் ஊனமாக்கப்பட்டுள்ளார். குழந்தைகள் இறப்பு விகிதம் உலகிலேயே இங்குதான் அதிகம். (1000 குழந்தைகளில் 300 சாவு). அங்கொன்றும் இங்கொன்று மாக இருக்கும் வளமான நிலங்களில் கண்ணி வெடிகள் புதைக் கப்பட்டதால் புல் பூண்டு கூட முளைப்பதில்லை. தொழிற்சாலை கிடையாது, இருக்கும் கட்டுமான அமைப்புகளும் பயனற்று காட் டில் காய்ந்த நிலாவாக கிடக்கின்றன. ''சண்டையிட்டு ஜெயித்து அனுபவிக்க இங்கு ஒன்றும் கிடையாது'' என்று பதற்றத்துடன் மன்றாடினார் செவன். ஆனால் காபூலில் உள்ள ஒரு ராஜதந்திரி கூறியது போல, ''தங்கள் விரோதங்களை இரத்தம் சிந்தித் தீர்த்துக்கொள்வதுதான் ஆப்கானிய வனவாசிகளின் வழக்கம். இன்னும் பழங்காலத்திலேயே வாழும் சமுதாயம் இது. காலம், இங்கு 17ஆம் நூற்றாண்டிலேயே உறைந்துவிட்டது.

அரசியல் எந்த அளவிற்குப் பழங்கால பாணியில் இருக் கிறது. எவ்வளவு ஆழம க இனப் பிரிவுகள் மற்றும் வனவாசிக் குழுக்களின் நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை சிறப்பாக எடுத் துக் காட்டியவர் நஜிபுல்லா. வனவாசிக் குழுக்களிடையே சிண்டு முடிந்து விடுவதன் மூலம் இதையெல்லாம் திறமையாக சமாளித்து வந்தார். அந்தத் தந்திரம் தன்னையே திரும்பத் தாக்கும்வரை.

சோவியத் துருப்புக்கள் வாபஸ் ஆனபிறகு நஜிபுல்லா, கொஞ்சமும் கூச்சமில்லாமல் ஆனால் புத்திசாலித்தனத்தோடு பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டார். மூன்று வருடங்கள் வரை அதனால் பலனும் கிடைத்தது. பெரிய அளவில் உள்ள வனவாசி குழுவிடம். அதன் ஆதிக்கம் நீடிக்கத் தானே சிறந்த துணை என்று கூறினார், மத்திய ஆசிய வனவாசிகளிடம், அவர் களுக்கு அதிகாரத்தில் பங்கும், பட்டாணியர்களிடமிருந்து பாது காப்பும் தருவதாகக் கூறி ஆதரவு திரட்டினார். பல இடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முஜாஹிதீன் படைத் தளபதிகளிடம் சென்று, ''நாம் மலைப் பகுதிகளில் 13 வருடமாக சண்டையிட்டுக் கொண்டிருக்கையில்'' இந்த மௌல்வி களும் அரைகுறை அரசியல் வாதிகளும் பத்திரமாக பெஷாவரில் உட்கார்ந்துகொண்டு அதிகாரம் செலுத்துவதா என்று கேட்டு அவர்களை உசுப்பிவிட்டார். இவற்றின் விளைவாக சில தற்கா லிக உறவுகள் ஏற்பட்டன வடக்குப் பகுதியிலே ஏற்பட்ட முத்

தரப்புக் கூட்டுத்தான் இவற்றில் மிகமுக்கியமானது. தனது பகுதி வனவாசிகளை வைத்து ஒரு சேனை அமைத்துக் கொள்ளுமாறு அப்துல் ரஷித் தோஸ்தம் என்பவரை ஊக்குவித்தார். நாளடை வில் இது நஜிபுல்லாவிற்கு ஆதரவாக ஆயுதமேந்திய 40,000 வீரர்களைக் கொண்ட படையாக வளர்ந்தது. சோவியத்தின் சிறந்த ஆயுதங்கள் இதற்கு வழங்கப்பட்டன.

சையது மன்சூர் நாதேரி என்கிற வசீகரமான வனவாசித் தலைவரின் தலைமையில் உள்ள இன்னொரு படையிடம் நஜிபுல்லா நல்ல பெயர் எடுத்தார். இந்தக் கூட்டின் மூன்றாவது பங்காளி அகமது ஷா மசூத், பஞ்சஷீர் பள்ளத்தாக்கின் சிம்மமாகிய இவர் மிகவும் கட்டுப்பாடுள்ள முஜாஹிதீன் படையின் கமாண்டரும் கூட இவருக்கும், நஜிபுல்லாவிற்குமிடையே வாய்மொழி ஒப்பந்தம் உருவாகியது. அஹமது ஷா மசூத் உள்பட முக்கிய வனவாசிப் பிரிவுகளின் தலைவர்களைத் தன்தரப்பில் இழுத்துக்கொண்ட நஜிபுல்லா, புகழ்பெற்ற முஜாஹிதீன் தலைவரான ''ஹெராட்டின் சிம்மம்'' இஸ்மாயில் கானுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டார். இவற்றின்மூலம் எதிரிகளை மண்கவ்வச் செய்தார்.

ஆனால், இரண்டு குறைபாடுகளால் கடைசியில் இந்த வியூகம் தோற்றது. நஜிபுல்லா ஒரங்கட்டிய ''சிங்கங்கள்'' அனைவரும் சகபட்டாணியர்கள். இதனால் இவரது இராணுவத்தில் இருந்த பட்டாணிய ஜெனரல்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டது. இது ஒரு காரணம். இரண்டாவதாக. ஐ. நா. தலையீட்டினால் சோவியத் ஆயுதம் மற்றும் நிதி வருவது நின்றுவிட்டது. இதனால் நஜிபுல்லாவால் படைகளைத் தன்தரப்பிலேயே தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போயிற்று. உடனே அவர் ஒரு அந்தர் பல்டி அடித்து அமைதிப் பாதைக்குத் தாவினார். செவனுடன் கைகோர்த்துக்கொண்டார். ஆனால் அவர் உருவாக்கிவிட்ட பூதம் அவரையே விழுங்கியது. தோஸ்தம் படைக்கு வழங்கிவந்த ஆயுதங்களைக் குறைத்து, துருப்புக்களை 10,000 ஆகக் குறைக்கும்படி கேட்டுக்கொண்டது அவர் செய்த தற்கொலைக்கொப்பான தவறு. ''இந்தக் கிரிமினல் நஜிபுல்லாவை நாங்கள் நம்பினோம், அவர் தனது சுயநலத்திற்காக எங்களை பயன்படுத்திக்கொண்டார்'' என்று பொருமுகிறார் தோஸ்தம். உஸ்பெக்கிஸ்தான் எல்லையருகே உள்ள ஹரியாடனின் காவல் அரணாக நிற்கும் படையின் கமாண்டரான மேஜர் ஜெனரல் மோமினுடன் தோஸ்தம் ஒப்பந்தம் செய்துகொண்டார், இதன் மூலம் பின்னர் தோஸ்தம் பட்டாணிய பட்டாளத்திற்கும், வடக்கு மாகாணங்களில் உள்ள 9 படையணிகளுக்கும் கமாண்டராக வழி பிறந்தது,

அதன்பிறகு எல்லாம் விறுவிறுவென்று நடந்தன, கூட்டணித் தலைவர்கள் வாட்டன் கட்சிக்குள் நஜிபுல்லாவிற்கு வேண்டாத வர்களை அணுகினார்கள், இன்னொரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள்,

என்றபோதும் இந்தக் கூட்டணிக்கு அடிப்படையிலேயே ஒரு குறை உள்ளது, அதன் முக்கியத் தலைவர்கள் யாரும் பட்டாணி யர்கள் இல்லை, முஜாஹிதீன்களின் போரை ஜிஹாத் (புனிதப் போர்) என்று பாராட்டி வருபவரும் நஜிபுல்லாவை, ''வெறுக் கத்தக்க சர்வாதிகாரி'' என்றும் மசூதை ''எனது மதிப்பிற்குரிய சகோதரர்'' என்றும் கூறுபவருமான வாட்டன் கட்சியின் வெளி யுறவு மந்திரி அப்துல் வாகி கூட கறாராகப் பார்த்தால் பட்டா ணியர் இல்லை. அவர் (பார்சீக மொழி பேசும்) பார்சிவான் பட்டாணியர், ஆகவே ''இந்த அநியாயக் கும்பல்கள்'' பட்டா ணிகளிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கப் பார்ப்பதாக குற்றம் சாட்டி அவர்களது உணர்ச்சியைக் கிளப்ப கஹேக்மத்தியார் முயன்று வருவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

பட்டாணியாகளுக்கு இந்தக் குரலைப் புறக்கணிப்பது கடினம். ஆப்கானிஸ்தானில் பல நூற்றாண்டுகளாக அதிகாரம் பட்டாணி யர்களிடத்திலேயே இருந்து வந்துள்ளது. முகம்மது கஜினி, முகம்மது கோரி, அகமது ஷா அப்தாலி ஆகிய அனைவரும் பட் டானியர்கள் சமகால ஆட்சியாளர்களும்தான். மக்கள் தொகை யில் 50 சதவீதம் உள்ள இந்தப் பிரிவினால் (காண்க: வரை படம்) அதிகாரம் தாஜிக்கியர்கள், உஸ்பெக்கியர்கள் மற்றும் இதர வடக்குப் பகுதி வனவாசி பிரிவினரிடம் கைமாறு வதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஹெக்மத்யாரின் ஆதரவாளர்களுக்கு சரித்திரம் ஆறுதல் அளிக்கிறது.

ஆனால் ஹெக்மத்யாரின் முன்னாள் ஆதரவாளர்களான பாகிஸ்தானியர்கள் இப்போது காலை வாரிவிட்டு விட்டார்கள். ஆகவே மசூதை தோற்கடிக்க முடியாமல் போகலாம்.

கடந்தவாரம் பாகிஸ்தான் போர் நிறுத்த முயற்சியில் திடுதிப் பென்று இறங்கி மசூத் கூட்டணிக்கு ஆதரவாக திடுக்கிட வைக்கும் அறிக்கையை வெளியிட்டபோது, மதிநுட்பம் வாய்ந்த யோசனை, பீதி இரண்டும் அதில் பிரதிபலித்தது. பெருத்த லாபத்தை எதிர் பார்த்து ஆப்கானியப் போரில் பெருமளவு பணம் செலவு செய் திருக்கும் பாகிஸ்தான் இந்தக் கொந்தளிப்பினால் பாதிக்கப்படக் கூடும். முதலாவதாக, சண்டை நிற்காவிட்டால் 30 லட்சம் அக

திகள் திரும்பிச் செல்வதற்கான வாய்ப்பு குறைந்துவிடும். மேலும் மத்திய ஆசியாவிற்கு தரை வழியே பாதை போட்டுக் கொள்ளும் பாகிஸ்தானின் நம்பிக்கையும் பொய்த்துவிடும். இந்த இனப் போராட்டம் அருகருகே உள்ள பாகிஸ்தான் பகுதிகளிலும் பட்டாணிய தேசியத்தைத் தூண்டிவிடும். ''ஒட்டுமொத்தமாக பட்டாணிய கலகம் எழுந்து விடுமோ என்பது பாகிஸ்தானியர்களின் கவலை'' என்கிறார் ஐ. நா. அதிகாரி ஒருவர்.

இனப் போராட்ட அதிர்ச்சி அலைகள் வடக்கு நோக்கியும் பயணித்து, அணு ஆயுதம் வைத்துள்ள மத்திய ஆசிய நாடுகளும் மத அடிப்படைவாதிகளின் பாதையில் செல்லுமோ என்று இந்தியா, ரஷ்யா, ஏன், மேற்கத்திய நாடுகளும் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஏனெனில், புதிய அரசு எப்படிப் பட்டதாக இருந்தாலும் ஒரு விஷயம் மட்டும் நிச்சயம்: அது இஸ்லாமிய அடிப்படைவாத அரசாக இருக்கும். பகைக் குழுக்கள் வெளியிட்ட முதல் உத்தரவு, பெண்கள் ஒழுங்காகப் போர்த்தி மூடிக்கொள்ள வேண்டும் என்பது. தனது அரசு ஷரியத் வழியில் நடக்கும் என்று மசூத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள விநோதமான இனப் பிரிவு விகிதாசாரத்தினால் நிலைமை மேலும் சிக்கலாகியுள்ளது. ஒவ்வொரு வனவாசி குழுவினருக்கும் ஆப்கானிஸ்தானை விட மற்ற மாநிலங்களில்தான் அதிக உறவினர்கள் இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஆப்கானிஸ்தானை விட பாகிஸ்தானில் தான் அதிக பட்டாணியர்கள் வசிக்கிறார்கள். அது போலவே தாஜிக்கிஸ்தான் குடியரசில் அதிக தாஜிக்கியர்கள். உஸ்பெக்கிஸ்தானில் அதிக உஸ்பெக்கியர்கள். துருக்மேனிஸ்தானில் துருக்மேனியர்கள். ஒருபுறம் ஓரளவு நவீனத்துவமும் சோஷலிய சிந்தனைகளும் கொண்ட முகம்; மறுபுறம் இஸ்லாமிய வேர் - இவை இரண்டில் எதைத் தங்களுக்கென்று தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற அடையாளக் குழப்பத்தில் மத்திய ஆசிய அரசுகள் இதுவரையிலும் இருந்து வருகின்றன. மீண்டும் துவங்கியுள்ள ஆப்கான் சண்டையும், இனப்பிரிவுகளின் அடிப்படையில் நாடு பிரிந்து நிற்பதும் இஸ்லாமிய வேர்களை நோக்கியே அவர்களைத்தள்ளும்.

சோவியத் இருந்த வரை, கடைசி ஆப்கானியன் இருக்கும் வரை ஒரு கை பார்த்துவிடுவது என்று அமெரிக்கா கச்சை கட்டி நின்றது. சோவியத்தைத் தோற்கடிக்கும் நோக்கம் நிறை

வேறிய பிறகு, பனிப்போரில் ஈடுபட்டவர்கள் வாஷிங்டனுக்குத் திரும்பிவிட்டார்கள். இன்று ஒரு மத அடிப்படை வாத அரசு அங்கு உருவாகி தனது கொடுங்கோல் ஆட்சியை மத்திய ஆசியா மற்றும் துணைக் கண்டம் வரை விஸ்தரிக்கத் தொடங்கினால், மற்ற இடங்களிலும் இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாதம் தலை தூக்குவதுடன், அமெரிக்காவின் வெற்றியும் தோல்வியாகிவிடும்.

இவையெல்லாம் சேர்ந்து இந்தியாவிற்கும் சங்கடத்தை உருவாக்குகின்றன ஏனெனில் இந்தியாவின் பாதுகாப்பு எப்போதும் ஆப்கானிஸ்தான் சரித்திரத்துடன் சம்பந்தம் கொண்டதாகவே இருந்து வந்திருக்கிறது முதலாவதாக, மத அடிப்படைவாத எழுச்சி, காஷ்மீரில் நேரடி பாதிப்பை ஏற்படுத்தும். காஷ்மீரில் உள்ள மிகுந்த வலிமை வாய்ந்த பயங்கரவாதக் குழுவான ஹிஜ்புல் முஜாஹிதீன், ஹெக்மத்யாருடன் தொடர்பு வைத்திருக்கிறது. இந்தியாவிற்குத் தலைவலிதான். இரண்டாவதாக, ஆப்கானிஸ்தானில் அடிப்படைவாதம் பெற்ற வெற்றியால் பாகிஸ்தானில் உள்ள ஜமாத்தே இஸ்லாமி துணிச்சல் பெற்றுவிடும். ஆப்கான் வெற்றியைத் தொடர்ந்து காஷ்மீரிலும் வெற்றி காணவேண்டும் என்று ஜமாத்தே இஸ்லாமியின் தலைவர் காஜி ஹுசைன் அகமது அடிக்கடி மார் தட்டி வருகிறார். மூன்றாவதாக, ஆப்கான் போரில் எஞ்சியுள்ள ஆயுதங்கள் பெருமளவில் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இது தான் மிகவும் கவலை தரும் அம்சம்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளிலும் இருப்பதை விட ஆப்கானிஸ்தானில் அதிக தானியங்கி ஆயுதங்கள் உள்ளன என்று ஐ.நா. மற்றும் பெண்டங்கள் மதிப்பீடு கூறுகிறது. ஆப்கானின் பணத்தாசையையும். அடிப்படைவாத நோக்கங்களையும் வைத்துப் பார்க்கையில், ஏராளமான பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆப்கான் ஆயுத சப்ளை செய்ய முடியும். சிறு அளவிலான ஆயுத பலம் கூட எவ்வளவு நாசத்தை விளைவிக்கும் என்பதை பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் இந்தியா பெற்ற அனுபவங்கள் காட்டுகின்றன.

என்ற போதிலும், இப்போதைக்கு காபூலின் அதிகாரப் போட்டியைத் தீர்த்துக் கொள்வதற்கே இந்த ஆயுதங்கள் பயன் படக் கூடும். எங்கே தவறு செய்தோம் என்று அமெரிக்கா, பாகிஸ்தான், ஏன், ஐ.நா. ஆகியவை மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான். சோவியத் — மிகவும் தாமதமாகத் தான் என்றாலும் — கண்டடைந்த அதே முடிவிற்கு இவைகளும்

வரக் கூடும்: ஆப்கான் விஷயத்தில் விளையாடிய யாரும் பயன் ஏதும் அடையவில்லை. எந்த அன்னிய சக்தியும், மாவீரன் அலெக்சாண்டரோ அல்லது ஜார் மன்னர்களோ, பிரிட்டிஷ் அரசோ அல்லது பிரெஸ்னெவோ, ஆப்கானிஸ்தானில் எந்தப் போரிலும் வென்றதில்லை. ''ஆப்கானிஸ்தானில் வாலாட்ட நினைத்த அன்னிய சக்திகள் அனைத்தும் மண்ணைக் கவ்வின. இதுதான் எங்களது வரலாறு தெரிவிக்கும் மிகப்பெரிய பாடம்'' என்று இந்தியா டுடேவிற்கு அளித்த பேட்டியில் (1992, ஜனவரி 15) நஜிபுல்லா எச்சரித்திருந்தார். இப்போது, முதன்முறையாக வாஷிங்டனிலும், இஸ்லாமாபாத்திலும் இருக்கும் அவரது பரம விரோதிகள் கூட இதை ஒப்புக் கொள்வார்கள். கலந்து கொண்ட அத்தனை பேரும் நஷ்டமடைந்த யுத்தம் இது. வெல்வதற்கு ஏதும் அற்ற யுத்தம் இது. எப்போதும் முடிவுறாமல் தொடர்ந்து கொண்டே இருக்கக்கூடிய யுத்தம் இது.

— ❀ —

ஒரு கொள்கையில் ஈடுபட்டுள்ள நூறு பேரைவிட அந்தக் கொள்கையில் நம்பிக்கை உள்ள ஒருவனே சிறந்த சமூக ஆற்றல் ஆகிறான்.

— ஜான் ஸ்ருவர்ட் மில்

# புலிகளைத் தடைசெய்வதில் இந்தியாவின் விருப்பத் தேர்வுகள்

சுமின்ட - ஐலண்ட் 10. 5. 92

இடையிடையே பாக்கு நீரிணைக்கு அப்பாலும் இப்பாலும் ஏற்படும் காரசாரமான வாதங்கள் வரிசையில் சென்ற வாரம் இந்திய அரசாங்கம் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியதாகக் கருதப்படும் பேச்சொன்றிற்கு ஆட்சேபம் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு ஜனாதிபதி கூறியது பிழையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதென்று மறுத்துள்ளது. இவ்வறிக்கை அரச கட்டுப்பாட்டிலுள்ள டெயிலி நியூசு பத்திரிகையில் வெளிவந்தது. அப்பத்திரிகை பின்னர் ஜனாதிபதியின் திருத்தப்பட்ட பேச்சை பிரசுரித்தது.

இதனிடையே இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தகுந்த சாட்சியங்கள் கிடைக்கும்வரை புலிகளைப் புது டெல்லி தடைசெய்யாது என்றும், பிரபாகரனை நாடுகடத்தக் கோரினால் இலங்கை அரசு பிரபாகரனை நாடு கடத்தச் சம்மதிக்கவேண்டும் என்றும் கூறியதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கொழும்பிலும் டெல்லியிலும் கூடிய விவாதத்திற்கு உள்ளாகின.

சவானின் கூற்றை டெயிலி நியூசு ஆசிரியத் தலையங்கத்தில் விவாதித்தது. அதே நேரத்தில் கனல்கக்கும் தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா திரு. சவானின் பேச்சை ''அபத்தமான'' தென்றும் புலிகள் ராஜீவ் காந்தியின் படுகொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடித்ததன் பின்னும் வேறென்ன தேவை'' என்றும் கேட்டார். வார இறுதியில் புதுடெல்லியிலிருந்து வந்த செய்திகள் திரு. சவானின் கருத்துக்களைப் பத்திரிகைகள் தவறாக பிரசுரித்துள்ளன என்று கூறின. காந்தி படுகொலை செய்யப்பட்ட ஆண்டு நினைவு நாளான மே 21ந் திகதியளவில் இந்தியாவில் புலிகளைத் தடைசெய்வது பற்றித் தீர்மானம் எடுக்கப்படும். புலிகளைத் தடைசெய்வதற்கு இந்திய அரசாங்கம் ஒரு ஆண்டு காலத்திற்கு

மேலாக இழுத்தடித்து வருகிறது. அரசியல் ஆய்வாளர்கள், தமிழ் தீவிரவாதக் குழுக்கள் மூலமாக கொழும்புக்கு, இந்தியா அழுத்தம் போடவே இழுத்தடிக்கப்படுகின்றது என எண்ணுகிறார்கள். இத்தீவிரவாதக் குழுக்களைப் பாவித்து புதுடெல்லி கொழும்பில் தனது செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கு முயற்சித்ததற்கும் அம்முயற்சிகளில் சிலவேளைகளில் வெற்றிகண்டதற்கும் போதியளவு சான்றுகள் உள்ளன. ஆகவே இன்று கணக்கில் எடுக்கக்கூடிய ஒரேயொரு குழுவாக விடுதலைப்புலிகள் இருப்பதால் கொழும்பை தனது பிடியிலிருந்து நழுவவிடப் புதுடெல்லிக்கு விருப்பமில்லை. புலிகளைத் தடைசெய்வது பற்றிய தீர்மானம் பிரதமர் நரசிம்மராவினால் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா மீதான செல்வாக்கைவிட விருப்பமில்லாமை இந்திய வெளியுறவுச் செயலரும் முன் கொழும்பிலிருந்த முன்னைய இந்தியாவின் தூதுவருமான டிக்சிற் அவர்களின் கருத்தில் தெரிகின்றது. புதுடெல்லியில் பிரசுரமாகும் ஏப்ரல் 18ம் திகதிய ''இன்டிபென்டென்ற் பத்திரிகை தனது ஆயவில்'' புலிகள் மீதான எந்தவொரு தீர்மானமும் தூரநோக்கில் இந்தியாவைப் பாதிக்கக்கூடாது என்று டிக்சிற் சொன்னதாகக் கூறியுள்ளது. அப்பத்திரிகை மேலும் இந்திய நடவடிக்கைகள் மூலம் சிறிலங்கா தன்மீதுள்ள இந்தியாவின் பிடிதளர்ந்துவிட்டதாக எண்ணாதவகையில் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறியதாக கூறியுள்ளது. பிரேமதாசா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுக்கும் நிலையிலில்லை என்பதையும் டிக்சிற் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கட்டுரை றோ (RAW) வினதும் இந்தியாவின் கட்டுப் புலனாய்வுக் குழுவினதும் அதேவித கருத்துக்களை எடுத்துக் கூறுகிறது.

அக்கட்டுரையிலுள்ள சில பகுதிகளைக் கீழே தருகிறோம். தமிழீழவிடுதலைப் புலிகளை தடைசெய்வதை பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ் தீர்மானிப்பார். அவ்விதம் செய்யமுன்னர் அரசியல் தலைமை நன்மை தீமைகளைச் சரிவர எடைபோட வேண்டும் என்று அவரது உதவியாளர் கருதுகிறார்கள்.

''தடையை எவ்விதம் நடைமுறைப்படுத்துவதென்பதே பிரதான கேள்வி. பிரதம மந்திரியின் விருப்பப்படி உள்துறைச் செயலர் மாதவ் கோட்போலின் தலைமையில் செயலர்களின் குழு இந்த விடயத்தில் இறுதிக்கருத்து எடுப்பதற்குக்கூடியது.

அவர்கள் ஏகமனதாகக் கருத்துக்கொண்டவர்களாக இல்லாதபடியால் சகல விடயங்களையும் அவதானத்திற்கெடுத்து அவ்வமைப்பைத் தடைசெய்யும் வழிமுறைகளைக் கொண்ட தீர்மானத்தை எடுப்பதற்கு பிரதமரிடமே விடுவதெனை அக்குழு தீர்மானித்தது'

திருப்பதியில் நடந்த இந்திரா காங்கிரசின் மாநாட்டிலேயே புலிகளுக்கு எதிரான தீர்மானம் எடுப்பதற்காக காலடி வைக்கப்பட்டது. அம் மாநாடு மத்திய அரசாங்கத்தை அவ் வமைப்பின் மீது தடை விதிக்கவேண்டும் என்றும் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் கொண்டுவரப்பட்ட பிரேரணையை ஏற்றுக்கொண்டது.

''இப்பிரேரணையை மனிதவள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜன் சிங் முன்மொழிந்தார். உயர்மட்ட வட்டாரங்கள் வெளித்துறை அமைச்சிற்கும் உள்துறை அமைச்சிற்கும் இடையேயும், இரு புலனாய்வு அமைப்புகளான புலனாய்வுப் பணியகத்திற்கும் (IB) மந்திரி சபை செயலகத்திலுள்ள றோ (RAW) விற்கும் இடையேயும் கூர்மையான முரண்பாடுகள் இருந்ததெனத் தெரிவிக்கின்றன.

''தடா (TADA) சட்டத்தின் கீழ் நாட்டிற்கு வெளியே செயற்படும் ஓர் அமைப்பை எவ்விதம் கொண்டுவரலாம் என்பதில் நீதி அமைச்சுக்கும் தெளிவில்லை.

''வெளித்துறை அமைச்சில் அதன் செயலர் எடுத்துக் கூறியதுபோல் புலிகளைப் பற்றிய எந்தவொரு தீர்மானமும் தூர நோக்கில் இந்தியாவைப் பாதிக்கக் கூடாது என்ற எண்ணமே உள்ளது.

தொடர்ச்சியான இராணுவச் செயற்பாடுகளினால் குறிப்பிடக்கூடியளவு பலவீனப்பட்டிருந்தாலும் சிறிலங்காவின் வடபாகங்களில் புலிகள் தொடர்ந்தும் செல்வாக்குடன் உள்ளனர் என்று 'றோ' கூறியுள்ளது. புலிகளைத் தடைசெய்தால் இந்தியாவின் விருப்பத்தேர்வுகள் நிரந்தரமாகவே இல்லாமல் போய்விடும் என 'றோ' வைச் சேர்ந்த மேலாளர் கூறியுள்ளார். இத்தடையானது புதுடெல்லியின் மகத்துவத்தைக் குறைப்பதற்கு கொழும்பு- டக்கா- இசுலாமாபாத் தொடர்புகளை வளர்க்கும் எண்ணம் கொண்டுள்ள சிறிலங்காவிற்கு நன்மை பயக்கக்கூடியதாக அமையும்.

''கூட்டுப்புலனாய்வுக் குழு (JIC) இந்திய வெளியுறவு மேலாளர்களுக்குச் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்திய பேச்சொன்றின்போது, இந்திய மாகாண அரசுகள் வரும் காலங்களில் சிதைவுண்டு போகும் என்று சொன்னதைக், கூறியபோது 'அவர்களுக்குப் பெரும் திகில் ஏற்பட்டது.

''இராணுவப் புலனாய்வுப்பகுதியினரும் புலிகளைத் தடை செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கவில்லை இருந்தாலும் பாதுகாப்பு அமைச்சு புலிகளின் நடவடிக்கைகள் மீதான விழிப்பு குறையப்படாதெனப் புத்திமதி கூறியுள்ளனர் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன.

''புலிகள் மீது தடைவிதிப்பது குறுகியகால நன்மைகளையும் நீண்டகால தீமைகளையும் விளைவிக்கும் எனும் கருத்துக்கள் இவ்வட்டாரங்களில் மேலோங்கி நின்ற அதே வேளையில் உள்துறை அமைச்சும், புலனாய்வுப் பணியகமும் (IB) புலிகளின் மீது முற்றான தடை விதிக்கப்படவேண்டும் என்றும் மும்முரமாக வாதிட்டுள்ளனர்.

உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தமிழ்நாட்டிலுள்ள புலிகளின் நடவடிக்கைகள் தடையைக் கட்டாயப்படுத்துவதால், அவர்களைத் தாமதமின்றித் தடை செய்யவேண்டும் என்று பிரதம மந்திரிக்குக் கூறியதாக தெரியவருகிறது. புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராகவிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற எம். கே. நாராயணன், செயலர்களின் குழுவிற்கு மேலாக நேரடியாக புலிகள் பற்றிய அறிக்கையொன்றைப் பாராளுமன்ற நடவடிக்கைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கவேண்டிய நிலையே உருவாகியது.

''புலனாய்வுப் பணியகத்தின் அறிக்கையை அமைச்சரவைச் செயலர் பரிசீலித்தபோது அதன் பரிந்துரை ''கடுமை அற்றதாக'' இருந்தது என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன. குறிப்பாக அமைச்சரவைச் செயலரும் பிரதம மந்திரிக்கு தடையினால் ஏற்படக்கூடிய அரசியல்விளைவுகளைச் சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது.

# புலிகள் மீது தடையும் தமிழ்நாடு அரசியலும்

-தாரகி - ஐலன்ட் 10-05-92

இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான், தனது அரசாங்கத்திடம் புலிகளைத் தடை செய்வதற்கு போதிய சான்றுகள் இல்லையென்ற தனது கூற்று பிழையாகத் தெரிவிக்கப்படிள்ளதாக இப்போது இந்திய நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். அத்தோடு அத்தடை பற்றிய முடிவு மே 21ம் திகதிக்கு முன்னர் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.(சென்ற ஆண்டு அந்நாளிலே ராஜீவ் கொலையுண்டார்) அவரின் இவ்வி ளக்கம் இது ஒரு சிக்கல் என்பதை காட்டுகிறது. இன்னும் அவ் விடயம் கூடியளவு ஆராயப்படவேண்டும்.

தடையை விதிப்பதிலுள்ள சில''நடைமுறைச்சிக்கல்கள்'' பற்றி சில இந்திய மேலாளர்கள் தெரிவிக்கிறார்கள். அவற்றில் இன்னொரு நாட்டைச் சேர்ந்ததும் அங்கு இயங்குவதுமான அமைப்பை எப்படி நாம் தடை செய்வது? என்பதே மிக முக்கியமானது.

எந்தவொரு அரசியல் கட்சியையோ தனிப்பட்டவரையோ இந்திய மண்ணில், புலிகளுக்கு சார்பாக பேசுவதை தடுக்கவோ நிறுத்தவோ கூடிய வகையில் தடை செயலுரிமை கொண்டதாக இருந்தாலொழிய பயனளிக்காது என சில அரச வட்டாரங் கள் கூறிக்கொள்கின்றன.

அவ்விதமானால் நரசிம்மராவோ காங்கிரசில் தனது நிலையை பலப்படுத்திக் கொள்வதற்கு தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல் ஆற்றல்களை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள லாம் என்ற நம்பிக்கையோடு இருக்கையில், ஏற்கனவே மிகக் கொடிய 'தடா' சட்டத்தை தனது முக்கிய அரசியல் எதிரி களை அடக்குவதற்கு தாராளமாக பாவித்துள்ள செல்வி ஜெய லலிதா,அவ்வாற்றல்களை இதே சட்டத்தை பயன்படுத்தி சுலபமாக அடங்கிவிடுவார்,

தமிழ்நாட்டில் எஸ்.பி.சவானால் கூறப்பட்டதெனச் சொல்லப்படும் கருத்தை தற்போதைய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியே மிக கடுமையாக எதிர்த்தார். காவேரி நீர்ப்பிரச்சனையில் இருந்து ராமமூர்த்தி நரசிம்மராவின் கருத்துக்களோடு இணையாத செல்வி ஜெயலலிதாவின் விருப்புகளோடு சார்பு கொண்ட பொதுவான நிலைப்பாட்டையே எடுத்துவந்துள்ளார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் இரு பிரிவுகளாக உள்ளது. ஒரு பிரிவு ராமமூர்த்தியின் கீழும் மற்றையது ஜீ.கே. மூப்பனார் தலைமையிலும் இரு வெவ்வேறு அரசியல் அமைப்புகளாக செயல்படுகின்றன.

இவ்விடயத்தில் ஜீ. கே. மூப்பனார் வாழாமையாக இருக்கின்றார்' புலிகளைத்தடைசெய்யவேண்டும் என்று கூச்சலிட்டு வாதிடும் ராமமூர்த்திக்கு தனிப்பட்ட காரணமுண்டு.

ஜீ. கே. மூப்பனாரும் கட்சியைச் சார்ந்தவர்களும் அண்மையில் ராமமூர்த்தியையும் அவரது நண்பர்கள் சிலரையும், ராஜீவ் காந்தியின் கொலைக்கு காணமானதாக சொல்லப்படும் சில நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தி கோட்பரப்புகையில் ஈடுபட்டார்கள் என்று ராமமூர்த்தியின் பிரிவினர் கருதுகிறார்கள். அக்கோட்பரப்புகையில் அவரது பிரிவிலுள்ள உறுப்பினர்கள், தனுவையும் (குண்டை வெடிக்கவைத்ததற்கொலைப் பெண்) அவரின் தோழர்களையும் அறிந்திருந்தார்கள் மாத்திரமன்றி, ஒற்றைக்கண்சிவராசன் ராமமூர்த்தியுடன் ஒருபுகைப்படத்திலும் நின்றிருந்தார் என்றும் கூறப்பட்டது. செல்வி ஜெயலலிதா தமிழ்நாட்டில் தனது செல்வாக்கை அழிப்பதற்கு இந்திரா காங்கிரஸ் எடுக்கும் தந்திரோபாயங்களுக்கு எதிராக ராமமூர்த்தியை பயன்படுத்தலாமென உறுதியாக நம்பியிருந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் வாழப்பாடியின் செல்வாக்கை படிப்படியாகக் குறைத்து மூப்பனாரின் பிரிவை பலப்படுத்துவதே நரசிம்மராவின் எண்ணம் ஆகும்.

கடந்த ஆண்டு ராஜீவ் படுகொலை செய்யப்பட்டபின் புலிகளைத் தடைசெய்யவேண்டுமென்ற விடயத்தில் செல்வி ஜெயலலிதாவும் ராமமூர்த்தியும் தீவிரமாக இயங்கினர். இத்தீவிர இயக்கம் ஜீ. கே. மூப்பனாரின் சார்பாளர் என எண்ணப்பட்ட கருணாநிதியை அடக்குவதில் வெற்றி காண்பதற்கு உதவியது. ஆட்சியில் இருக்கும்போது கருணாநிதி, மூப்பனாரோடு உறவை வளர்த்து வந்தார்.

எஸ். பி. சவானின் அறிக்கை செல்வி ஜெயலலிதாவினதும் ராமமூர்த்தியினதும் அரசியல் செல்வாக்கிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தேசத்துரோகி என கருணாநிதியை உரத்துக் குற்றம் சாட்டி அவரது கட்சி உறுப்பினர்களை அரசியல் செயல்பாட்டிலிருந்து விரட்டி அடிப்பதற்கு போதிய காரணங்களை இதுவரை வழங்கிய தி. மு. கவுக்கு எதிரான அவரது நிலைப்பாட்டை, நரசிம்மராவின் அரசு புலிகளைத் தடைசெய்வதில் காட்டும் சஞ்சலப்போக்கு ஜெயலலிதாவை மிகுவாகப் பாதிக்கும்.

இந்திய மண்ணில் புலிகளின் நடவடிக்கைக்கு தடை விதிக்கவேண்டும் என்று தீவிரமாக கோரிக்கை விடத்தொடங்கிய காலத்திலிருந்தே ஜெயலலிதாவின் அந்நிலைப்பாட்டை பாட்டாளி மக்கள் கட்சி விடாப்பிடியாக எதிர்த்துவந்துள்ளது. அதே நேரத்தில் ஜெயலலிதாவின் எதிரிகளாக தி. மு. க.வினர் புலிகளுடன் ஒத்துழைத்தவர்களென்று குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் புலிகளைப்பொறுத்தும் ஈழக் கோரிக்கை பொறுத்தும் நிச்சயமற்ற கொள்கையை கடைப்பிடித்தார்கள்.

ராஜீவின் கொலையில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று கூறப்பட்டபோதும் தாம் புலிகளுக்கு சார்பானவர்கள் என்று பா. ம. கட்சியினர் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். நெடுமாறன் போன்ற தனிப்பட்டவர்களும் "திலிபன் மன்றம்" போன்ற சில அமைப்புக்களும், தடா' சட்டத்தையும் ராஜீவ் வழக்கிலுள்ள எதிரிகளுக்கு எதிராக அச்சட்டத்தின் கீழ் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அவற்றின் சட்டவலுவை எதிர்க்கவும் முயற்சிக்கிறார்கள்.

அவர்கள் தமிழ் பத்திரிக்கைகளில் 'தடா' சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகள் நீதியை வழங்கமாட்டாது எனவும், ஏனெனில் அச்சட்டம் மனித உரிமைகளை மீறுவதாகவும் சாதாரண இந்திய சட்டங்களுக்கு முரணானது என்ற கருத்துக்களை முன்னெடுத்துப் பரப்பியுள்ளார்கள். அதுவுமல்லாமல் ஜெயலலிதா அரசாங்கம் ராஜீவின் கொலையை புலிகள் தான் செய்தார்கள் என்று திட்டவட்டமாக வலியுறுத்தி பிரகடனப்படுத்தியமை அவ்வழக்கு நடவடிக்கைகளை தவறான முறையில் வழிநடத்தும் என்றும் கூறியுள்ளார்.

இக்கருத்துக்களும் வாதங்களும் புலிகளின் உலகளாவிய வட்டாரங்களிலும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்திய நடுவன் அரசு புலிகளைத்தடை செய்வதால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றி சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் ஆலோசனைகளைக் கலப்பதுதான் தாமதத்திற்குக் காரணமென்று ஓர் இந்திய மேலாளர் கூறியுள்ளார். அவைகளில் முக்

கியமானவை வெளியுறவு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு போன்றவையாகும். புலிகளை முற்றுமுழுதான சிறிலங்காவின் பின்னணியில் வைத்தே ராஜதந்திர வட்டாரங்கள் பார்க்கின்றன. ஆகவே தடைசெய்ய எடுக்கப்படும் தீர்மானம் சிறிலங்கா விடயத்தில் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டைஅவசியம் கணக்கில் எடுக்கவேண்டும். நீண்ட நோக்கில் விடுதலைப் புலிகள் தேவை என்ற எண்ணப்பாடும் இருக்கின்றது.

சார்க்கின் தலைமை சிறிலங்கா வசம் இருக்கும் வரை இந்தியாவின் கொள்கை விருப்பத் தேர்வுகளும் வழிவகைகளும் பிரேமதாசாவின் அரசைப் பொறுத்தமட்டில் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். ஆகவே இக்காலகட்டம் ஒரு பாரிய கொள்கை விருப்பத்தேர்வையும் வழிவகையையும் சிறிலங்கா மீது திணிப்பதற்கு உகந்ததல்ல என்று இந்தியா கருதலாம்.

இந்தியப் பாதுகாப்பு நிறுவனத்துடன் இன்னொரு கருத்து இணைக்கப்பட்டுள்ளது. புலிகள் பற்றிய இந்தியாவின் கொள்கை பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் இராணுவ மேலாளர்கள், டெல்லியின் உயர் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள்.

மேஜர் சங்கர் பாதுரியும், மேஜர் ஜெனரல் அப்சிர் கரீமும் கூறுகிறார்கள் ''இந்தியா ஏன் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ள வைக்கவில்லை? என்பதே கேள்வி. இந்தியா கர்வமிக்க ஒரு பக்க நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம்'' (சிறிலங்காவின் பிரச்சினை லான்சர் பத்திரிகை 1 பக்கம் 85)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு இந்திய பரா கொமாண்டோக்களுக்கு (Para Comm-andos) தலைமை வகித்த அர்ஜன்கட்டோஜ் அண்மையில், புலிகளின் சிக்கலில் பிரேமதாசாவின் அணுகுமுறையே மிகவும் சரியானது என்றும், புலிகளுக்கு எதிராகப் பிழையான அணுகுமுறையைக் கையாண்டதினாலேயே இராணுவக் குறிக்கோளை இந்தியா போட்டடித்தது என்றும் கூறியுள்ளார்.

இந்தியா புலிகளைத் தடைசெய்வது எனும் சிக்கல் கொழும்பிலுள்ள கொள்கைவகுப்பாளர்களுக்கு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கும். அதாவது இந்தத் தடையானது சிறிலங்காவின் தேச நலனோடு இந்திய அரசு ஒத்துப்போவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை மாத்திரமே கொண்டுள்ளது என்பதாகும். ★

# புலிகளின்
# இரண்டுங்கெட்ட நிலை

-சாமின்திர பெடினன்டோ
(ஐலண்ட் - 17.05.1992)

''போர் என்று தொடங்கிவிட்டால் எல்லாமே போர் நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும். போர்த்தேவைகளுக்கு நாட்டின் முழுவாழ்வும் பயன்படவேண்டும். இவ்விடயத்தில் சிறிய கிலேச மேற்படுவது கூட மன்னிக்க முடியாதது.'' —லெனின்.

இந்தியா புலிகள் இயக்கத்தை சென்றவாரம் தடை செய்தது. அரசாங்கம் பிரபாகரனுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நம்பிக்கையைக் கைவிட்டதற்கான அறிகுறி எதுவுமில்லை. அப்படியான நிலை ஏற்படுமென்பதை மறுக்காதவர்கள் எனவெளித்தோற்றத்திற்கு காட்டிக்கொள்ளும் புலிகள், தமக்கு கிடைக்கும் இந்நேரத்தில் தமது இராணுவ ஆற்றலை வளர்த்துக்கொள்வர்.

சென்ற' பதினைந்து ஆண்டுகள் இலகுவான காலகட்டமாக இருக்கவில்லை. அக்காலகட்டத்தில் செய்யப்பட்ட அரசியல் இராணுவ முடிவுகள் புலிகளைத் தோற்கடிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் அதிகமொன்றையும் சாதிக்கவில்லை.

பாதுகாப்புப் படைகளின் கூட்டு இராணுவ ஆற்றல் புலிகளின் இராணுவ பலத்தைவிட மிக மேலோங்கி இருந்தாலும், பத்தாண்டு போரிட்ட பின்பும் படைகளால் புலிகளை நம்பிக்கையூட்டும் வகையில் தோற்கடிக்கமுடியவில்லை.

1983 யூலை தமிழருக்கெதிரான கலவரங்களின் பின் பாதுகாப்பு படைகளை கட்டியெழுப்பும் விடயத்தில் அரசாங்கம் எப்பொழுதும் அதிமுக்கியமான கவனமெடுத்துள்ளது. புலிகளின் கூடிய செயல் திறன்பாடுகள் பாதுகாப்புப் படைகளை கூடிய வேகத்தோடு பலப்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்திற்று. கோடிக் கணக்கான சிறிலங்கா ரூபாய்கள் பெறுமதிவாய்ந்த

போர்த்தள பாடங்களும்,போர்க்கருவிகளும் போர்க்களத்தில் அறிமுகமாயின எனினும் எப்பொழுதும் தமக்கு சார்பான தமிழ் பேசும் மக்களையும் கடந்த பத்து ஆண்டுகளில் தொடர்ச்சியாக பெற்ற போரிடும் பட்டறிவுகளையும் நம்பி புலிகள் தமது நடவடிக்கைகளைத் தொடர்கிறார்கள்

புலிகள் இயக்கம் ஓர் ஆற்றல் மிக்க படையாகவே திகழ்கிறது. அவ்வியக்கத்தை ஒடுக்குமுகமாக எடுக்கப்படக்கூடிய இந்திய-இலங்கை நடவடிக்கைச் சவாலைச் சமாளிக்கக் கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்கக்கூடும்.

ஏப்ரல் 19ம் திகதியிட்டு ஞாயிறு ஐலண்டுக்கு எழுதிய கடிதத்தில், புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை பிராந்திய துணை அமைப்பாளர் மாம்பழம் சுரேஷ், பாதுகாப்புப் படைகளுக்கெதிரான போர் தொடருமென தெரிவித்துள்ளார். மூன்று தினங்களில் கிழக்கிலிருக்கும் தமிழர்களை அழிப்பதற்கு பாதுகாப்புப்படையினர் முனைவதாகவும் அங்கு புலிகள் பெரும் எண்ணிக்கையில் செயற்பட்டு பெருமளவு சிங்கள போர்வீரர்களை கொல்வதாகவும் கொக்கட்டிச்சோலையிலிருந்து செயற்படும் சுரேஸ் தெரிவிக்கிறார்.

கிழக்கைத் திரும்பவும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதென்ற அரசின் கூற்றுக்களையும் அவர் மறுத்துள்ளார். அரசாங்கம் கிழக்கில் தமிழர்களை அழிக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டுகிறார். அக்கூற்றை அரசு மறுத்துள்ளது.

எனினும் வடகிழக்கு பகுதியில் இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டு வருவது அதிகரித்துள்ளன என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாதிருக்கமுடியுமா? சென்றவாரம் புலிகள் தம்மால் நினைத்த மாத்திரத்திலே பாதுகாப்புப் படைகளுக்கு இழப்புக்களை விளைவிக்க முடியும் என்பதை அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்தினர்.

அநுராதபுரமாவட்டம் தந்திரிமலையில் இருவெவ்வேறு சம்பவங்கள் எழு இராணுவத்தினரின் உயிரைப் பறித்தது. முதல் சம்பவத்தில் தனிமைப்பட்ட ஒரு காவல் நிலையை புலிகள் தாக்கியபோது இராணுவம் ஐந்துபேரை இழந்தது. தமது சகாக்கள் ஐவரை முதல் நாள் கொன்ற புலித்தாக்குதல்காரர்களை இராணுவத்தினர் தேடும்போது புலிகள் தாக்கி மேலும் இருவர் அடுத்த நாள் கொலைசெய்யப்பட்டார்கள்.

தந்திரிமலை இழப்புகளுடன் இராணுவத்தின் இழப்பு செற வாரம் 15 ஆக அதிகரித்தது. இவ்வாண்டில் ஆயுதப்படையின ரும், காவல்துறையினரும் 200க்கு மேலானவர்களை இழந் துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துடன் புலிகள் ஒரு சுற்றுப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை புலிகள் அநேகமாக எடுக்கக் கூடும். அவ்வித வளர்ச்சி ஏற்படுமிடத்தில் அரசியல் தலைமை வடகிழக்கு நிலமைகளிலுள்ள சகலவிடயங் களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

1990 யூனில் தாக்கப்படும் நிலையிலிருந்தபோது திருப்பித் தாக்க வேண்டாமென கட்டளையிடப்பட்டதால் புலிகளிடம் சரண டைந்த 10பக்கணக்கான காவல்துறையினருக்கு என்ன நடந்தது என்று ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். கிழக்கில் அவர்களுடைய சடலங்கள் ஒன்றா கப்போட்டு புதைக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக தீவிரப்படுத்தப் பட்டுள்ள இந்திய நடவடிக்கையினால், இவ்வெதிர்பாராத தடையினால் ஏற்பட்ட பிரச்சினைகளை தந்திரமாக தவிர்த்துக் கொள்வதற்கு புதிய தந்திரோபாயங்களை திட்டமிடும் வரை புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அநே கமாக முயற்சிப்பார்கள்.

புலிகள் இரு முனைகளில் போரிட அஞ்சுகின்றனர் என சிலர் கருதுகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா இராஜதந்திர அழுத்தத்தை அதிகரிக்கும் இந்நேரத்தில் யாழ்ப்பாணத்தின்மீது ஆயுதப்படையினர் தாக்குதலை நடத்தாமல் தடுப்பதற்கு புலிகள் பேச்சுவார்த்தையையே அநேகமாக நாடு வார்கள்.

இதற்கிடையில் இராணுவ தலைமைப்பீடமும் மற்றும் படைத் தளபதிகளும் புலிகளை கடுமையாகத் தாக்குவதற்கு திட்டங்களை வகுத்துள்ளார்கள். பாதுகாப்பு நிலைமையில் ஏற்படும் தளர்வு பாதுகாப்புப் படையினரை பலப்படுத்துவதற்கு மேலும் மேலும் பணத்தையும் பொருட்களையும் மற்றும் வளங்களையும் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படும். இன் னொருமுறை புலிகளினால் அரசாங்கம் ஏமாற்றப்படவிரும்பா விடில் இதையே செய்யவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை அடைந்து விட லாமென்று, 1989 ஏப்ரலில் புலிகள் அரசாங்கத்தை தந்திரமாக நம்பவைத்தனர் என்று கூறுவது மிகையாகாது.

கடந்தகாலப்படிப்பனைகள் முக்கியமானவை. வடக்கில் இராணுவ தங்ககங்களை அரசாங்கம் அகற்றியதையும் புலிகளை விடுதலை செய்ததையும் (கொழும்பில் குண்டு வைத்ததாக குற்றம்சாட்டப்பட்ட மனோகரி டானியல் என்ற பெண் உட்பட) ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசாங்கம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த வேளைகளில் இராணுவம் கைவிட்டுவிலகிய தங்ககங்களில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது பருத்தித்துறை, வல்வெட்டித்துறை தங்ககங்களும் அடங்கும்.

புலிகளின் நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் ஏற்பட்ட பிழையான கணிப்பீடுகள் காரணமாக 1990 யூனில் அதிர்ச்சி கொடுக்கும் விதத்தில் சண்டை மூண்டபோது பாதுகாப்புப் படையினரையும் காவல்துறையினரையும் எதிர்பாராத ஆச்சரிய நிலைக்குத் தள்ளியது. இவையெல்லாம் சேர்த்து புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது தொடக்கத்தில் ஏற்பட்ட முடிவுகளை குறிப்பிட்ட அளவு தீர்மானித்தன. வன்னிப் பிராந்தியத்தில் முக்கிய தங்ககங்கள் கைநழுவின. பல போர் வீரர்கள் உயிரிழந்தனர். சிலர் புலிகளிடம் பிடிபட்டனர்.

தொடக்கத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளின் பின்னர் புலிகளுக்கு எதிராக இராணுவம் சில வெற்றிகளை ஈட்டியுள்ளது. ஆனால் புலிகளை இராணுவரீதியாக தோற்கடிக்கவேண்டுமானால் பாரிய வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். திறமையான முறையிலான போர்க்களப்பயிற்சி, காலாட்படை' கவசப்படை, கடற்படை, பீரங்கிப்படை, வான்படை போன்றவற்றிற்கு இடையே புதிய வழிவகையிலான இணைப்பு ஆகியவை பாதுகாப்புப்படையினரின் தலைமையினால் புலிகளின் மீது அழுத்தத்தை உண்டாக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட சில 'அம்சங்கள்' ஆகும்.

காலாட்படையினர் புலிகளுக்கு எதிராக எப்பொழுதும் போராடி வருகிறார்கள். ஆனால் வேறு காரணங்களுக்காக அவர்களால் புலிகளை பின்னடைய வைக்கமுடியவில்லை. திட்டமின்மையால் தரையிலுள்ள துருப்புக்கள் நடுவில் கூடிய இழப்புக்கள் எப்பொழுதும் ஏற்பட்டுவந்துள்ளது.

# புலிகளை இந்தியர்களால் அழிக்க முடியுமா?

-தாரகி- (ஐலண்ட் - 17-5-92)

'இலங்கையில் அமைதிப்படை' என்ற பெயரில் லெப்ரினன்ட் ஜெனரல் திபேந்திர சிங் எழுதி அண்மையில் வெளியிட்ட புத்தகம் பற்றி அவரே கூறியுள்ளவை வருமாறு:

புலிகளின் தந்திரோபாயங்கள், அவர்களது உறுதிமிக்க இலட்சியப்பற்று அவர்தம் வியத்தகு போராடும் திறன் என்பவை பற்றி இந்திய பாதுகாப்புப் படைகள் ஆரோக்கியமான மதிப்பீட்டினைக் கொண்டிருக்க வேண்டியதை மறைத்துவிட முடியாது. இது புலிகளுக்குக் கொடுக்கப்படும் மறைமுகமான பாராட்டாகும்.

அவருடைய அரசாங்கம் சில நாட்களுக்குமுன்னர் தான் புலிகளைத் தடை செய்துள்ளது. திபேந்திரசிங்கைப் போலவே லெப்டினன்ட் ஜெனரல் சர்தேஸ் பாண்டேயும் 'இடப்பட்ட யாழ்ப்பாணப் பணி' என்ற நூலை எழுதி அதில் ''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, உறுதி, இலட்சியப்பற்று மற்றும் தொழில்நுட்பத்திறமை பற்றி நான் எப்போதும் உயர்வாகவே மதிப்பீடு செய்து வந்திருக்கின்றேன்.'' என்று அதில் எழுதியுள்ளார்.

ஒரு காலகட்டத்தில் அமைதிப்படை மேலாளர்களில் சிலர் பிரபாகரனுக்கு மரியாதை செய்கிறார்கள் என்று உயர்பீடத்திடம் ஜே.என். டிக்சிற் தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்.

திபேந்திரசிங்கும், சர்தேஸ் பாண்டேயும் போராட்டத்தின் பின்னணி பற்றித் தரும் விளக்கத்தில் புலிகள் பற்றிய அவர்களது கணிப்பீடு, தமக்குக்கிடைத்த சுருக்கமான அறிவுறுத்தலிலும், தமது கலக எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான போர் முறைகளிலிருந்தும் உருவாக்கப்பெற்றது என்பது தெளிவாகின்றது. ''போராடும் பகுதியினரைப் பிரித்து உடன்படிக்

கையை அமுலாக்குவதன் மூலம் இலங்கையிலுள்ள தமிழருக்கு நிரந்தர அமைதியும் நீதியும் கிடைக்கச் செய்யவே இலங்கைக்கு அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

டெல்கி அவர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்தலும், இந்தப் போராட்டம் பற்றிய அவர்களது சொந்தக் கணிப்பீடும் இணைந்து, புலிகள் நீண்டகால பாரபட்சத்துக்குட்பட்ட தமிழ் மக்கள் நடுவேயிருந்து தமிழ் அரசியல் சூழ்நிலை தோற்றுவித்த நியாயப்படுத்தக் கூடிய ஒரு அபூர்வ சக்தி என்பதையும் அதனால் அவர்கள் அசாதாரணமிக்க துணிச்சலும் கொண்ட ஒடுக்கப்பட்டவர்கள் என்பதையும் கண்டு கொண்டனர். இந்தக்கண்ணோட்டம் இயற்கையாகவும் தவிர்க்கமுடியாத வகையிலும் அவர்களது இராணுவ அணுகுமுறையே பாதிப்படையச் செய்தது.

ஒரு இந்திய இராணுவ மேலாளர், உலகிலுள்ள வேறு எந்த இராணுவ மேலாளருடன் ஒப்பு நோக்கும் போது இப் பிரச்சினைகளாலும் அதன் மேல் விளைவுகளாலும் உளரீதியாகப் பாதிக்கப்படக்கூடியவராக இருக்கின்றார். வடகீழ் இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கலக எதிர்ப்புச் சமர்களை இந்திய இராணுவம் மேற்கொண்டுள்ளது. கௌரவமான தீர்வுகள் ஏற்பட்ட இடங்களில் மட்டும்தான் அவர்கள் வெற்றி காண முடிந்தது. இந்திய இராணுவத்திடம் உள்ள பலரைச் சீக்கியப் பிரச்சினை சிறுபான்மையினத்தின் குறைபாடுகளைத் தீர்க்கமுடியாத இடங்களில் இராணுவத்தின் பங்குப்பணி எதுவாக இருக்க முடியும் என்ற கேள்விக்கணைகளை எழுப்பவைத்துள்ளது.

கடந்த 130 ஆண்டுகளுக்கு மேலாக சீக்கிய இனத்தவர் இந்திய இராணுவத்தில் பாரிய அளவினராக இருந்ததோடு இரண்டாவது உலக மகா போர்க்காலங்களில் 25% இனராகவும் இருந்தனர். இக்காரணங்களால் ஒரு இந்திய இராணுவ மேலாளர் இனப்பிரச்சினையை இராணுவக் கண்ணோட்டத்தில் நோக்காது அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்க முனைகின்றார். (ஓய்வு பெற்ற ஐந்து மேஜர் ஜெனரல்கள் உட்பட எத்தனையோ ஆயிரம் இளைப்பாறிய சீக்கிய இராணுவத்தினர் 1983ம் ஆண்டிலே சீக்கியர்களின் பொற்கோயிலைக் கைப்பற்றுவதற்காக நடந்த ''ஒப்பரேசன் புலூஸ்ரார்'' நடவடிக்கைக்கு முன்னர் அமிர்தசரஸ் மகாநாட்டிலே பங்கு கொண்டு அகாலிகள் அமைத்த ஒரு தொண்டர்படைக்கு தலைமை தாங்க முன்வந்தார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.)

ஆகவே கலகத்தை எதிர்த்து அடக்க வேண்டிய வேளை வருகின்ற போது அந்தக் கலகத்தின் பிரதான கலகக்காரன் தந்திரோபாயங்கள் நிறைந்தவனாக இருந்தாலும் வீரனாகத் தோற்றந்தரும் போது போர்க்களத்திலே நிற்கின்ற இந்திய மேலாளர் 'கடும் நடவடிக்கை' எடுக்க முடியாத ஒரு தடுமாற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றார்.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி 1987 ஒக்டோபர் திங்கள் ஆறாம் நாள் பலாலியில் வந்திறங்கிய போது அவருக்கு இங்குள்ள நிலமை பற்றி விளக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக பலாத்காரத்தைப் பிர யோகிப்பது என்ற அரசியல் முடிவை அவர்கள் அப்போதே எடுத்திருந்தார்கள் என்பது இதன் மூலம் புலனாகிறது.

இப்படியான ஒரு கடுமையான முடிவுக்கு நாம் வரக் கூடாது என்று ஜெனரல் சுந்தர்ஜிக்கு சிபார்சு செய்தேன். அப் படி நாம் ஒரு போரில் இறங்கினால் எதிர்வரும் இருபது ஆண்டு களுக்காவது இந்தக் கலக சூழ்நிலையில் நாம் சிக்கித் தவிக்க வேண்டிவரும் என்று நான் கூறினேன். தோல்வியைத் தழுவும் மனப்பக்குவமுடையவனாக இருக்கக் கூடாது எனக் கண்டிக்கப் பட்டேன். இது தோல்வி மனப்பான்மை அல்ல உண்மையைப் புரிந்துகொண்ட நிலைப்பாடு என்று பதிலளித்தேன். இவ்வாறு எழுதுகிறார் லெப்டினன்ட் ஜெனரல் திபேந்திரசிங்.

கடுமையான நடவடிக்கையையே தெரிவுசெய்து அதனையே செயல்படுத்தி விடுதலைப் புலிகளை அழித்து ஒழித்துவிடவேண்டு மென்றே டெல்கி விரும்பியதாக இந்த இரண்டு ஜெனரல்களும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளனர். பிரபாகரனைக் கொலை செய்யவோ அல்லது கைது செய்யவோ இந்திய அரசு விரும்ப வில்லை என்று இலங்கையில் பெரும்பான்மை மக்கள் நடுவில் நிலவிய பொதுவான கருத்து இந்த இரண்டு ஜெனரல்களாலும் பொய்யாக்கப்பட்டுள்ளது. 1988 ஜனவரித் திங்கள் மூன்றாவது வாரத்தில் டெல்கியிலும் சென்னையிலும் இருந்து, சூடான செய்தி ஒன்று யாழ்ப்பாண இராணுவ பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரபாகரனும் அவரது மிக முக்கிய உதவியா ளர்களும் குடாநாட்டிலுள்ள வலிகாமப் பிரிவின் கடலோரக் கிராமங்களான கீரிமலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, அள வெட்டி, மாகியப்பிட்டி, தொல்புரம் போன்ற இடங்களில் உல விவருகிறார்கள் என்பதே அந்தச்செய்தியாகும். விடுதலைப்புலி களின் தலைவரையும் அவரது கடும்போக்கு உதவியாளர்களை

யும் கைது செய்யுமாறும் முடியாது போனால் கொன்றுவிடுமாறும் வலிகாமப் படையணிக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. (சர்தேஸ் பாண்டே பக் .102)

இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரபாகரன் அந்தப் பகுதியில் இருக்கின்றார் என்ற செய்தியின் பேரில் பரா அதிரடிப்படையினர் மூளாயில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். அதிரடிப் படையினரின் செயல்பாட்டைப் புலிகள் கட்டுப்படுத்திவிடவே புலிகளின் தலைவர் அங்கிருந்து தப்பிச் செல்லக்கூடியதாக இருந்தது. பிரபாகரனைக் கொல்வதன் மூலம் புலிகள் இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற இந்திய அரசின் அசைக்க முடியாத நம்பிக்கையில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் சண்டை செய்து கொண்டிருந்த முதுநிலை இராணுவ மேலாளர்கள் பங்குகொண்டிருந்தார்களா?

இன்றைக்கும் இந்தியவெளியுறவுச் சேவையைச் சேர்ந்தவர்களும், றோ என்ற உளவு துறையினரும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஏனைய குழுக்களும் பிரபாகரன் அழித்து ஒழிக்கப்பட்டால் இயக்கம் உடைந்து ஒருமைப்பாடு சீர்குலைந்துவிடுமென்றே நம்புகிறார்கள். ஆனால் கலக எதிர்ப்பு மையங்களை நோக்காகக்கொண்டு அரசியல் சமூக வரையறைக்குட்பட்ட போர்க்களத் தளபதிகளின் அணுகுமுறை வித்தியாசமானது. டெல்கியிலிருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் யாவும் தள நிலைமைக்கு ஏற்றவாறு தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்தே களத்தளபதிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசியல் தலைவரினதோ அல்லது தலைமையக மேலாளரினதோ விருப்பங்களும் நோக்கங்களும் போர்க்களங்களிலே இருக்கின்றன. போராளிகளின் கருத்துக்களோடு சில வேளைகள் மட்டுமே ஒத்துப் போவது உண்டு. முற்று முழுதாக தனது கருத்திட்டத்தின்படி யாழ்ப்பாண மக்களோடு ஒட்டி உறவாடி தகவல்களைச் சேகரித்து அதன்மூலம் புலிகளைத் தனிமைப்படுத்தவும் வேறு பல கருமங்களைச் செய்யவும் சர்தேஸ் பாண்டே வழிவகைகளை வகுத்திருந்தார்.

இந்தச் செயல்மூலம் சர்தேஸ் பாண்டே ஒரு உண்மையை உணர்ந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் செல்வாக்கைப் பெற்றவர்கள் என்பதையும் அந்தச் செல்வாக்கு உள்ள அளவும் அவர்களை அழிப்பது கடினமெனவும் அறியும் வாய்ப்பு இத

னால் ஏற்பட்டது. யாழ்ப்பாண மக்கள் ஏனைய குழுக்களைக் கொள்கையற்றவர்களாகவும் கட்டுப்பாடு இல்லாதவர்களாகவும், சந்தர்ப்ப வாதிகளாவும், கோழைகளாகவும், ஊழல் மிக்கவர் களாகவும், கொடூரமானவர்களாகவும், சுயநலமிக்க காடையர் களாகவும் பணம் பறிக்கும் புல்லுருவிகள் ஆகவும் கருதுவதால் சமாதானப்படையை அவர்கள் வெறுக்கத் தலைப்பட்டுள்ளார் கள். டெல்லி அரசு அரவணைத்து வரும் இந்தக்குழுக்கள் யாழ்ப்பாண மக்களிடம் இந்தியப்படையைப் பற்றிய வெறுப் புணர்வையே ஏற்படுத்தின. *(பக் - 36)*

இந்திய இராணுவத்தின் வரலாறு, சமூகவியல், அரசியல் என்பன புலனாய்வுத்துறை அதிகாரிகளின் பிரிவில் அனேக மானோரைப் பொதுவாக எதிர்க்கிளர்ச்சி எதிர்ப்பு அணுகு முறையிலும், குறிப்பாக இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விட யங்களிலும் கட்டுப்படுத்தியே வைத்திருக்கின்றன. எனவே பிர பாகரனைக் கொலை செய்வதென்ற விடயத்தில் டெல்லி அர சுக்கும் அதன் கிளர்ச்சி எதிர் நடவடிக்கை நிபுணர்களுக்கு மிடையே எப்போதும் கருத்து முரண்பாடுகள் இருந்தே வந்திருக் கும். இதற்கு திப்பேந்தர் சிங்கின் கூற்று நல்லதோர் உதா ரணமாகும்.

''அனேக வினாக்கள் எழுப்பப்படவிருந்தன. பிரபாகரனை ஏன் இந்திய அமைதிப்படையினால் கைது செய்யமுடியவில்லை அல்லது கொலை செய்யமுடியவில்லை என்ற கேள்விகள் எழ இருந்தன. பிரபாகரனைக் கொலை செய்யக்கூடாது என்று அமைதிப்படைக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் மேற் சொன்னவகையிலான ஒரு குற்றச்சாட்டும் எழுந்தது. இப்படியான ஒரு சூழ்நிலையில் தனிநபர் ஒருவரை இலக்காக்கி அழிப்பதோ அன்றிப் பாதுகாப்பதோ முடியாத செயல் என்பது ஒருபுறமிருக்க புலிகளிடம் வலிமைமிக்க இளையவரிசைத்தலைமை ஒன்று இருந்ததன் காரணத்தால், பிரபாகரனின் இழப்பு ஒரு போதும் புலிகளின் அழிவிலே போய் முடிந்திருக்காது. *(பக்-125)*

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் கொண்ட இராணுவத்தைச் சாராத கிளர்ச்சி எதிர்ப்பு வல்லுனர் ஒருவர், சமூக, அரசியல். உளவியல், இராணுவ ரீதியிலான ஏற்பாடுகளை சம அளவில் உள்ளடக்கிய வலுமிக்க முழு அளவிலான தந்தி ரோபாயங்களை முன்வைக்குமாறே தன் மேலாளர்களை இடை யறாது கேட்பார். இதையே தான் இந்திய அமைதிப்படையின் தளத் தளபதிகளும் கோரினார்கள். இது போதியளவு கிட்ட வில்லை. ஆனால் பிரபாகரனையும் புலிகளையும் அழிக்கவேண்

டுமென்று'' கடும் தேர்வு '' என்பதில் பொதிந்திருந்த டெல்லியி னால் தெளிவாகக் கூறப்பட்ட விருப்பம் கிளர்ச்சி எதிர்ப்புக்கு மூலாதாரமான கோட்பாடுகள் என அமைதிப்படையின் பிரிவுத் தளபதிகள் கொண்டிருந்த எண்ணங்களுக்கு மாறாக இரு ந்தது.

கொழும்பில் இருந்த இந்தியத் தூதரகம், டெல்லியில் உள்ள இராணுவத் தலைமையகம், றோ ஆகியன விடுதலைப் புலிகள் பற்றிய தேவையான புலனாய்வுகளை அளிக்கவில்லை. இத்தவறு பெரியளவிலான கோட்பரப்புகைக்கு உள்ளாகியது.

சர்தேஷ்பாண்டே சரியாகக் கூறுவது போல் இத்தவறு, புலனாய்வாளர்கள் சரியான ''சமூகத் தட்டைச் சேர்ந்த இலங்கைச் சமூகத்தின் நடுவில் வாழும் இனவாதப் பண்டிதர் கள், கருத்துரை வழங்கும் பேரறிவாளர்கள், பொழுது போக்கு அமைப்புக்களில் நேரத்தை விரயம் செய்வோர் ஆகியோர்மட் டத்தில், தமது கடமையைப் புரிவதனால்தான் ஏற்பட்டதென் றாலும், உண்மையில் சரியான சமூகச் சூழலிலேயிருந்து தோன் றாத சில தமிழ்த் தீவிரவாதிகளிடமிருந்து தமது நாட்டின் அதியுயர்ந்த புலனாய்வுத்துறையினர் பெரும்தொகை கையூட் டுப் பணங்களைப் பெற்றிருந்தார்கள் என்பதை சர்தேஷ் பாண்டே அறிந்திப்பதற்கு காரணம் இல்லை. தமிழ்த்தேசிய இராணுவத் தன்மைக்கு முகம் கொடுக்கவேண்டிய இந்திய இரா ணுவ மேலாளரின் கருத்துக்களை நாம் வரலாற்றுக் கண்ணோட் டத்துடனும் கணிப்பீடு செய்யவேண்டும். இருபதாம் நூற் றாண்டின் ஆரம்பகாலம்வரை தமிழர் இந்திய இராணுவத்தில் முக்கிய பங்கினராக இருந்திருக்கிறார்கள். கல்வி, தொழிநுட்ப அறிவு என்பனவற்றால் தமிழ்ப் படைவீரன் தன் நன்மதிப்பைக் கட்டி எழுப்பியிருந்தான். புதிய இராணுவ மேலாளர் அறிந்து கொள்ள வேண்டிய இந்திய இராணுவப் பெரும் படைப்பிரிவு களின் வரலாற்றில் சென்னைப் பெரும்படைப்பிரிவு, அதன் பழம்பெரும் படைப்பிரிவுகளில் ஒன்றென்பதை தெரிந்து கொள் வதோடு இந்திய இராணுவப் பெரும்படைப் பிரிவுகள் எல்லா வற்றிலும் பார்க்க அதிகமான போர்க்கௌரவங்களைத் தட் டிக்கொண்ட பெருமைக்குரியது என்பதையும் புரிந்து கொள் வான்.

இம்மாதிரியான எண்ண அடிப்படையிலேயே புலிகளைப் பற்றிய மனப்போக்கும் ஊற்றெடுக்கும். புலிகளின் சிறப்பு நலன் களை அழுத்திக்கூறும் ஸ்டிபன் கோ ஹனும் ( இந்திய இரா

வம் பற்றிய இவரது நூல் இன்றும் புகழ்மிக்க படைப்பாகவே கருதப்படுகிறது) இரு தளபதிகளும் கல்வி கல்வித்தரம் என்ப வற்றால் இந்திய இராணுவத்தில் எவ்விதம் தமிழ்ப்படைவீரன் தன்னை முன்னிறுத்திக்கொள்ள முடிந்ததோ அவற்றையே புலி களின் சிறப்பு குணாதிசயங்களாகக் கூறுகிறார்கள்.

புலிகளுக்கெதிரான இந்தியத்தடையும் அதைத் தொடர்ந்து கொழும்புக்கெதிராக, பிரபாகரனை நீதிக்குமுன் னால் நிறுத்தி புலிகளை வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தோடு, கட்டி எழுப்பப்படும் உள்ளும் புறமுமான அழுத்தம், அரசியலில் அனுமதியளிக்கப்பட்ட ஓரளவு இந்திய இராணுவத்தலையீட்டை கொண்டுவரக்கூடிய உண்மைக்கார ணிகளாக இலங்கை விவகாரங்களில் உருவாகலாம்.

இவ்வித நிலை ஏற்படமுடியும் எனக்கருதும்போது திப் பேந்தர்சிங்கினதும் சர்தேஸ்பாடேயினதும் கருத்துக்கள் சிறப் பாக தொடர்பு உடையனவாகவும் பொருத்தமுடையனவாகவும் அமையும். ஆனால் ஒரு முக்கிய வினா தொடக்கி நிற்கிறது. அதாவது இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்குமிடத்து தமிழீழ விடுதலைப்புலிகளை முழுமையாக அழிப்பதற்கு டெல்கியின் கிளர்ச்சி எதிர்ப்பு நிபுணர்களால் முடியுமா என்பதேயாகும்.

★ ★ ★

நீங்கள் நினைப்பதைச் சொல்லி விட்டால் நீங்கள் நினைக்காததைச் சொல்லும் கட்டாயம் ஏற்பட்டுவிடும்.

தியோடர் பார்க்கர்

# லிபியாவின் முறை - கதாபியை நேர்காணல்

(புரன்ட்லைன் - 08-05-92)

திரு. கதாபி எந்நேரமும் தனது இடது கையில் தங்கத் தினாலான கல்யாண மோதிரத்தை அணிந்திருப்பார். அவரு டைய உயரம் 180 சென்ரி மீற்றருக்கும் கூடுதலாகும். அவருக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் சாதாரன உடையில் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருப்பர். சாதாரணமாக அவரைச் சந்திக்க வருபவர்கள் இரண்டு திங்கள் அல்லது அதற்கு மேலான லிபியாவின் தலைநகரான திரிப்பொ லியைச் சுற்றிப்பார்ப்பதிலோ அல்லது கடற்கரையில் உலாவித் திரிவதிலோ தங்கள் காலங்களைக் கழிக்கவேண்டி நேரிடும். இப் படியிருந்தும் அவர்கள் அவரைச் சந்திக்க முடியாமல் திரும்ப வேண்டியும் நேரிடும். ரம்ழான் மாதத்தில் அவரைச் சந்திப்ப தாயின் பெரும் முயற்சி எடுக்கவேண்டி நேரிடும். இப்படிப்பட்ட இன்னல்கள் மத்தியிலும் கேணல் எனவும், வழிகாட்டி எனவும் பாலைவனத் தலைவர் எனவும் அழைக்கப்படும் திரு. முவம்மர் கதாபி அவர்கள் காமா (Gamma) பத்திரிகையின் நிருபரான பியரேலாபொறற் (Pierre Laporet) அவர்களைச் சந்திப்பதற்கு ஒப்புக் கொண்டார். தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கு மதிப் பளிக்கும் வகையில் தனது மெய்ப்பாதுகாவலர்களை கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் நிற்கச்செய்து, தன்னை நேர்காண வருபவர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் பதில் அளிப்பார். பப் அசிசியா (Bop Azyzia) வின் மையத்திலுள்ள இராணுவத் தலைமையகத்தில் உள்ள ஒரு கூடாரத்தில் இவருடைய சந்திப்பு ஏற்பட்டது. இந்தக் கூடாரம் ஒட்டகங்கள் உலாவித்திரியும் வயல் களின் நடுவில் அமைக்கப்பட்டிருந்தது. இவருடைய நேர்காண லின் சில பகுதிகள் பின்வருமாறு;

கேள்வி:- பொதுவுடமைத் தத்துவம் உலகளாவிய ரீதியில் வீழ்ச் சியுற்றதனால் உங்கள் மனநிலையில் என்ன உணர்ச் சிகள் ஏற்பட்டன?

பதில்:- எல்லாத்திசைகளிலும் இருந்தும் இந்தப் பரந்த உலகம் அழுத்தப்படுவதாக எனக்குத் தோன்றுகின்றது. எந்த ஒரு பகுதியும் கடுமையாக இழுக்கப்படும் போது அவை உடைந்து அல்லது பிரிந்துபோவது திண்ணம். இப்படிப்பட்ட சச்சரவுகளின் மத்தியில் நாம் - லிபியர்கள்- இருக்கின்றோம். ஆனால் பரந்துபட்ட உலகத்தில்தற்பொழுது பதற்றம் சிறிது தணிந்துள்ளதாகத் தோன்றுகின்றது.

கேள்வி;- அண்மைக் காலங்களில் லிபியாவைப் பற்றிய உலக எண்ணம் உங்களை சஞ்சலத்தில் ஆழ்த்தியுள்ளதா?

பதில் :- இல்லை தவறான கருத்துக்கள் கூறும் நாடுகள் தான் தங்கள் கூற்றையிட்டுக் கவலைப்படநேரிடும். லிபியா அல்ல. பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் பல நாடுகளின் நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் எங்கள் மண்ணில் தற்பொழுது இயங்கி வருகின்றன. எங்களை மனவருத்தத்தில் ஆழ்த்தி மனநிறைவடைந்த அந் நாடுகளிலிருந்து வந்துள்ள சுமார் இரண்டு மில்லியன் தொழிலாளர்கள் தான் இன்னல்படப் போகின்றார்கள். இதனால் இந்நாடுகள் சடுதியாகப் பல பில்லியன் டாலர்கள் கணக்கிலான வருமானங்களை இழக்க நேரிடும். வேறு நாடுகளின் ஒத்துழைப்புடன் லிபியா இம்முதலீடுகளைச் செய்யும்.

எங்களிடம் திட்டங்களுக்குக் குறைவில்லை. சில திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. வேறு சில திட்டங்களும் வகுக்கப்படுகின்றன. தற்பொழுது எங்களுக்குத் தீங்கு ஏற்படும் வகையில் நடந்துகொள்பவர்களை நாம் விரும்பமாட்டோம். எங்கள் நாட்டுக்கு எதிராகத் தடைகளை விதித்தால் அவைகளை நாம் வரவேற்போம். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் அது எங்கள் மக்கள் மனதில் உத்வேகத்தைப் புகுத்தி எங்கள் நாட்டை எங்களது சொந்தக் காலிலேயே நிற்க வகைசெய்யும். எங்களுக்குத் தேவையான வளங்கள் எங்களிடமுண்டு. (எங்களுக்கு எதிரான தடை நடவடிக்கைகளில் பிரான்சும், இங்கிலாந்தும் இறங்கினால் அவர்கள் தங்கள் நாட்டையே பாதிப்புக்குள்ளாக்குவார்கள் எனப் பலமாக நான் நம்புகின்றேன்.

அமெரிக்கா மறைமுகமாகத் தனது புதிய எதிரிகளுக்கு எதிராகச் செயற்படும். தனது நலன்கள் பாதிக்கப்படும் எனத் தெரிய வரும்போது அமெரிக்காதனது பழையநண்பர்களைக்கைவிடவிரும்

219300



புவதுடன் புதிய கவர்ச்சிகரமான நண்பர்களைத் தேடுவதையும் நீங்கள் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது)

குவைத்திலும் இது தான் நடைபெற்றது. இந்தக் குவைத் நாட்டைக் கட்டியெழுப்பத் தங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கு மென்ற வாக்குறுதியின் பேரில் பிரான்சும் இங்கிலாந்தும் மற்றைய நாடுகளும் வளைகுடாப்போரில் பங்குகொண்டன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? அந்நாட்டைக் கட்டியெழுப்பு வதற்காகக் கோருவிலை கோரும்போது அமெரிக்க நிறுவனங்க ளின் கோருவிலை பெருமளவில் ஏற்கப்பட்டது. பிரான்சும், இங்கிலாந்தும் தங்களின் இறந்த வீரர்களைக் கௌரவிப்பதோடு மாத்திரம் நிற்க வேண்டி நேரிட்டது.

கேள்வி:- அதற்குப் பின்?

பதில்:- அதன் பின் நாம் உண்மைநிலையை உற்றுநோக்கு வோம். பிரான்சும் இங்கிலாந்தும் அராபியர்களின் சீற்றத்துக்கு ஆளாகியுள்ளன. இதனிடையே அமெ ரிக்க நிறுவனங்கள் பில்லியன் கணக்கில் வருமானத் தைச் சேகரிக்கின்றன. இது தான் இங்கு நடக்கும் விளையாட்டாகும். உண்மையில் ஐரோப்பிய நாடு களின் செல்வாக்கை அரேபிய நாடுகளில் இல்லா தொழிக்க அமெரிக்கா கனவுகாண்கின்றது. பிரான் சின் கொள்கைகள் தற்கொலைக்கு ஒப்பானவை. இதைப் பிரெஞ்சு மக்கள் ஏற்றுக்கொள்வதுதான் எனக்கு விளங்காதிருக்கின்றது.

கேள்வி:- இவைகளுக்குரிய தீர்வுகள் என்ன?

பதில்:- இப்போதைக்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை யினால் கொடுக்கப்படும் கட்டளைக்கிணங்க பிரான் சும் நடந்துவருகின்றது. பிராஞ்சு மக்களைப் பற்றிய அக்கறை அமெரிக்காவுக்கு கிடையாது. பிராஞ்சுக்கா ரர்கள் தங்கள் நாட்டின் நலன்களில் அக்கறை காட் டுவதில்லை என்பதை இலகுவில் நிரூபிக்க முடியும்.

எங்களுடனான தனது தற்போதைய கொள்கைகளில் பிராஞ்சும் மாற்றங்களைக் கொண்டு வந்தால், அவர்களுடனான எங்களது உறவைச் சீர்செய்யமுடியும் அரசியல் ரீதியாக எங்களுக் குத் தீங்கு விளைவிக்கும் நாட்டுக்கு. அந்த நாட்டிற்குப்

பணம் தேவை என்பதற்காக நாம் உதவ வேண்டும். என்ற கேள்விக்கே இடமில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக எங்களுக்குத் தீங்கான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றபோதிலும் இதுவரைக்கும் பிரான்சு, இங்கிலாந்து மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் நாங்கள் மென்மையான போக்கையே கடைப்பிடித்து வருகின்றோம். அவர்களுடைய நிறுவனங்கள் எங்கள் மண்ணில் இயங்கி வருகின்றன. ஆனால் இது தொடர்ந்தும். நடைமுறையில் இருக்கமாட்டாது. அரசியலும் வர்த்தகமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. யார் எங்களது கொள்கைக்கு ஆதரவு நல்குகிறார்களோ அவர்களுக்கு நாம் அள்ளிக்கொடுப்போம். அத்தோடு எங்களது நோக்கத்திற்கு தீங்கிழைப்பவர்களிடமிருந்து எதுவும் வாங்குவோம் என்றகேள்விக்கேஇடமில்லை என்பதையும் நான்கூறிவைக்கவிரும்புகிறேன். இந்த நடைமுறை நீடித்தால் லிபியாவின் சந்தைகள் அனைத்தும் மூடப்படும். எங்களுக்கெதிரான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குத் தடைவிதிப்போம்.

முழு உலகத்துக்கும் நான் விடுக்கும் எச்சரிக்கை இதுவாகும். லிபியாவின் பெயரில் நான் சுதந்திரமாக இந்த முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையிலுள்ளேன்.

கேள்வி:- இங்கிலாந்து?

பதில்:- இதைப்பற்றிக் கலந்துரையாடுவதில் பிரயோசனமில்லை. கன்சர்வேற்றிவ் கட்சியினருக்கு அவர்களது கொள்கைகளும் பிரித்தானியாவை மண்ணாக்கிய தோடல்லாமல் தொழிலாளர்களை இன்னல்களுக்குள்ளாக்கி ஆங்கிலேய மக்களை நாடுசுற்றிகளாக்கியுள்ளன. இனவெறியர்களும், சுயநலச் சர்வாதிகாரிகளும் மற்றவர்களைவிடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்ற கொள்கையுடை யவர்களும் தான்இன்று இங்கிலாந்தின் ஆட்சிபீடத்தில் இருப்பவர்களாகும். இங்கிலாந்துஅரேபிய முசுலிமுகளை வெறுக்கின்றது. அந்நாடு தனக்கே தீங்கு விளைவிக்கின்றது. ஆனால் அந்நாடு உன்னத நாகரீகத்தைக் கொண்டது. திரு. யோன்மேயரை நான் குறிப்பிடவில்லை.

கேள்வி:- மாகிரெப் ( Maghreb ) என அழைக்கப்படும் வடமேற்கு ஆபிரிக்காவின் ஐந்து நாடுகளினதும் ( லிபியா) ரியூனிசிய, அல்ஜீரியா, மொரொக்கோ, மொறிட்டானியா) மேற்கு மத்தியதரைப் பிரதேசத்திலுள்ள ஐந்து

நாடுகளினதும் (இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின், போர்த்துக்கல், மோல்டா) ஒன்றிணைப்பிற்கான உச்சி மகாநாடு அல்ஜிரியாவில் தற்போது நிகழ்ந்துவரும் நிகழ்ச்களால் பின்போடப்பட்டது. இந்த உச்சி மகாநாட்டை 5X5 எனக்கூறுவர். இந்தக் கூட்டத்தைப் பற்றியதங்கள் கருத்து என்ன?

பதில்:- பிராஞ்சு அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையினால் இந்த முயற்சி முறிவுற்றது. பான்-அமெரிக்கா(Pan-Am) வானூர்தி விவகாரத்தில் பிரான்சும், இங்கிலாந்தும் அமெரிக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.

கேள்வி;- இந்த மகாநாடு பின் போடப்பட்டது. உங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதா?

பதில்;- ஆம். செருப்பால் அடித்த மாதிரி இருந்தது. ஏனைய மாரெப் நாடுகளுக்கும் அப்படியே இருந்தது. பிரான்சு பாரதூரமாக அந்நாடுகளை அவமதித்தது. தற்பொழுது எங்கள் உடல்களுக்கு மேலாக நடந்து கொண்டு அந்நாடுகளுடன் ஒத்துழைக்க முனைகின்றது. அராபியமக்கள் தங்களை அரவணைத்து மண்டியிடவேண்டுமெனப் பிரான்சு நினைக்கின்றது, அராபியர்களுக்கு உணர்ச்சியில்லை அவர்கள் அறிவிலிகள், தங்கள் விடயங்களில் பகுப்பாய்வு செய்யமுடியாதவர்கள் என நினைக்கின்றது. இது பாரதூரமான தவறாகும். இந்த மாகிரெப் கூட்டமைப்பில் இருக்கும் ஏனைய நாடுகள் லிபியாவுடன் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு உந்தும் காரணிகள் வேறுபலவுண்டு.

கேள்வி:- இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்கதேர்தல் உலக அரசியலில் பாதிப்பை ஏற்படுத்துமா?

பதில்;- நிச்சயமாக. அமெரிக்கத் தேர்தல்கள் உலக விவகாரங்களில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துகின்றன. குடியரசுக்கட்சியின் முழுமனதான ஆதரவு திரு. புஷ் அவர்களுக்குக் கிடையாது. அவர்களில் மூன்றிலொரு பகுதியினர் இவரின் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதில்லை. இத்தேர்தல் அவருக்குச் சுலபமாக இருக்கா

தென உள்நாட்டு அரசியல் விற்பன்னர்கள் எண்ணு கின்றனர். ஆனால் அவருடைய கோட்பரப்புகை ஆலோசகர்கள் வலதுசாரித் தேசியவாதிகளின் ஒரு பகுதியினரின் ஆதரவைப்பெறத் தேவையான வாதங் களை அள்ளி வீசுவார்கள்.

அவர் ஈராக்கிய சனாதிபதிக்கெதிரான புதிய நடவடிக்கை யொன்றைக் தொடங்குவார் அல்லது எனது அரசாங்கத்தைப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும், போர்த்திற னாற்றல் ரீதியாகவும் அடக்க எத்தனிப்பார் என எனது ஆலோ சகர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம். இவைகள் மக்களது உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் கூடத் தீங்கு விளைவிக்கலாம்.

கேள்வி:- ஐரோப்பாவில் நடக்கவிருக்கும் தேர்தல்களைப் பற்றியும், தற்போது நடந்துகொண்டிருக்கும் தேர்தல் களைப் பற்றியும் உங்கள் கருத்து என்ன?

பதில்:- ஐரோப்பாவில்வலதுசாரின்வெற்றிபெறவேண்டுமென்ற எனது முழுமையான விருப்பத்தை நான் உங்களிடம் மறைக்க விரும்பவில்லை. நான் பொதுவுடமை வாதி களுடன் உறவாடிச் சலித்துப் போய்விட்டேன்.

கேள்வி:- பொருளாதாரத் தடை உங்களுக்கு துன்பத்தைக் கொடுக்குமா?

பதில்:- இந்தக் கேள்விகளுக்கு முன்னரே பதிலளித்துவிட்டேன் என நம்புகின்றேன். ஆனால் இதைமேலும் தெளிவாக் கின்றேன்.

ஈராக் நாட்டை அழிப்பதையிட்டு குவைத் நாட்டவர் ஒருவர் சந்தோசமடைவார் என நீங்கள் உண்மையில் நினைக் கிறீர்களா? நேற்று நான் குவைத்திலிருந்து வந்த இருவரை சந்தித்தேன். ஒரு குண்டு ஈராக்கின் மீது விழுவதும் அல்லது குவைத்தின் மீது விழுவதும் அவர்களுக்கு ஒன்று தான். குண்டு வீச்சினால் ஒரு குவைத்குடிமகன் இறப்பதற்கும், ஈராக்கிய குடிமகன் இறப்பதற்கும் இடையே வித்தியாசமுள்ளது என நீங்கள் கற்பனை செய்கின்றீர்களா? நீங்கள் தப்பான கருத்தை கொண்டிருக்கிறீர்கள். அமெரிக்கா குவைத்தைப் பாதுகாக்க

வில்லை. அமெரிக்கா தனது நலன்களையும் தனது நிலநெய்வளங்களையும் தான் பாதுகாத்தது. இதனைத்தான் சதாம் தனது மக்களுக்கு விளங்கப்படுத்தினார். இப்பொழுது ஈராக்கிய மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். குவைத்தின் மீது ஈராக் படையெடுத்ததையிட்டு அதற்கெதிராக அப்போது நாங்கள் எடுத்த முடிவை உற்றுநோக்கும் போது இப்போதைய நிலைமை எங்களுக்கு நன்றாகப் புரிகின்றது. ஈராக்குக்குப் பின்னர் லிபியா இதற்குப் பிறகு சிரியா, அதற்குப் பிறகு அல்ஜீரியா, இறுதியாக எகிப்து ஆகிய நாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது எங்களுக்குப் புலனாகின்றது. அராபிய மக்கள் எச்சரிக்கை அடைந்துள்ளனர். மேற்குலக நாட்டுத்தலைவர்களுக்கெதிராக அராபிய மக்கள் எவ்வளவு கசப்புணர்ச்சியுடன் இருக்கின்றார்கள் என்பது இத்தலைவர்களுக்குப் புரியவில்லை. தாங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு அராபிய மக்கள் ஆரவாரித்து இன்முகம் காட்டுவதை, அராபிய மக்கள் தங்கள் கொள்கைகளை ஏற்றுக்கொளுவதாக மேற்குலகத் தலைவர்கள் கனவு காண்கின்றர். இதை அப்படியே இந்தமேற்குலகத் தலைவர்கள் நம்புகின்றனர்.

கேள்வி:- அடிப்படைவாதிகளின் மதவெறிக் கொள்கை, அவர்களின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் என நம்புகிறீர்களா?

பதில்:- அராபிய உலகத்தில் மேற்குலக நாடுகள் செய்துவரும் கொடூரச்செயல்கள் புதியனவல்ல. தங்கள் மரபுவழி வழிமுறைகளுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும், பண்பாட்டிற்கும் மதிப்புக் கொடுக்காமல் மேற்குலக நாடுகள் நெடுங்காலமாக நடந்துவந்துள்ளன என்பதை முஸ்லிம் அடிப்படைவாதிகள் நெடுங்காலமாக அறிந்து வந்துள்ளனர். அராபிய நாகரீகத்துக்கு மேற்குலகநாடுகள் மதிப்புக் கொடுப்பதில்லை. அத்துடன் அவர்களுடையபுனிதத்தலங்களுக்கும்மதிப்புக்கொடுப்பதில்லை. தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட இந்த முறைகேடான செயல்கள் பாரிய எதிர்ப்புணர்ச்சியை உருவாக்கியது.

வரலாற்றைப் பற்றிச் சிறிது பேசுவோம். பிரான்சில் மக்மோகன் (Macmohan) என்ற பெயருக்கு எவ்வளவு மதிப்பிருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். முதலாம் உலக போரின் போது மக்காவிலுள்ள செரிப்புடன் (Sheriff) நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது. அராபிய வளைகுடாவில் ஒரு அங்குல

86816

நிலமேனும் பெற்றுக்கொள்ள மக்மோகனால் முடியவில்லை. கப்பல் நங்கூரமிடுவதற்கு மட்டுமே உரிமை பெற்றிருந்தார். மேற்குலக நாடுகளின் கோரிக்கைக்கு எவ்வளவோ குறைவனாதையே இவர் பெற்றுக்கொண்டார். எங்கள் மரபுவழிப்படி புனித நபிகளின் நாட்டில் புனிதமற்றவர்கள் எவரும் காலடி வைக்க இடமில்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

கிறிஸ்தவ மதம் கிபுறா (Hebraism) மதத்திலிருந்தே தோன்றியதாகும். இம்மதத்தினால் நாடுகளில் எல்லைத் தகராறுகளும், போர்களும் உண்டாகின. இது என்னுடைய தனிப்பட்ட விளக்கமல்ல. இந்தக் காரணங்களால் ஏற்பட்ட எதிர்ப்புணர்ச்சி மாற்றமுடியாத நிலையிலுள்ளதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. அரசியலில் புதுவகையான அரசியல் புதுமையாளர்களினால் தேர்தல் நோக்கங்களுக்காக எதிர்ப்புணர்ச்சிகளும், முறைகேடான செயல்களும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

நெருப்பில் தொடர்ந்தும் நிலநெய்யை ஊற்றிக் கொண்டிருந்தால் சுடர்விட்டெரியும் என்பது உண்மை. பலமான கிறிஸ்தவ நாடுகளுக்கெதிராக சமய அடிப்படைவாதிகள் எடுக்கும் நடவடிக்கைகள் நீறுபூத்த நெருப்புப் போல் தோன்றும்.

கேள்வி:- இந்த விடயத்தில் உங்கள் கருத்தென்ன?

பதில்:- அடிப்படைவாதத் தலைவர்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியபோது, அவர்கள் வெகு விரைவாக ஒரு புனிதப் போரைத் தொடங்குவதற்கு ஆதரவு நல்கும்படி என்னைக் கோரினார். அவர்களுக்கு ஒரு கலிபா (Caliph) தேவைப்பட்டார். (கலிபா என்பது நபிகள் நாயகத்தின் அடுத்த வாரிசு என்றும். முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்றும் பொருள்படும்) அவர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொண்டால் முழு உலகமுமே கொழுந்துவிட்டெரியும். உலகம் இரண்டாகப் பிரியும், ஒரு பக்கம் கிறிஸ்தவ மதத்தினரும் மறுபக்கம்தில் முஸ்லிம் சமூகத்தவர்களும் இருப்பார்கள். ஆனால் அவர்களைப் பொறுமையாக இருக்கும்படி நான்கோனேன்.

கேள்வி:– ஏன் ?

பதில்:– நாங்கள் இன்னும் அபாயகரமான நிலைக்கு வரவில்லை என நான் அவர்களிடம் கூறினேன். ஆனால்

நான் அவர்களுக்கு அளித்த விடை ஏற்புடையதாக இருக்கவில்லை. இதற்கு மேலும் செல்ல அவர்கள் விரும்பினர். அவர்களின் வேட்கைகளை கட்டுப்படுத்த ஒருவராலும் முடியாவிட்டால் அவர்கள் மாகடல்களையும் கடக்க எத்தனிப்பர். லிபியாவைக் கலிபாவின் தாய்நாடாக இருக்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்தினர். அடுத்தபடியாக அந்தக்கலிபா நபிகள் நாயகத்தின் அடுத்த வாரிசாக இருக்கத் தகுதியானவன் எனவும் கூறினர். தெற்கு ஐரோப்பா, சிசிலி, ஸ்பெயின் பல்கேரியாவின் சில பகுதிகள் இஸ்லாமிய அரசின் எல்லைகளாக இருக்க வேண்டுமென்றும் விரும்பினர். ஒட்டமான் நாடுகளுக்கும் ( Ottoman States ) அண்டாலூசியன் ( Andalusian ) அரசுக்கும் முன்பு சொந்தமாக இருந்த நாடுகளை மீளப்பெறவேண்டுமென்றும் விரும்பினர். இத்தாவியையோ, ஸ்பெயினையோ, பிரிப்பதென்பது நினைத்துப் பார்க்கக் கூடியதொன்றல்ல. என்பதே எனது நம்பிக்கையாகும்.இப்படியான செயல் ஐரோப்பிய நாடுகளில் குடியேற்றுவதற்கு ஒப்பாகும். எங்களுக்கு எங்கள் எல்லைகளை நன்றாகத்தெரியும். வட ஆபிரிக்கா, அதை நாம் பாதுகாக்க வேண்டும். ஆனால் அதற்கு அடிப்படைவாதிகள் ஒத்துவருகிறார்களில்லை. வடஆபிரிக்காவின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டுமாயின் அவர்களைப் போல் எண்ண வேண்டுமென அவர்கள் நினைக்கின்றனர். கனாறி Canary தீவுகளை ஸ்பெயின் கைப்பற்றி வைத்திருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர். அந்தத்தீவுகளை திரும்பப் பெறவேண்டுமெனவும் விரும்புகின்றனர். இப்படிப்பட்ட கருத்துக்கள் அளவுக்கு மீறிய தேசிய வாதமாகும்

அது மாத்திரமல்ல, அல்ஜீரியாவில் ஒரு முஸ்லிம் நாடு தோன்றவேண்டுமென அடிப்படைவாதிகள் விரும்புகின்றனர். ஆனால், லிபியாவில் அடிப்படைவாத இஸ்லாம் முன்னணி என்ற இயக்கம் கிடையாது. தங்கள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல லிபியாவை ஒரு இணைப்புப் பாலமாக அவர்கள் நினைக்கின்றார்கள். இது ஒரு புரட்சிவாத உண்மைநிலை எனக் கூறுகின்றனர். இதனால் மேற்குலகத்தைய தாக்கங்களையும், குடியேற்றங்களையும் தவிர்க்க முடியுமென்று அவர்கள் நம்புகின்றனர்.

மேற்குலக நாடுகளுக்கு அடிபணிவதென்பதை அடிப்படை வாதிகள் முற்றுமுழுதாக எதிர்க்கின்றனர். பண்பாட்டு ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ கீழ்ப்படிய விரும்பவில்லை. அவர்களுடைய உண்மையான அடிப்படைவாதத் தத்துவங்களுக்கு லிபியா ஏற்ற நாடு என நினைக்கின்றனர். அடிப்படைவாதிகள் தங்கள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு என்னால் முடிந்தவரையும் ஏற்ற வழிகளைச் செய்து வருகின்றேன்.

கேள்வி:- அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயங்கர வாதத்தைப் பயன்படுத்துவது முறையாகுமா?

பதில்:- அரசியல் பிரச்சினைகள் தான் பயங்கரவாதத்துக்குக் காரணமாகும். பயங்கரவாதத்தை ஒருவர் முடிவுக்குக் கொண்டு வர விரும்பினால் அரசியல் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். பலஸ்தீனியப் பிரச்சினை சிறுபான்மையினர் பிரச்சினை, தென்னாபிரிக்கப் பிரச்சினை என்பன தீர்க்கப்பட்டால் பயங்கரவாதம் முடிவு பெறுவதை ஒருவர் காண முடியும். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவது என்பது முடியாத காரியமாகும்.

கேள்வி:- உங்களுடைய பகுப்பாய்வுகளை மேற்கு நாடுகள் ஒத்துக்கொள்ளுமா? அவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

பதில்;- காலம் எனது பக்கத்திலிருக்கின்றது. நான் ஒரு நாட்டின் தலைவனல்ல. நான் படிக்கின்றேன். சமூக அறிவியல் கழகத்தில் நான் ஒரு உறுப்பினன். என்னுடைய கருத்துக்களைப்பற்றிச் சொற்பொழிவாற்ற என்னை அழைத்தால் நான் எங்கும் வரத் தயாராயுள்ளேன்.

கேள்வி:- ஐக்கிய அமெரிக்காவுக்குப் போகவும் தயாரா?

பதில்:- ரம்ழான் நோன்பு முடிந்தவுடன் உலகத்திலுள்ள எந்த நாட்டிற்கும் போக நான் தயாராயுள்ளேன். ஐக்கிய, அமெரிக்காவுக்குப் போவதை நான் பெரிதும் விரும்புகின்றேன். என்னை அழைக்கும் எந்த அமெரிக்கப் பல்கலைக் கழகத்துக்கும் செல்ல நான் தயாராயுள்ளேன்.

கேள்வி;- உங்களைக் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிப்பீர்களா?

பதில்:- என்னுடன் தற்பொழுது எதிராயுள்ளவர்கள் கேட்கிற கேள்விகளுக்கும், ஏனையோர் கேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் அளிக்கத் தயாராயுள்ளேன்.

கேள்வி:- ஏன் இந்தப் புதிய நிலைப்பாடு?

பதில்;- அப்படியானால் தான் அவர்கள் விளங்கிக் கொள்வார்கள். அமெரிக்கா பல தவறுகளைச் செய்து வருகின்ற தென்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இத்தவறுகளை நடைபெற அமெரிக்க அரசாங்கம் இடமளிக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக நான் அமெரிக்கா வருவதைத் தடைசெய்வதற்காக எனது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என அமெரிக்க அரசாங்கம் சில சாக்குப்போக்குகளைக் கூறும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அது முக்கியமானதும், அவசியமானதுமாகும். எங்கள் உலகம் மற்ற உலகத்துக்குத் தனது கொள்கைகளைத் திடமாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறத் தக்கதாயிருக்க வேண்டும். நாங்கள் எங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

கேள்வி:- உலக அபிப்பிராயப்படி தேர்தல் முறைகளில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா ?

பதில்:- எல்லோரும் பங்கு கொள்ளக் கூடிய நேரடி சனநாயக முறைகளை நான் விரும்புகின்றேன். பாராளுமன்றம் என்பது நகைப்புக்கிடமானது, நான் எழுதிய சிறிய பச்சைப் புத்தகத்திலுள்ள கருத்துக்களை உலகம் ஒருநாள் விளங்கிக் கொள்ளுமென்று நான் நம்புகின்றேன்.

மக்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூற வழிசெய்வது முக்கியமானதாகும். சிறு சிறு பிரசைகள் குழுக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் வேட்கைகளை, தங்களை அரசாட்சி செய்பவர்களுக்குக் கேட்கத்தக்கதாகச் செய்யும் மக்கள் சபை என்ற கருத்தில் நான் நம்பிக்கை கொண்டவன். இப்படியான முறையில் சர்வாதிகாரம் ஏற்பட வழியிராதாகையால் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்வார்கள்.

கேள்வி:- ஒரு காலகட்டத்தில் உங்கள் கைவசம் அணுகுண்டு இருக்குமென நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:- நான் உயிரோடிருக்கும் வரை லிபியா அணுகுண்டைத் தயாரிக்க மாட்டாது. அணுகுண்டு தயாரிக்க வேண்டு மென்ற எண்ணம் லிபியாவுக்கு இருந்திருந்தால் அது செயற்கை நதி ஒன்றை அமைக்க நினைத்திருக்கமாட் டாது. நான் ஒரு அணுகுண்டைத் தயாரிப்பதற்குத் தடையேதுமுண்டா? அப்படி நினைப்பது ஒரு மடை மைத் தனமான செயல் ஆகும். எவரும் அணுகுண்டு தயாரிப்பதைத் தடுக்கும் உரிமை வேறொருவருக்கும் கிடையாது. எங்கள் எல்லோராலும் அணுகுண்டு தயாரிக்க முடியும்.

கேள்வி;- பான் - அமெரிக்க விமான விவகாரம் பற்றிப் பேசு வோம். உங்கள் சொந்த விசாரணைகளில் எந்நிலையில் இருக்கின்றீர்கள்? மேற்குலக நாடுகளுக்குத் தெரியாத விடயங்கள் இத்தகைய நிகழ்ச்சியில் இருக்கின்றனவா? வெளியிடுவதற்கு ஏதேனும் தகவல்கள் உங்களிடம் உண்டா?

பதில்:- நான் இப்போது உங்களுக்கு கூறவிரும்புவதை இதுவரை வேறேவருக்கும் கூறவில்லை மத்தியபுலனாய்வுத்துறையி லிருந்து இளைப்பாறிய முன்னாள் மேலாளர்களை பான் - அமெரிக்கா நிறுவனம் இந்த குண்டு விபத்துப் பற்றி விசாரிக்கும் பணியில் அமர்த்தியுள்ளது. இந்த விசாரணை அறிக்கையை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான பணம் அந்த ஒட்டாண்டி நிறுவனத்திடம் இல்லை. திரு. புஷ் அவர்கள் மீது எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு, இந்த அறிக்கை கிடைத்தவுடன் அவருக்கு அதை அனுப்பி வைத்தேன். அவர் அதற்குப் பதில் அனுப்பவில்லை. தனது தேர்தல் கோட்பரப்புகையில் ஈடுபட்டுவருவத னால் அவருக்கு நேரம் இல்லாதிருக்கலாம். லிபியா தான் இந்த விபத்துக்குக்காரணம் என அவருக்கு நெருங்கியவர்கள் கூறுவதையிட்டு அவர் ஆச்சரிய மடைந்துள்ளதாக அறிந்தேன் இந்த வெடிகுண்டு வைத்த சூத்திரதாரியார் என்பது எங்களுக்குத் தெரி யும். ஆனால் எங்கள் நாடு இந்த விபத்துக்குப்பொறுப் பில்லை. இந்த அறிக்கை இருப்பதாகவோ அல்லது இதிலுள்ள விடயங்களோ பதுகாப்புச் சபை உறுப்பி னர்களுக்குக்கு தெரியப் படுத்தப்படவில்லை: இந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் மூடிமறைக்க முடியா

தவை. இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்க ளுக்கு லிபியா பலிக்கடாவாகக் காட்டப்படுகிறது. ஆனால் அந்தக் குடும்பங்கள் உண்மையை அறிய விரும்புகின்றன.

கேள்வி:- விபத்துக்குள்ளானவர்களின் குடும்பங்கள் இந்த அறிக் கையைப் பார்வையிட முடியுமா?

பதில்:- ஆம். நிச்சயமாக.

கேள்வி:- இந்த அறிக்கையின் நகல் ஒன்றை எங்களுக்குத் தரமுடியும?

பதில்:- உமக்கு ஒரு நகல் தருகின்றேன்.

கேள்வி:- ஆனபடியால் உங்கள் கூற்றின்படி உண்மை வேறெங் கோ உள்ளது?

பதில்:- ஆம்.

—நன்றி: **புரன்ட்லைன்**

*****************************

*ஒரு சாதாரண உண்மையோ, பரிசுத்தமான*
*யதார்த்தமோ கலையின் பொருளாவதில்லை,*
*உண்மையின் அடித்தளத்தில் எழுதப்பட்டுள்ள*
*மாயக் கற்பனையே சிறந்த கலையின் ரகசியமாகிறது.*

—ஜோசப் ஜுப்ர்ட்

******************************

# ஒரு பாரிய பொருளாதாரப் பேரரசாக விளங்கும் ஆற்றல் மிக்க சீனா

- அன்ட்ரு பிறவுண் -
(ஐலன்ட் - 18-05-92)

பசுபிக் மாகடலின் ஓரத்தில் ஒரு புதிய பொருளாதாரப் பேரரசு உதயமாகின்றது.

ஆற்றல் மிக்க சீனா என அழைக்கப்படும் இப்பேரரசு இஞ்ஞாலத்தில் துரிதமாக வளர்ந்து வருவதுடன், மேற்குலக நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளைச் செய்யும் தங்கச் சுரங்கமாகவும் விளங்குகின்றது.

ஆசியாவில் பொருளாதார மேம்பாட்டை அடைந்துள்ள இருநாடுகளுக்கு (ஜப்பான், சிங்கப்பூர்) ஈடுகொடுக்கத்தக்க வகையில் கொங்கொங், தாய்வான் மற்றும் சீனாவின் தென்கரையோரத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பொருளாதார அணியை உருவாக்கவேண்டுமென்று சென்ற சில ஆண்டுகளாகச் சீனாவின் மூத்த தலைவர்கள் கொண்டிருந்த ஆசை வெறும் கனவாகவே இருந்து வந்தது.

இந்த ஆசை நிறைவேறுமா என நாம் நினைத்ததுபோல் அல்லாது இக்கனவு வெகுவிரைவாகவே நிறைவேறப் போகின்றது. வேறு எவ்விடத்திலும் இல்லாதவாறு சீனாவின் குவாங்டொங் (Guangtong) மாகாணத்தின் வளர்ச்சிபெற்றுவரும் தலைநகரமான கன்ரனில் (Canton) இது நிறைவேறப் போவது தெளிவாகத் தெரியவருகின்றது.

பண்டைக்காலப் பண்பாடு, குடும்பம், மொழி ஆகியவற்றின் பிணைப்பினால், இந்தச் சீனமொழி பேசும் வர்த்தகப் பேரரசு, எல்லை அரசியல், ஆகியவற்றை ஒதுக்கிவைத்து, இலாபம் ஒன்றையே முக்கிய குறிக்கோளாகக்கருதித் தனது முயற்சிகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

கொங்கொங் சீனாவின் கரையோரத்திலுள்ள பிரித்தானியக் காலனித்துவ நாடாகும். தாய்வான் 1949 ம் ஆண்டு தொடக்கம் சீனாவின் பொதுவுடமைக் கொள்கைக்கு எதிரான தேசிய அரசாங்கத்தினால் ஆளப்பட்டு வருகிறது.

வெவ்வேறு விதமான இந்நாடுகள் முதலீடு, வாணிபம், போக்குவரத்து ஆகிய துறைகளை ஆசியாவிலும் வளம்படுத்துவதற்காக ஏற்கனவே உறுதியான திட்டங்களை வகுத்திருக்கின்றன. தற்பொழுது இந்நாடுகள் ஒரு பொதுவான எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தென்கிழக்குச் சீனக் கரையோரத்தில் தங்கள் பொருளாதார முதலீடுகளைச் செய்கின்றன.




சென்ற பத்தாண்டுகளில் கொங்கொங் 23 பில்லியன் (23 **Billion**) டாலர்களைச் சீனாவில் முதலீடு செய்துள்ளது. இதில் ஏறத்தாழ முழுத்தொகையும் குவாங்டொங் மாகாணத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சீனாவுடனான நேரடி வர்த்தகத் தொடர்புகளையும், முதலீடுகளையும் தாய்வானின் தேசிய அரசாங்கம் தடைசெய்திருந்த போதிலும் அந்த நாடு 5 பில்லியன் டாலர்களைச் சீனாவில் முதலீடு செய்துள்ளது.

மேற்குலக நாடுகளின் நிறுவனங்களுக்கு இங்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன.

கொங்கொங்கும், தாய்வானும் தென் சீனாவில் முதலீடு களைச் செய்துள்ளமையால் அவைகட்கு தங்கள் நாட்டிலுள்ள சேவைகளையும், தொழிற்சாலைகளையும் புதிய காலத்திற் கேற்ற வகையில் சீரமைக்கவும் உயர் தொழில்நுட்பக் கைத் தொழில்களை ஆரம்பிக்கவும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

தாய்வான் தனது நாட்டை வளம்படுத்தத் தயாரித்து வைத்திருக்கும் திட்டங்களோடு குவைத் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை ஒப்பிட்டு நோக்கினால் இது ஒரு சிறிய திட்டமாகத் தோற்றமளிக்கும். எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு புதிய வானூர்தி தளத்தை அமைப்பதற்காக கொங்கொங் 14 பில்லியன் டாலர்களுக்கான ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இது வரலாற்றில் ஒரு பாரிய பொறியியல் திட்ட மாகும்.

தற்போது பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கும் தென் சீனா, உலகத்தில் துறைமுகங்கள் தொடக்கம் பெருந் தெருக்கள் வரையும் மற்றும் மின் நிலையங்கள் ஆகியவற்றை நிருமாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரு தளமாக இருக் கின்றது.

நிலத்துக்கடியில் செல்லும் புகைவண்டித் திட்டத்திற்கு ஒரு பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள கூறுவிலைகோரும் விண்ணப் பங்களை கன்ரன் கோரப் போகின்றது. அடுத்துவரும் நாலாண் டுகளுக்கு மாத்திரம் குவாங்டொங் மாகாணத்திலுள்ள பாரிய திட்டங்களில் மூதலீடு செய்வதற்கு அரசாங்கம் 7.0 பில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

சீனாவின் பெருந்தலைவரான டெங் சியோபிங் (Deng Zia-oping) 1978ம் ஆண்டு தொடக்கம் கொண்டு வந்த பொருளா தாரச் சீர்திருத்தங்களின் விளைவே ஆற்றல் மிகு சீனா என்ற பொருளாதார பேரரசாகும்.

இந்த மாகாணத்தின் எல்லைகள் தெளிவற்ற நிலையில் உள்ளமையாலும் இங்கே பொருளாதார முதலீடுகள் ஒன்றோ டொன்று பின்னிப்பிணைந்திருப்பதாலும், மக்கள் தொகையும் ஏறக்குறைய 50மில்லியன்களாக இருப்பதாலும் இங்குள்ள உற் பத்தியை அளவிடமுடியாதுள்ளது.

இந்த இடங்களை ஒரு ஜெற் வானூர்தி மூன்று மணித் தியாலங்களில் சுற்றிவரமுடியும். அப்போ நிதிநிலையங்கள்அமைந்

துள்ள கொங்கொங்கின் வானளாவிய மாடமாளிகைகளையும், தாய்வானின் கைத்தொழிற் பேட்டைகளையும், தென்சீனாவின் வளங்குன்றா நெல்வயல்களையும் கண்டு களிக்கலாம்.

சீன வர்த்தகர்கள் ஆசிய நாடுகளில் சேகரித்த செல்வங் களை முதலீடு செய்யக்கூடிய பாதுகாப்பான புகலிடமாகத் திரு· டெங் சீனாவை ஆக்கியுள்ளார். அத்துடன் தங்கள் நாட்டை வளம்படுத்துவதற்காக உலகின் திறமைவாய்ந்த முதலீட்டாளர் களையும் அவர் ஒன்றுசேர்த்துள்ளார்.

பொதுவுடமைக் கொள்கையினால் ஈடாட்டம் கண்டுள்ள சீனா தங்கள் நாட்டின் பொருளாதார வளங்களை மேம்படுத் துவதற்காக தென் சீனாவிலிருந்து ஆரம்பித்து, நாடு முழுவதும் முனைப்புடன் செயற்படுகின்றது.

சீனாவின் வெளிநாட்டு முதலீடுகளில் 60% வீதத்துக்கும் மேலான முதலீட்டை கொங் கொங் செய்துள்ளது. இதில்90% வீதமான முதலீடு குவாங்டொங் மாகாணத்தில் செய்யப்பட் டுள்ளது. இதனால் இந்த மாகாணம் சீனாவில் செல்வம் கொழிக் கும் மாகாணமாகத் திகழ்வதோடு, அது அரசாங்கத்துக்கும் பெருமளவு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்றது.

தாய்வானின் அதிகமான முதலீடுகளும் இந்த குவாங் டொங் மாகாணத்திலேயே செய்யப்பட்டுள்ளன. தாய்வான் நீரிணைக்கு அப்பால் எதிர்ப்பக்கமாக உள்ள பூஜியன் Fujian) மாகாணத்திலும் தாய்வான் சொற்ப முதலீடுகளைச் செய் துள்ளது.

ஆற்றல்மிக்க சீனாவின் வர்த்தகநதியாக கன்ரன் நகரம் திகழ்கின்றது.

இந்நகரத்துக்கு வரும் சீன வர்த்தகர்கள் இந்நகரத்தில் பேசப்படும் மொழியையே பேசுவதோடல்லாமல் இத்தாலியச் சப்பாத்துக்களையும், பிரான்சு நாட்டின் பிராந்தி (Brandy) யையும் விரும்புகின்றனர். கன்ரன் நகரிலோ, கொங்கொங்கிலோ அல்லது தைப்போ(Taipei) யிலோ சந்திக்கும் பொழுதும் 'கரா யோகே'(Karaoke) மதுபானசாலைகளிலும், டிஸ்கோ நடனத் தின்போதும் களியாட்டங்களோடு வாணிபம் பற்றிய பேசுகின் றனர்.

இவைகள் யாவும் மிகப்பெரிய பொருளாதார ஆற்றல்களாகும்.

முப்பது ஆண்டுகால வளர்ச்சியினால் கொங்கொங்கிலும், தாய்வானிலும் தொழிலாளர்களின் சம்பளங்களும், காணிகளின் விலைகளும் அதிகரித்துள்ளதுடன் சுற்றாடலும் மாசுபடவேண்டி நேரிட்டுள்ளது.

ஏறக்குறைய கொங்கொங்கின் மூன்றிலொரு பங்கு தொழில் நிறுவனங்கள் அதன் எல்லைக்கப்பாலுள்ள குவாங்டொங் மாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

குறைந்த செலவில் உற்பத்தித் திறனைப் பெறக்கூடிய ஏனைய ஆசிய நாடுகளுக்குத் தாய்வானின் சிறு கைத்தொழில்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் கணிசமான அளவு கொங்கொங்கின் ஊடாகச் சீனாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

குவாங்டொங்கில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு கொங்கொங் விற்பனை நிலையமாக விளங்குகின்றது. பிரித்தானியா தனது கடைசிக் குடியேற்ற நாடான கொங்கொங்கை 1997ம் ஆண்டு சீனாவிடம் கையளித்தவுடன் அவை ஒன்றாக இணைந்து விடும்.

தாய்வானின் தேசிய அரசாங்கம் சீனாவுக்கு எதிராகச் செயற்படுகையில் தாய்வானின் முதலீட்டார்கள் சீனாவின் சந்தையை மிகவும் விரும்புகின்றார்கள். ஆற்றல் மிக்க பரந்த சீனப் பேரரசின் வளர்ச்சிக்கு இது ஓர் தடையாக இருக்கின்றது.

— ★ —

# விடுதலைப்புலிகள், இலங்கைத் தமிழர், இந்தியா

## பைத்தியக்காரத்தனமான கொள்கைமுடிவுற்றது

( புரொன்ட்லைன்ட் — ஆசிரியர் தலையங்கம் )

இந்தியாவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று அந்நாடு எடுத்துவரும் நடவடிக்கைகள், தீவிரவாத கொடூரச்செயல்களைப் புரியும், சாதாரண மக்களின் வாழ்க்கையைத் துச்சமாக மதிக்கும் விட்டுக் கொடுக்காத பொல்பொர்ட் இயக்கத்தைப் (Pol Potish Organisation) போன்று இந்த இயக்கத்தின் நடவடிக்கைகளும் மாற்றமுடியாது அமைந்திருப்பதால் இதுவும் விரும்பத்தகாதது என்ற இந்திய மக்களின் உண்மையான கண்ணோட்டத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது. விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்ய வேண்டும் என்ற திட்டம் நெடுங்காலமாக இந்திய அரசாங்கத்துக்கு இருந்த போதிலும் 1991ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி திரு. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னரே இதைத் தடை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்மையாக எழுந்தது.

இதற்கு எடுத்துக்காட்டாக இரு விடயங்கள் தென்படுகின்றன. முதலாவதாக விடுதலைப் புலிகளின் கடும் கோட்பாடுகளும், உண்மைக்குப் புறம்பான மதிப்பும் இந்திய மக்களின் கண்ணோட்டத்தில் இந்திய அரசின் செயற்பாடுகளினால் ஏற்பட்டது. இவ்வியக்கத்தின் செயற்பாடுகள், நினைத்துப் பார்க்க முடியாத கொடூரங்கள், போர்த்திறன் தீவிரவாதச் செயல்கள் என்பன இறுதியாக இந்தியாவின் உயர்மட்ட அரசியல்வாதிகளையும் விட்டுவைக்கவில்லை. இதனால் இந்திய மக்களும், இந்திய அரசியல்வாதிகளும் இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக நிற்கின்றார்கள். இதற்கு மாறான நிலையில் சில சிறு குழுக்களும் இருக்கின்றன.

இரண்டாவதாகத் திரு ராஜீவ் காந்தியின் கொலையை செய்து முடிக்க உத்தரவிட்ட சூத்திரதாரி விடுதலைப் புலிகளின் தலைவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் நிலையில் விடுதே

லைப் புலிகளைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1983 ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் சிக்கல்களில் இந்தியா பின்பற்றிவரும் தடுமாற்றமானதும், பைத்தியக்காரத்தனமுமான அரசியல் கொள்கைகள், இந்திய இராணுவம் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்த காலமான 1987 — 90க்குப் பின்பும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த இக் கொள்கைத்திட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டுவேரப்பட்டுள்ளது,

விடுதலைப் புலிகளின் தலைவர்களும், பேச்சாளர்களும் உண்மைநிலை அறிந்தவர்களாக இல்லை. அவர்களுடைய மூத்த அரசியல் ஆலோசகரும், பேச்சாளருமான திரு. அன்ரன் பால சிங்கம் அவர்கள் வடக்குக்குச் சென்ற பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்த செய்தியிலிருந்து உண்மை நிலையை அவர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்பது தெளிவாகத்தெரியவருகின்றது திரும்பவும் இந்தியாவுடனான நல்ல உறவைக் கட்டி எழுப்புவதற்கு எங்கள் கதவுகளை நாம் இன்னமும் மூடிவிடவில்லை. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் உண்மை நிலையை வைத்து வகுக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு வெளியுறவுக் கொள்கைகளை வகுக்கக்கூடாது எனத் திரு. பாலசிங்கம் பத்திரிகையாளர்கட்கு கூறியுள்ளார். இந்த அறை கூவல் மூலம், இந்தியாவின் நலன்களுக்கான போக்கு என விடுதலைப்புலிகளின் பேச்சாளர் கூறியிருப்பது அவர்களின் ஆணவத்தையும் முட்டாள்தனத்தையும் எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. அத்துடன் இலங்கையின் வடக்குக் கிழக்கில் இந்திய இராணுவம் நடவடிக்கைகளின் போது நடந்த மனித உரிமை மீறல்களையிட்டு அனைத்துலக மனித உரிமை மன்றங்களுக்கும், உலகநீதிமன்றங்களுக்கும், இந்தியாவுக்கெதிராக முறைப்பாடு செய்யப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கைகளையும் முறையீடுகளையும் 1991-92ம் ஆண்டுகளில் இலங்கை இராணுவம் எடுத்த இராணுவ நடவடிக்கைகளோடும், இனப்பிரச்சினையுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

இக்காலகட்டத்தில் இலங்கை இராணுவம் தனது பலத்தைக் கூட்டிக் கொண்டே போயுள்ளது ஆனையிறவுச் சமருக்குப் பின்னர் இது தெளிவாயுள்ளது. பல வாரங்களாக விடுதலைப் புலிகளின் தங்ககங்களைக் கைப்பற்றியும், குடாநாட்டை

வடக்குக் கிழக்குப் பகுதியிலிருந்து பிரித்தும், அவர்களின் போர்த்திறனை மழுங்கடித்தும், அரசாங்கத்தின் கீழுள்ள கட்டுப் பாட்டு நிலப்பரப்பை விரிவாக்கியும் உள்ளது. விடுதலைப்புலிகள் இலங்கை இராணுவத்துக்கெதிராகச் சில அதிரடித் தாக்குதல் களை நடாத்தியிருந்தாலும் இதையிட்டுத் திரு. பிரபாகரனுக்கு மனநிறைவு ஏற்பட இடமில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கில் எடுத்த பாரிய இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட அழிவுகள் போலல்லாமல், தற்பொழுது இலங்கை இராணுவம், போர்த்திற னிலும், இராணுவத்தளபாடங்களிலும் மேம்பட்ட நிலையில் இருக் கின்றது. வடபகுதியில் 1987ம் ஆண்டு எடுத்த இராணுவ நட வடிக்கையின்போது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற் சியை இந்தியா தடைசெய்தது. இந்தியத் தூதுவர் திரு.ஜே.என் திக்சித், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற விடமாட்டோம் என நெருக் கடியான கட்டத்தில் முகத்தில் அறைந்ததுபோல் கூறியதாகத் திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1991ம் ஆண்டு நடுவில் புரன்ட்லைன் பத்திரிகைக்குக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கெதிரான நேரடி மோதலில் சீனாவிடமிருந்து வாங்கிய காலாட்படை வாக னங்களும், கிழக்கைரோப்பிய நாடுகளிடமிருந்துவாங்கிய ரீ. 55 ரகத் த ங்கிகளும் இலங்கை இராணுவத்தின் போர் ஆற்றலை கூட்டியுள்ளன.

இந்தியக் கடற்படை தனது தென்கரையோரப் பகுதிகளில் கடுமையாகக் காவல் புரிந்து விடுதலைப்புலிகளின் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துவது இலங்கையின் சிறிய கடற்படைக்கு தனது தொழிற்பாடுகளைத் திறம்படச் செயலாற்ற வழிவகுக் கின்றது. சிறிலங்காவின் வான் படை சிறு சிறு தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றது. இவைகளை எதிர்க்கும் ஆற்றல் புலி களிடம் கிடையாது. இவைகளைத்தவிர விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகளை அறிந்து கொள்வதில் புலனாய்வுப் பிரிவும் திறம்படச் செயல்பட்டுவருகின்றது.

இலங்கையில் வடபகுதியில் இராணுவம் எடுத்த நடவடிக் கையை உற்று நோக்கிய இந்திய இராணுவ வல்லுனர்கள் இலங்கை இராணுவத்தின் திறமையையும், அவர்கள் திட்டமிடும் விதத்தையும் கண்டு பிரமிப்படைந்துள்ளனர். இப்போர் நடவடிக் கைகள் விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளைத்

17

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

தடுமாற்றம் அடையச் செய்ததோடு அவர்களின் அரசியல் நடவடிக்கைகளிலும் உறுதியற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இராணுவம் வடக்கிலுள்ள தமிழ்ப் பகுதிகளில் தனது கட்டுப்பாட்டை விரிவுபடுத்திவருவதோடு, பொதுமக்களுக்கு இன்னல் ஏற்படாது கவனமாகத்தனது நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றது.

இந்த இராணுவ நடவடிக்கைகளின் பின்னணியிலுள்ள அரசியல் திட்டம் என்ன என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது. சிறிலங்காவின் தெற்கில் உள்ள மக்களின் நிலைப்பாடு விட்டுக்கொடுக்கும் தன்மை அற்றதாக இருக்கின்றது. 1991 1992ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்களைப் பலவீனப்படுத்தி, அவரைத் திருத்திப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. அல்லது அவருக்கு கூடுதலான இழப்புகளை ஏற்படுத்தி அவரைப்பணியவைப்பதாகும். இதில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காண்பதற்காக அவருக்குச் சந்தர்ப்பமும் காலநேரமும் போதியளவு கொடுக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், மூத்த அமைச்சருமான திரு.தொண்டமான் அவர்கள் வகுத்த விரிவான சுயாட்சி யோசனைகள் 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி கைச்சாத்தான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் காணப்பட்ட தீர்வுத்திட்டத்திலும் பார்க்க முன்னேற்றமானவை. இந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் சமூக அரசியல் சீரழிவை ஏற்படுத்தி விட்டுச்சென்றதுடன் இரண்டு ஆண்டுகளுக்குள் முறிவடைந்தது.

புத்த குருமாரினால் ஏற்படுத்தப்பட்ட சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களுக்கு எவ்வித உரிமைகள் வழங்குவதை எதிர்த்துவந்த அதே வேளையில், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்களது இலட்சியமாகிய தமிழீழத் தாயகம் என்னும் கோட்பாட்டில் இருந்து இம்மியளவும் விட்டுக்கொடுக்கிறார்கள் இல்லை.

விடுதலைப் புலிகள் தமிழீழத் தாயகம் என்னும் தங்கள் இலட்சியத்திலிருந்து சிறிதளவேனும் விலகுவதாகத் தெரியவில்லை. அத்தோடு தன்முடிபுரிமை என்ற கோட்பாட்டிலிருந்து அவர்கள் விலகவில்லை. இரண்டு சுதந்திர நாடுகளிடையே இருக்கும் ஒரு தற்காலிக கூட்டரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள விரும்புவதாக

அவர்கள் தெரிவித்துள்ளனர். இராணுவப் பின்னடைவு ஏற்பட்ட பின்னரும் சண்டையா? சமாதானமா? என்பதை தீர்மானிப்பது எதிரியைப் பொறுத்தது என்று கூறிவருகின்றனர்.

இந்த முடிவுபெறாத இனப்பிரச்சினைக்கு மிதவாதிகளினாலும் தனிநபர்களினாலும் நல்நோக்குடன் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இருசாராருக்கும் இடையேயுள்ள தீர்வுத்திட்டங்களிலுள்ள வேறுபாடுகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதிக்காத வகையில் தீர்வுத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தால் அதை நடைமுறைப்படுத்த புலிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றது. நிலையான தீர்வுத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதாயின் விடுதலைப் புலிகளின் சொற்போர்களிலிருந்தும் செய்கைகளிலிருந்தும் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும், மனோதத்துவரீதியாகவும் பிரித்தெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

ஒரு நீதியற்ற இனப்பிரச்சினையில் பெருமளவிலான தமிழ் மக்கள் சிக்கி சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகின்றனர். இதில் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் அடைந்துவரும் கஷ்டங்களில் புலிகளுக்குப் பாரிய பங்குண்டு. அப்பாவித் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு சனநாயக நாடான இந்தியா தொடர்ந்து அனுதாபங்காட்ட வேண்டும். ஆனால் இதற்காக விடுதலைப் புலிகளுடன் நல்லுறவைப் பேணுவதென்பது நல்லதல்ல.

துரதிர்ஷ்டவசமாக விடுதலைப் புலிகளால் ஒழித்துக்கட்டப்பட்ட திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் ஏனைய தீவிரவாதக் குழு தலைவர்களுக்குப் பின்னர் தமிழ் மக்களின் வேட்கைகளை முழுமை செய்யும் வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பொல்பொட் அமைப்பைப் போன்ற இந்த இயக்கத்தையும் முன்னாள் இந்தியப் பிரதமரைக் கொலைசெய்த குற்றத்தால் தன்னைக் களங்கப்படுத்திக்கொண்ட ஒரு தனிமனிதனையும் விட வேறொரு மனிதர் எவரும் இல்லை.

இன்று இலங்கையின் இனப்பிரச்சினையில் சண்டையா? அல்லது சமாதானமா? அது குறித்து இந்தியாவின் பிடி காலங் கடந்த ஒரு விடயமாகும். நேர்மையான உளப்பூர்வமான அரசியல் வாதிகளின் கருத்துப்படி, இந்தியா இதுநாள்வரை கடைப்

பிடித்த கொள்கைகள் பைத்தியக்காரத் தனமானவை என்பதும் அதில் தவறுகள உள்ளதென்பதும் தெரியவந்துள்ளது.

1983ஆம் ஆண்டுக்குப் பிந்திய இந்தியக் கொள்கையின்படி ஒற்றையாட்சியுள்ள ஐக்கிய இலங்கையில், இலங்கைத் தமிழர் களுக்கு நீதியும் நியாயமுமுள்ள பாதுகாப்பான அரசியல் உரி மைகளைப் பெற்றுக்கொடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

மறுபுறத்தில் தனித் தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொடுக்க விரும் பமில்லாதிருந்தும் திருமதி இந்திராகாந்தி, திரு. எம்,ஜி. இராமச் சந்திரன் அவர்களைத் தொடர்ந்து திரு, ராஜீவ்காந்தி என்போர் விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தீவிரவாத இயக்கங் களையும் கட்டிவளர்க்கத் திட்டமிட்டிருந்தனர். மிதவாதிகளும் விடுதலைப் புலிகளைப் போல் தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைத்திருந்தனர். இலங்கை அரசைப் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைக்கச் செய்யும் சனநாயக இந்தியாவின் வழிமுறைகளில் இதுவும் ஒன்றாகும். இது உண்மையான ஒரு அரசியல் வழி முறையாகும்.

இந்திய மக்கள் கடந்தகால கொள்கைகளை பைத்தியக்காரத் தனமானதாகவும் மக்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்திய கொள் கையாகவும் பார்க்கின்றார்கள்.

இந்த உணர்ச்சிவசப்படக்கூடிய விடயங்கள்பற்றி இரு புத்த கங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. அவையாவன, இளைப் பாறிய லெப்பிரினன்ட் ஜெனரல் சர்தேஷ் பாண்டே அவர்களால் எழுதப்பட்ட "இடப்பட்ட பணி" Assignment Jaffna by Lt. Gen, Sardesha Pande) என்ற புத்தகமும், இளைப்பாறிய லெப்ரினன்ட் ஜெனரலும், இலங்கையின் நெருக்கடியான காலகட்டத்தின்போது இந்திய அமைதிகாக்கும் படையின் முழுப்பொறுப்பையும் ஏற் றிருந்தவருமான தளபதி திபேந்திர் சிங் அவர்களால் எழுதப்பட்ட "சிறிலங்காவில் அமைதி காக்கும் படை (I. P· K. F. in Sri Lanka by Lt. Gen. Depinder Singh) என்னும் புத்தகமுமாகும். இராணுவ நடவடிக்கைகள் பற்றி இந்த இரு புத்தகங்களிலும் கூறியிருக்கின்றனர். இந்த நேரத்திலாவது அதிக விலை கொடுத்த இந்தியா அரசியல் ரீதியான பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பற்றியும் அவர்களின் குணாதிசயங் கள்பற்றியும் ஒருவரும் போலிநம்பிக்கைகளை வைத்திருக்கக்கூ டாது. விடுதலைப்புலிகளுக்கு எத்தனையோமுறை அரசியல்வாய்ப் புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ் வியக்கம் தன்னை ஒரு இராணுவ இயக்கமாகக் காட்டிக்கொண்

டதோடல்லாமல், சிங்களவரினதோ, தமிழரினதோ, அல்லது முஸ்லிம்களினதோ அல்லது வேறெவரினதோ மனிதப் பண்பு களுக்கு மதிப்புக்கொடாது திகழ்ந்துவருகின்றது. அத்துடன் மக் களின் நலன்களுக்கோ, சனநாயக மரபுகளுக்கோ மதிப்புக் கொடுக்கத் தவறியதோடல்லாமல் மாற்றமுடியாத தவறான கணிப் புகளிலும் இறங்கியுள்ளது.

**இறுதியான மூன்று தவறான கணிப்புகள் பின்வருமாறு:**

1) சனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களுடன் நடத்திவந்த நல்லிணக்கப் பேச்சுவார்த்தையை 1990ஆண்டு யூன் மாதத்தில் முறித்துக்கொண்டது.

இப்பேச்சுவார்த்தை காலத்தில் தனக்கு வேண்டிய காலநேரத்தையும் பணம், ஆயுதம், தொலைத் தொடர்பு சாதனங் கள் ஆகியவற்றைச் சேகரித்ததுடன் இந்திய அமைதிகாக்கும் படையுடனான நடவடிக்கைகளின்போது தான் இழந்த பாரிய இழப்புகளை ஈடுசெய்யவும் அதிக எண்ணிக்கையான போராளி களைச் சேர்க்கவும் வாய்ப்பு இருந்தன.

2) திறமையாக திட்டமிட்டு சிறிபெரம்புத்தூரில் 21-5-91ஆம் நாளன்று ஈனத்தனமாகத் திரு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது.

3) இராணுவ ரீதியாகவும், மனோதத்துவரீதியிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியதும், இலங்கை இராணுவத்துக்கு உறுதியையும் பலத்தையும் கொடுத்த ஆனையிறவுச்சமர்.

இதிலிருந்து சிறிலங்கா இராணுவம் தனது நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடித்துவிடும் என யாரும் முடிவுக்குவரமுடியாது. சில வல்லுனர்கள் புதிய இடங்களில் நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டுமென்று நம்புகின்றனர். அதாவது இராணுவம் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்து விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்தி அவர்களை காடுகளுக்குள் அனுப்ப வகைசெய்வது நீண் டகாலமாகக் கரந்தடிப் போருக்கு வழிவகுக்கும். இப்படிச் செய் வது முன்னர் நிகழ்ந்தவையே மீண்டும் நடைபெறச் செய்வதற்கு ஒப்பாகும். இது நடந்துமுடித்த நிகழ்ச்சி மீண்டும் நடப்பது போலாகும். பொதுமக்களின் அழிவுகள் அவ்வளவு அதிகமாக இருக்காவிட்டால் யாழ்ப்பாணத்தின் மீது எடுக்கப்படும்நடவடிக்கை யைப் பற்றி இந்தியா அலட்டிக்கொள்ளமாட்டாது. ★

# யாழ். குடாநாட்டின்மீதான தாக்குதல் எந்நேரமும் நடக்கலாம்

றோகண் குணசேகரா -ஐலண்ட் 31-5-92

சென்ற வாரம் ஒரே நேரத்தில் பலமுறைகளில் விடுதலைப் புலிகளுக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட முப்படைத் தாக்குதல்கள், யாழ். குடாநாட்டின் மீது அடுத்து மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கைக்கான ஒத்திகை போல் தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் கடற்படைப்பிரிவின் உள்ளகக் கட்டமைப்பை அழித்து அவர்களின் கடல்மார்க்கத் தொடர்புகளைத் துண்டிப்பதுடன், இத்தாக்குதல் நடவடிக்கைக்கு எதிராகப் புலிகள் மேற்கொள்ளும் எதிர் நடவடிக்கைகளைப் பரீட்சித்துப் பார்பதோடு, பாரிய முப்படைத்தாக்குதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு இருக்கும் திறமையும் அறிந்து கொள்வதற்காகவே இத் தாக்குதல் திட்டமிடப்பட்டது.

இம்முப்படைத் தாக்குதல்கள் வியாழனன்று காலை சூரிய உதயத்தின் போது தொடங்கின. இத் தரை, வான், கடற்படைத் தாக்குதல்கள், கடற்புலிகளின் முக்கிய தளங்களின் இருப்பிடமான யாழ்ப்பாணத்தின் வடகரையிலுள்ள தொண்டமனாறு தொடக்கம் பருத்தித்துறை வரையிலான நிலப்பரப்பிலும், பலாலி இராணுவத்தினர் கவசவாகனங்கள் சகிதம் பலாலியிலிருந்து அதன் கிழக்குப்பகுதியிலும், அதே போன்று முல்லைத் தீவிலிருந்து அலம்பில், ஒட்டிசுட்டான் பகுதியிலும், தாண்டிக்குளப் பகுதியிலும், வவுனியாவின் வடபகுதியிலும், மன்னாரிலும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கைகளில் சில ஏமாற்றும் நடவடிக்கைகளாகும்.

இத்தாக்குதல் திட்டங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தும், இந்த நடவடிக்கைக்கு முன்னதாக பலத்த இராணுவ நடமாட்டம் நடைபெறுவதை உன்னிப்பாகக் கவனித்த விடு

தலைப்புலிகள் ஏதோ பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படப்போகின்றதென்பதை அறிந்திருந்தார்களாயினும் இந்த நடவடிக்கைகள் அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. விடுதலைப்புலிகள் பதில் நடவடிக்கைகளை கிழக்குக் கரையோரப் பகுதிகளில் குடிமக்கள் வாழும் நிலப்பரப்புக்களிலும், மலைநாட்டிலும் மேற்கொள்ளவிருக்கின்றார்களென்றும், அத்துடன் கொழும்பில்குண்டு வெடிப்புச்சம்பவங்களில் ஈடுபடப்போகின்றார்களென்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயமாகச் சில நாட்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தன்னுடைய இராணுவத் தளபதிகளை அழைத்து ஒரு இரகசிய மாநாட்டை நடத்தி அவசரத் திட்டத்தை தயாரித்ததாக அறியவந்துள்ளது.

வான்படையினதும், கடற்படையினதும் உதவியுடன் 15 பட்டாலியன் படையணியைக் கொண்ட காலாட்படையணியினர் இராணுவவாகனங்கள், எறிகணை வீச்சுவாகனங்கள், பீரங்கிகள், பொறியியல் மற்றும் சமிக்கைப் பிரிவினர் சகிதம் இத்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதில் அனேகமான காலாட்படை வீரர்கள் முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டனர். இராணுவத்தில் தற்போதிருக்கும் 80,000 காலாட்படை வீரர்களில் அரைவாசிப்பேர் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சென்ற ஆண்டு நடத்திய அதி தீவிர தாக்குதல்களின்போது திறமைவாய்ந்த முன்னணிக் காலாட்படை பட்டாலியன் வீரர்களில் அனேகமானோர் காயமடைந்துள்ளனர். இதனால் சில பட்டாலியன்கள் அரைப்பலத்துடனேயே உள்ளனர். விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் அகப்பட்டுக் கால்களை இழந்த 600 காலாட்படை வீரர்கள் இப்போது இராணுவத்தில் இருக்கின்றனர்.

பலாலி முன்னணிக்காவல் அரணிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்ட படையினரும், முல்லைத்தீவு வெளிக்காவல் அரணிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினரும் இராணுவத்துக்கெனப் புதிதாக வாங்கப்பட்ட ரீ 55 ரக போர்த் தாங்கிகளை முதன் முதலாகத் தங்கள் நடவடிக்கைகளின் போது பயன்படுத்தியுள்ளனர். விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களினதும், மற்றும் பல விடுதலைப்புலிகளின் தலைவர்களினதும் சொந்த இடமானதும் விடுதலைப் புலிகளின் கடற்படைத் தலைமையகம் அமைந்திருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இட

மான வல்வெட்டித்துறைக்குள் முன்னேறிவரும் இராணுவம் நுழைந்துவிடும் என அஞ்சிய விடுதலைப் புலிகள் தொண்டமனாற்றுப் பாலத்தைக் குண்டுவைத்துத் தகர்த்தினர்.

இந்தியக் கடற்படையும், சிறிலங்கா கடற்படையும் பாக் குநீரிணையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால், விடுதலைப் புலிகளின் கடல்மார்க்கத் தொடர்புகள் ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகி, அவர்கள் தங்கள் போர் தளபாடங்களுக்குத் தங்கள் கைவசமுள்ளவற்றிலேயே தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களின் கையிருப்பில் கணிசமான அளவு ஆயுதங்கள் இருப்பதுபோல் தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் கரையோர எதிரொலிச் சமிக்ஞை (Radar) நிலையங்கள், தொலை தொடர்பு சாதன நிலையங்கள், கண்ணிவெடி மற்றும் ஆயுதங்கள், தயாரிக்கும் தொழிலகங்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவை எல்லாம் வான்படையினரது குண்டு வீச்சுத் தாக்குதலுக்கும், இராணுவத்தினது எறிகணைத் தாக்குதலுக்கும், கடற்படையினது பீரங்கித் தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டன. வானூர்தியிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் உள்ளூர் முகவர்கள் அளித்த புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மாதகலிலுள்ள கடற்புலிகளின் தளமும் முப்படைகளின் பெரும் தாக்குதலுக்கு உள்ளானது.

கடத்தல்காரர்களின் முக்கிய நகரமாக விளங்கும் வல்வெட்டித்துறை நிலப்பரப்பில் தாங்கிகள் செல்லமுடியும். யாழ்ப்பாணத்தைப் போன்று சிறிய நகரமாகத் தோற்றமளித்தாலும் கடந்த சில ஆண்டுகளாக நடந்துவரும் சண்டைகளினால் இந்நகரத்திலுள்ள பெரும்பாலான கட்டிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்தப்பாதை வழியாகப் பருத்தித்துறைக்கு இராணுவம் செல்லுமாயின். பலாலியிலிருந்து அதனுடன் தொடர்புகளைத் தொடர்ந்து வைத்திருக்க மேலதிக இராணுவ வீரர்கள் தேவைப்படுவர். இந்த தொடர்புகளைத். தொடர்ந்து வைத்திருப்பதற்காக இப்பாதை ஓரம் அமைக்கப்படும் ஒவ்வொரு காவலரணும் மற்றக் காவலரணில் உள்ளவர்களின் கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் அமைக்கப்படவேண்டும். ஏனெனில் விடுதலைப் புலிகள் இரகசியமாக நுளைந்து இரவு வேளைகளில் திடீர் அதிரடித் தாக்குதல்களை நடத்துவதில் வல்லவர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஃ143CC



சென்ற ஆண்டு பல தடவைகளில் இராணுவம் விடுதலைப்புலிகளுடைய கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்புகளில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளைகளில் அவர்கள் அதிகளவினராகப் படையினரை எதிர்த்தபோது அவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால், முப்படைகளின் வான், பீரங்கி தாங்கித் தாக்குதகளை வெளியான இடங்களில் எதிர்கொள்ள மாட்டார்கள் என ஆரம்ப அறிக்கைகள் கூறுகின்றன. இந்த ஆண்டு முதற்பகுதியில் விடுதலைபுலிகளினால் தாங்கி எதிர்ப்புப் படைப் பிரிவினால் நடத்தப்படும் ஆர். பீ. ஜீ. தாக்குதல்களுக்கு இராணுவ வாகனங்கள் ஈடுகொடுக்கமுடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் காலாட்படையினர் கனரக ஆயுதங்கள் சகிதம் எப்படி முன்னேறுவர் என்பதைப் பார்ப்பதும் இந்நடவடிக்கைகளின் ஒரு நோக்கமாகும். அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட முப்படைத் தளபதிகளைக் கொண்ட கூட்டுப்படை தலைமையகம், முப்படைகளும் இணைந்த பாரிய இராணுவ நடவடிக்கையை எப்படி நடத்தும் என்பதை அறிந்துகொள்வதும் விடுதலைப் புலிகளின் பதில் நடவடிக்கைகளை அறிந்து கொள்வதும் இந்நடவடிக்கைகளின் நோக்கமாக இருந்தது.

ஒரு போர் முளையிலிருந்து இன்னொரு போர்முனைக்கு விடுதலைப் புலிகள் தங்களது போர்வீரர்களை அனுப்புவதைத் தடைசெய்வதை நோக்கமாக வைத்தே யாழ்பாணம். முல்லைத் தீவு, வவுனியா மற்றும் மன்னார் நிலப்பரப்புக்களில் பலமுறைகளில் இராணுவ ஒரே நேரத்தில் தாக்குதல்களை மேற்கொண்டது. இத்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பாக இருப்பகுதிகளுக்கு நேரடியாக வந்த படைத்தளபதிகள், சமர்புரியும் இடத்தில் பணியாற்றும் படைத்தளபதிகளுடன் சேர்ந்து இத்திட்டத்தைத் தயாரித்தனர். இதிலிருந்து இராணுவம் தனது குறைந்தளவு வளங்களுடன் எப்படிச் செயல்படுகின்றதென்பதை அறிந்து கொள்ளமுடியும். யாழப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற இராணுவத்தின் முக்கிய குறிக்கோளை இந்நடவடிக்கைகளெல்லாம் இலகுவாக்கும். இந்தச் சமரில் இராணுவம் தோல்வியை தழுவுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கும்.

★ ★ ★

86816

அவைகள் குருடாக
இருக்கவேண்டும்
என்று மனது நினைத்து விட்டால்
கண்கள் பார்ப்பதில்லை.
பூமியை இருள்
மறைப்பதுபோல்
ஆசை உண்மைகளை
மறைத்து விடுகிறது.

—செனக்கா

★ ★ ★ ★

மனிதனுக்கும் நாய்க்கும்
உள்ள அடிப்படையான
வித்தியாசம் என்ன?
பசியால் வாடும் நாயை
பிடித்து உணவளித்து
ராஜ போகமாக
வளர்க்கும் போது அது
உன்னைக் கடிக்காது.

—மார்க் ட்வைன்

★ ★ ★ ★

# தமிழீழப் பூமிதனிலேது தொல்லை

### பல்லவி

ஆழிக்கடலெங்கும் சோழமகராஜன்
ஆட்சி புரிந்தானே அன்று - தமிழ்
ஈழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன்
ஏறி நடக்கின்றான் இன்று.

### அநுபல்லவி

காலை விடிந்தது தென்று பாடு
சங்க காலம் திரும்பியது ஆடு

### சரணங்கள்

எட்டுத் திசையாவும் தொட்டுப் பெருஞ் சோழன்
ஏறிக் கடல் வென்ற துண்டு - அவன்
விட்ட இடமெங்கும் வென்று வருகின்றான்
வேங்கைக் கடல் வீரன் இன்று.

எங்கள் கடல் மீதில் எதிரி வருகின்ற
இன்னல் இனிமேலும் இல்லை - புலி
பொங்கி எழுந்திட்ட தங்கத் தமிழீழப்
பூமிதனிலேது தொல்லை.

கடலிலென்றாலும் தரையிலென்றாலும்
காவல் இருக்கின்ற தம்பி - எதிர்ப்
படைகள் வரும் போது பாயும் புலிவீரன்
பகையை முடிப்பானே பொங்கி,

வலிமைதரு மெங்கள் தலைவன் வழிதன்னில்
வங்கக் கடல் நின்று பாடும் - கடற்
புலிகள் எழுகின்ற போர்கள் தனில் வெற்றி
பெற்றுத் தமிழீழம் ஆடும்.

-புதுவை இரத்தினதுரை

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.